விலை: 30.00
பக்கங்கள் : பதினாறு + 16
Website : www.valampurii.lk
Viber : 076 636 3378

# வலம்புரி
## Valampurii

E-mail: valampurii@yahoo.com,
valampurii@sltnet.lk

கல்யாண மாலை
[சர்வதேச திருமண சேவை]
T.P: 021 720 1005

இல.144,
பிறவுண் வீதி,
யாழ்ப்பாணம்.
Email:Kalyanamalai.jaffna@gmail.com
பதிவுக்கட்டணம்
1000/= + 300/= மட்டுமே

சங்கு 22 வள்ளுவர் ஆண்டு 2052 தை 04 ஞாயிற்றுக்கிழமை (17.01.2021) தொலைபேசி 222 3378, 222 7829 ஒலி 029

# சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் இலங்கையை பாரப்படுத்துங்கள்

## ஐ.நா உறுப்பு நாடுகளுக்கு தமிழ்த் தரப்பு கூட்டாக கடிதம்



- **பொறுப்புக்கூறல் சம்பந்தமாக பலமான நடவடிக்கை எடுப்பதற்கான உயரிய தளங்களுக்கு இலங்கை விவகாரம் கொண்டு செல்லப்படல் வேண்டும்.**
- **இலங்கை தொடர்பில் ஆதாரங்களைத் தேடும் பொறிமுறை ஒன்றை ஐ.நா சபை நியமிக்க வேண்டும்.**

"இலங்கையை இனப்படுகொலை, மனிதாபிமானத்துக்கு எதிரான குற்றங்கள் மற்றும் போர்க் குற்றங்கள் உள்ளிட்ட குற்றங்களை விசாரிப்பதற்காக சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்துக்கும் வேறு பொருத்தமானதும் செயற்படுத்தக் கூடியதுமான சர்வதேச பொறுப்புக்கூறல் பொறிமுறைகளுக்கும் பாரப்படுத்துவதற்கான நடவடிக்கைகளை ஐ. நா. பொதுச் சபை, ஐ. நா. பாதுகாப்புச் சபை போன்றவை எடுக்க வேண்டும் என்று ஐ.நா. மனித உரிமைகள் சபையின் 46ஆவது கூட்டத் தொடரில் சமர்ப்பிக்கப்படவுள்ள புதிய தீர்மானத்தில் உறுப்பு நாடுகள் வலியுறுத்த வேண்டும்."

இவ்வாறு வலியுறுத்தி ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் சபையின் 47 உறுப்பு நாடுகளின் தூதரகங்களுக்கு இலங்கை பாராளுமன்றில் அங்கம் வகிக்கும் மூன்று தமிழ்த் தேசியக் 15

# வடக்கில் 10 பேருக்கு கொரோனா உறுதி

(யாழ்ப்பாணம்)

யாழ். ஆய்வுகூடங்களில் மேற்கொள்ளப்பட்ட கொரோனா பரிசோதனையில் வடக்கில் நேற்றும் 10 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வட மாகாணத்திற் 15

# கொரோனா அச்சம் காரணமாக பாராளுமன்றம் பூட்டப்படுமா?

## இதுவரை தீர்மானம் இல்லை

### சபாநாயகர் மகிந்த யாப்பா

(கொழும்பு)

பாராளுமன்றத்தை மூடுவதற்கு எந்தத் தீர்மானமும் இதுவரை எடுக்கவில்லை என்று சபாநாயகர் மகிந்த யாப்பா அபேவர்த்தன 15

# ஜனநாயகம், மனித உரிமைகளை ஜனாதிபதி மதிக்க வேண்டும்

## சர்வாதிகார போக்கில் பயணிக்கக்கூடாது

### பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார



(கொழும்பு)

நாட்டின் ஜனாதிபதியானவர் ஜனநாயகம், மனித உரிமைகள் என்பவற்றை மதிப்பவராக இருக்க வேண்டும் என பாராளுமன்ற உறுப் 15

### மக்களின் சிரமத்தை குறைக்கவே

# சுகாதார நடைமுறைகள் தளர்த்தப்பட்டுள்ளது

## பொறுப்புணர்ந்து செயற்படுங்கள்

### யாழ்.அரச அதிபர் மகேசன் அறிவுறுத்து

06ஆம் பக்கம் பார்க்க

# அமெரிக்காவின் பயங்கரவாத பட்டியலில் விடுதலைப் புலிகள்

(கொழும்பு)

அமெரிக்க இராஜாங்க திணைக் 15

# கொரோனாத் தொற்றால் மேலும் ஒருவர் மரணம்

## உயிரிழப்பு 256 ஆக உயர்வு

(கொழும்பு)

நாட்டில் கொரோனா தொற்றால் பாதிக்கப்பட்ட மேலும் ஒருவர் உயிரிழந்துள்ளதாக அரசாங்க தகவல் திணைக்களம் தெரிவித்துள் 15

### இலங்கையின் போர்க் குற்றங்களுக்கு

# சர்வதேச சுயாதீன விசாரணை பொறிமுறையை உருவாக்குங்கள்



## பிரிட்டன் பிரதமரிடம் லிபரல் கட்சி கோரிக்கை

03ஆம் பக்கம் பார்க்க

# நாட்டில் நேற்றும் 715 பேருக்கு கொரோனா

(கொழும்பு)

நாட்டில்மேலும்715 பேருக்கு கொரோனா தொற்று உறுதியாகியுள்ளதாக 15

# இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றியே தீருவோம்

## ஐ.தே.க தலைவர் ரணில் சூளுரை

(கொழும்பு)

இலங்கையின் ஆட்சி அதிகாரத்தை மீண்டும் கைப்பற்றியே தீருவோம் என முன்னாள் பிரதமரும், ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவருமான ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதித் தலை 15

# 25ஆம் திகதிக்கு பின் தனியார் கல்வி நிறுவனங்கள் திறக்க அனுமதி

(கொழும்பு)

மேல் மாகாணத்தை தவிர்ந்த நாட்டின் ஏனைய பகுதிகளில் 15

நடுவு நிலை தவறா நன்னெறி காக்கும் உங்கள் நாளிதழ்

## வகுப்பு

ஆங்கிலம் (1 தொடக்கம் 11)
மற்றும் ஸ்கொலர்ஸிப்
பரீட்சைகளுக்கான தனிப்பட்ட
வகுப்புக்கள்.
(Personal Class)

(5280)

**074 105 0596**

## வாடிக்கையாளர் கவனத்திற்கு

யாழ். நகரில் 01.01.2021 முதல் சில்லறை வாணிபமாக இயங்கி வந்த சரவணபவன் பான்சி கவுஸ் 15.01.2021 முதல் மொத்த வியாபாரமாகவும் சில்லறை வியாபாரமாகவும் தரப்படும் என்பதை அறியத் தருகின்றோம்.

(5308)

தகவல் : உரிமையாளர்
**தே. கலைத்தாசன் (கரன்)**
**சரவணபவன் பான்சி கவுஸ்**
26/1, ஜும்மா பள்ளிவாசல் லேன், யாழ்ப்பாணம். 077 468 3354

## வலம்புரி

விளம்பரத் தொடர்புகளுக்கு
**021 221 7603**
**021 567 1532**

## உடல் எடை இலகுவாக கூட வேண்டுமா?

எடை கூட வேண்டுமா?, கணச்சூடா?, பலகீனமா?, ஒட்டிய கன்னங்கள் குண்டுக்கன்னங்களாக மாற வேண்டுமா?, மார்புகூட வேண்டுமா?, உடல் குறைபாடுகளா?

**குளிசை பால்மா என்பன விற்பனைக்குண்டு**

## கருமை நிறம் நீங்க வேண்டுமா?

கருமை நிறம், கரும்புள்ளி, பருக்கள், பருவந்த அடையாளம், உதட்டுக்கருமை, கை, கால் கருமை நீக்கும் கிறீம், காய்கள் (பாலுண்ணி) அகற்றும் கிறீம், முகத்தில் உள்ள தேவையற்ற ரோமம் அகற்றும் கிறீம் என்பன விற்பனைக்கு உண்டு.

**பாவித்து 15 நாட்களில் அற்புதமான அழகைக் காண்பீர்கள்**

(5302)

077 210 6155 221, நாவலர் றோட், யாழ்ப்பாணம்.

A/L பெறுபேறுகளை
எதிர்பார்த்திருக்கும் மாணவியரே!
வெளிநாடுகளுக்குச் செல்ல இருக்கும் மங்கையரே!!
மற்றும் ஆர்வமுள்ள மகளிரே!!!

**உங்களுக்கான 3 மாதகால பயன்மிகு பயிற்சிகள் 28.01.2021 தைப்பூசத்தன்று காலை 9.30 மணிக்கு ஆரம்பமாகவுள்ளன!**

கேக் ஐசிங் · கூந்தல் அலங்காரம் · Make up · Facial · பலவிதமான சேலை அணியும் முறைகள் · சிற்றுண்டிகள் மற்றும் உள்நாட்டு வெளிநாட்டு உணவுகள் தயாரித்தல்

- சனி - ஞாயிறு அல்லது கிழமைநாள் பிரிவுகளில் இணையலாம்.
- பயிற்சிகளின் முடிவில் சான்றிதழ் வழங்கப்படும்.
- மேற்படி பயிற்சிகளுக்கு வயதெல்லை கிடையாது.
- இம்முறை A/L பரீட்சைக்குத் தோற்றிய மாணவிகளுக்குக் கட்டணத்தில் கழிவு வழங்கப்படும்.

மேலும் விபரங்களுக்கு நேரில் வரவும்.

**யாழ். கலாலயா பயிற்சியகம்**

இலங்கையின் மூன்றாம் நிலைக் கல்வி தொழிற்கல்வி ஆணையத்தால் (TVEC) அங்கீகரிக்கப்பட்டது.

**விக்ரோறியா வீதி, யாழ்ப்பாணம்.**
(யாழ். போதனா வைத்தியசாலையின் பின் வீதி)

(C-1176)


சைவ பரிபாலன சபைக் குடும்பத்தின்
இதயம் நெகிழ்ந்த

## கண்ணீர் அஞ்சலி



சைவ பரிபாலன சபை வளர்ச்சியில்
பெரும் பங்காற்றிய

**அமரர் தியாகராசா மாணிக்கவாசகர்**

(முன்னாள் செயலாளர், பரீட்சை உப செயலாளர்)

தோற்றம் 31.10.1930 | மறைவு 16.01.2021

அவர்களுக்கு எமது கண்ணீர் பூக்களைக் காணிக்கையாக்குகின்றோம். அன்னாரின் ஆத்மா சாந்தியடைய சிதம்பர நடராஜரை வேண்டுகின்றோம்.

ஓம் சாந்தி !

(5307)

சைவ பரிபாலன சபையினர்
இல.66, கல்லூரி வீதி, நீராவியடி, யாழ்ப்பாணம்.

## மரண அறிவித்தல்



### திருமதி நல்லம்மா கந்தையா

பிறப்பு 15.06.1938 இறப்பு 15.01.2021

துணைவி, வட்டுக்கோட்டையைப் பிறப்பிடமாகவும் அளவெட்டி தெற்கை வசிப்பிடமாகவும் கொண்ட திருமதி நல்லம்மா கந்தையா நேற்று முன்தினம் (15.01.2021) வெள்ளிக்கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் மாரிமுத்து கந்தையாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்றவர்களான நாகமுத்து - சின்னப்பிள்ளை தம்பதிகளின் அன்புப் புதல்வியும் காலஞ்சென்றவர்களான மாரிமுத்து - பொன்னம்மா தம்பதியரின் அன்பு மருமகளும் யோகானந்தராசா (சுவிஸ்), கருணானந்தராசா (சுவிஸ்), ஜெயராணி, கமலராணி (சாந்தி - அகில இலங்கை சமாதான நீதவான்), தயானந்தராசா (இலண்டன்) ஆகியோரது அன்புத் தாயாரும் தேவமலர் (சுவிஸ்), சிவமலர் (சுவிஸ்), சந்திரசேகரம் (ஓய்வுநிலை மேற்பார்வையாளர், போதனா வைத்தியசாலை - யாழ்ப்பாணம், ஆதார வைத்தியசாலை-தெல்லிப்பழை), குணசிங்கம் (கிராமசேவகர் - உதயநகர் கிழக்கு, கிளிநொச்சி ), ராஜ்நிதி (இலண்டன்) ஆகியோரது அன்பு மாமியாரும் காலஞ்சென்றவர்களான வீரசிங்கம், சிவகுரு, பூரணம், துரையம்மா, கோபாலசிங்கம் மற்றும் பொன்னையா, கண்மணி, பூமணி, தவபாலசிங்கம் (லண்டன்), குணசிங்கம் ஆகியோரின் அன்புச் சகோதரியும் கௌரி (சுவிஸ்), கௌசிகன் (சுவிஸ்), நிலானி (சுவிஸ்), நிர்மலன் (சுவிஸ்), மதுராங்கன் (A.M Studio, சுன்னாகம்), துவாரகா, சாதுர்ஜன் (சுவிஸ்), தர்மிகா, நிரூபன், பிரியங்கன், தர்சிகன், திஷாஜினி, நியானி (லண்டன்), நியான் (லண்டன்), நிக்யன் (லண்டன்) ஆகியோரது பாசமிகு பேர்த்தியாருமாவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.01.2021) ஞாயிற்றுக் கிழமை முற்பகல் 9.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைகளுக்காக முற்பகல் 11.00 மணியளவில் அளவெட்டி கொட்டுப்பனை இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை, உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.


(5301)

அருவம்பற்று,
அளவெட்டி தெற்கு.

தகவல்:-
குடும்பத்தினர்

## மரண அறிவித்தல்

தோற்றம் 14 – 01 – 1942



மறைவு 15 – 01 – 2021

### நவரத்தினம் பாலசுப்பிரமணியம்
(சின்னண்ணை)

அம்பலவாணர் வீதி, உடுவில் கிழக்கு, சுன்னாகத்தைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட நவரத்தினம் பாலசுப்பிரமணியம் நேற்று முன்தினம் (15.01.2021) வெள்ளிக்கிழமை இறைபதமடைந்தார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான நவரத்தினம் - ஆச்சிப்பிள்ளை தம்பதியரின் அன்பு மகனும் காலஞ்சென்றவர்களான தம்பித்துரை, செல்வராணி, இராசம்மா மற்றும் பாக்கியம், தங்கரத்தினம், பறுவதம் ஆகியோரின் அன்புச் சகோதரரும் காலஞ்சென்றவர்களான கந்தையா - தெய்வானப்பிள்ளை தம்பதியரின் அன்பு மருமகனும் சிவநேசத்தின் அன்புக் கணவரும் தனுஜா (கனடா), சர்மிளா (ஆசிரியை - யா/ இராமநாதன் கல்லூரி ), பிரசாந்தன் (தொழில்நுட்பவியலாளர், Seirra Telecom) ஆகியோரின் அன்புத் தந்தையும் நந்தகுமாரன் (பொறியியலாளர் - கனடா), சத்தியசீலன் (சிரேஷ்ட உதவிச் செயலாளர், அரச சேவைகள், மாகாண சபைகள் மற்றும் உள்ளூராட்சி அமைச்சு ) ஆகியோரின் அன்பு மாமனாரும் ஆருஷி, அக்ஸரா, அபிராம், அனிகா ஆகியோரின் அன்பு பேரனும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.01.2021) ஞாயிற்றுக் கிழமை காலை 8.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் பூவோடை இந்து மயானத்தில் தகனம் செய்யப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(C-1182)

அம்பலவாணர் வீதி,
உடுவில் கிழக்கு. சுன்னாகம்.

தகவல்:-
குடும்பத்தினர்

# இலங்கையில் நடைபெற்ற போர்க்குற்றங்களுக்கு சர்வதேச சுயாதீன பொறிமுறையை உருவாக்குங்கள்

## பிரிட்டன் பிரதமரிடம் லிபரல் கட்சி கோரிக்கை

**(லண்டன்)**

**இலங்கையில் தமிழர்களுக்கு எதிராக நிகழும் கடுமையான சர்வதேச குற்றங்களை விசாரித்து வழக்குத் தொடர ஏதுவாக ஒரு சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறையை உருவாக்குமாறு பிரிட்டன் பிரதமரிடம் அந்நாட்டு லிபரல் டெமோக்ரடிக் கட்சியின் தலைவர் எட் டேவி கோரிக்கை விடுத்துள்ளார்.**



11 ஆண்டுகளுக்கு முன்னர் நிறைவடைந்த ஆயுதப் போராட்டத்தின்போது இடம்பெற்றதாகக் கூறப்படும் போர்க்குற்றங்களை விசாரிப்பதற்கான சர்வதேச பொறிமுறைகளை ஏற்க இலங்கை தொடர்ச்சியாக மறுப்புத் தெரிவித்து வருகிறது.

அத்துடன், ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்களையும் ஏற்க மறுத்து அதிலிருந்து இலங்கை விலகியுள்ளதாகவும் எட்டேவி வெளியிட்டுள்ள அறிக்கையில் சுட்டிக்காட்டி கவலை தெரிவித்துள்ளார்.

இவ்வாறான நிலையில் சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறை ஒன்றின் மூலமே தமிழ் இனப்படுகொலையில் ஈடுபட்டவர்களை பொறுப்புக்கூறச் செய்ய முடியும்.

இலங்கையில் அர்த்தமுள்ள நல்லிணக்கத்திற்கான ஒரு படியாகவும் இந்த விசாரணை அமையும் எனவும் அவர் தெரிவித்தார்.

சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறை ஒன்றை உருவாக்குமாறு நூற்றுக்கும் மேற்பட்ட இங்கிலாந்து தமிழ் சமூகங்கள் விடுத்துள்ள அழைப்பை அடுத்து டேவி இவ்வாறான கோரிக்கையை முன் வைத்துள்ளார்.

டேவியின் அழைப்புக்கு சாம் டாரி மற்றும் சியோபைன் மெக்டோனாக் உள்ளிட்ட பல பிரிட்டிஷ் எம்.பிக்கள் ஆதரவு தெரிவித்தனர்.

முன்னொருபோதும் இல்லாத வகையில் தமிழ் தரப்பைச் சேர்ந்த முக்கிய கட்சிகள் ஒன்றிணைந்து அரசாங்கத்தை சர்வதேச குற்றவியல் நீதிமன்றத்தில் (ICC) நிறுத்த வேண்டும் என சர்வதேச சமூகத்துக்கு பரிந்துரைத்துள்ளனர். இலங்கையின் பொறுப்புக்கூறல் பொறிமுறையை உறுதி செய்யுமாறும் அவர்கள் அழைப்பு விடுத்துள்ள நிலையிலேயே சர்வதேச சுயாதீன விசாரணைப் பொறிமுறையை (IIM) உருவாக்குமாறு பிரிட்டன் பிரிதமரிடம் அந்நாட்டு லிபரல் டெமோக்ரடிக் கட்சியின் தலைவர் எட் டேவி அழைப்பு விடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## ஈழத்தமிழ் மருத்துவருக்கு ஸ்கொட்லாந்தின் மனிதநேயவிருது

(ஸ்கொட்லாந்து)

ஸ்கொட்லாந்தின் தேசிய கவிஞர் றொபேட் வென்ஸ் பெயரில் ஆண்டு தோறும் வழங்கப்படும் மனிதநேய விருதிற்கு இலங்கையை சேர்ந்த தமிழ் வைத்தியர் வரதராஜா துரைராஜா உட்பட மூவர் இம்முறை பரிந்துரைக்கப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது.

இலங்கையில் இறுதிப்போர் நடைபெற்ற காலத்தில் முள்ளிவாய்க்காலில் மூன்றரை இலட்சம் தமிழ் மக்கள் சுற்றிவளைக்கப்பட்டு இராணுவத்தின் கோரத் தாக்குதலுக்குள்ளான போது, எந்த வித வசதியுமில்லாத நிலையிலும் உயிரை பொருட்படுத்தாமல் மருத்துவ சேவையாற்றி பலரது உயிர்களை காப்பாற்றியவர் வைத்தியர் வரதராஜா துரைராஜா.

மேலும் முள்ளிவாய்க்கால் தாக்குதல் குறித்து இங்கிலாந்தில் நடந்த நிகழ்ச்சிகளிலும், கனடா பாராளுமன்ற உறுப்பினர்களிடம் விளக்கிக் கூறி, எத்தகைய அவலம் நடைபெற்றதென்பதை உலகத்திற்கு அவர் எடுத்துரைத்தார்.

இந்நிலையிலேயே தற்போது அமெரிக்காவில் பணியாற்றிவரும் வைத்தியர் வரதராஜாவின் பெயர் றொபேட் வென்ஸ் மனிதநேய விருதிற்கு பரிந்துரைக்கப்பட்டுள்ளது.



இம்மாத கடைசியில் விருது அறிவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

## பாடசாலை போக்குவரத்துச் சேவை சாரதிகளுக்கும் அன்டிஜன் பரிசோதனை

### பிரதிப் பொலிஸ்மா அதிபர் அறிவிப்பு

(கொழும்பு)

பாடசாலை போக்குவரத்து சேவைகளில் ஈடுபடவுள்ள வாகன சாரதிகளுக்கும் உதவியாளர்களுக்கும் துரித அன்டிஜன் பரிசோதனை மேற்கொள்ளப்படவுள்ளதாக பொலிஸ் பேச்சளர் பிரதி பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

புலனாய்வுப் பிரிவினருக்கு கிடைக்கப்பெற்றுள்ள தகவல்களுக்கு அமைய பாடசாலை போக்குவரத்து நடவடிக்கைகளில் ஈடுபடும் பேருந்துகள் உள்ளிட்ட வாகனங்களில் பாதுகாப்பு நடவடிக்கைகள் கடைப்பிடிக்கப்படுவதில்லை எனத் தெரியவந்துள்ளது.

குறிப்பாக முகக்கவசம் அணிதல் மற்றும் சமூக இடைவெளியை பேணுதல் உள்ளிட்ட சுகாதார வழிமுறைகள் பின்பற்றப் படுவதில்லை. இது தொடர்பில் விசேட அவதானம் செலுத்தப்பட்டுள்ளது. இது குறித்து போக்குவரத்து பொலிஸாருக்கு அறிவுறுத்தப்பட்டுள்ளது.

அவ்வாறு சுகாதார வழிமுறைகளை பேணாதவர்களுக்கு எதிராக சட்டநடவடிக்கை மேற்கொள்ளுமாறு அறிவுறுத்தப்பட்டுள்ளதாகவும் பொலிஸ் பேச்சாளர் பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண குறிப்பிட்டார்.

இதேவேளை, தற்போது நாடு முழுவதும் ஒரு இலட்சத்து 16 ஆயிரம் பேர் சுயதனிமைப்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்துள்ளார். (நி-4)

### நீதிமன்ற அவமதிப்பு வழக்கு விவகாரம்

## பாராளுமன்ற உறுப்புரிமை இல்லாமல் போகும் என்பதற்கு தெளிவான விளக்கம் எதுவுமில்லை

### நளின் பண்டார தெரிவிப்பு

(கொழும்பு)

நீதிமன்ற அவமதிப்பு வழக்கு தொடர்பில் சிறைத்தண்டனைக்கு உள்ளாகும் பாராளுமன்ற உறுப்பினரின் பாராளுமன்ற உறுப்புரிமை இல்லாமல் போகும் என்பது பற்றி அரசியலமைப்பில் தெளிவான விளக்கங்கள் எதுவும் இல்லை.

எனவே சட்டத்தரணிகள் ஊடாக உரிய சட்ட ஆலோசனையைப் பெற்று ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்புரிமையை தொடர்ந்தும் தக்க வைத்துக் கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி நடவடிக்கை எடுக்கும் என்று பாராளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்தார்.



கொழும்பிலுள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நேற்று சனிக்கிழமை நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் இதனைத் தெரிவித்த அவர் மேலும் தெரிவிக்கையில்,

ரஞ்சன் ராமநாயக்கவின் பாராளுமன்ற உறுப்புரிமை தொடர்பில் தெளிவின்மை காணப்படுகிறது.

எனவே சட்டத்தரணிகளுடன் ஆலோசித்து இது குறித்து நியாயமான தீர்வொன்றை பெற்றுக் கொள்ள ஐக்கிய மக்கள் சக்தி உரிய நடவடிக்கைகளை முன்னெடுக்கும்.

ஜோன்ஸ்டன் பெர்னாண்டோ உள்ளிட்டோருக்கு எதிராக தாக்கல் செய்யப்பட்ட வழக்குகள் சட்ட ரீதியானதல்ல என்று கூறுகிறார்கள்.

அதனை ஏற்றுக்கொள்ள முடியாது. காரணம் ரஞ்சன் ராமநாயக்கவுக்கு எதிராக எமது ஆட்சிக்காலத்திலேயே வழக்கு தொடரப்பட்டது.

அந்தச் சந்தர்ப்பத்தில் நாம் நினைத்திருந்தால் அவருக்கு எதிராக வழக்குத் தாக்கல் செய்யப்படுவதைத் தவிர்த்திருக்க முடியும் என அவர் தெரிவித்தார். (நி-4)

# மேம்படுத்தப்பட்ட விளையாட்டு கட்டமைப்பு
## SLT - மொபிட்டலினால் அறிமுகம்



தேசிய தகவல் மற்றும் தொடர்பாடல் தொழில்நுட்ப தீர்வுகளை வழங்குவதில் முன்னோடியாகத் திகழும் **SLT-MOBITEL** சர்வதேச கேமிங் மற்றும் விளையாட்டு தொழில்நுட்ப நிறுவனமான **Swarmio Media** உடன் இணைந்து, தமது மேம்படுத்தப்பட்ட **SLTN** கேமிங் மற்றும் விளையாட்டு கட்டமைப்பான **www.slt.lk/esports** அறிமுகம் செய்துள்ளதாக அறிவித்துள்ளது.

இலங்கையிலுள்ள தொலைத்தொடர்பாடல் சேவைகளை வழங்கும் நிறுவனமொன்றின் உரித்தாண்மையின் கீழ் காணப்படும் முதலாவதும் ஒரே கேமிங் மற்றும் விளையாட்டு கட்டமைப்பாக இது அமைந்துள்ளது.

மேம்படுத்தப்பட்ட இந்தக் கட்டமைப்பு 4 பிரதான அம்சங்களைக் கொண்டுள்ளது. கேமர் வாழ்க்கை முறை விளையாட்டு, உள்ளடக்கம், சமூகம் மற்றும் வெகுமதிகள் போன்றனவாகும்.

நாட்டில் காணப்படும் சிறந்தகேமிங்அனுபவத்தை குறைந்த டேட்டா செலவில் வழங்குவதாக இந்தவசதி அமைந்துள்ளது.

குறித்த அறிமுக நிகழ்வு விளையாட்டுத்துறை அமைச்சில் இடம்பெற்றது.

இது தொடர்பில் விளையாட்டுத்துறை அமைச்சர் நாமல் ராஜபக்ஷ தெரிவிக்கையில், உலகளாவிய ரீதியில் காணப்படும் விளையாட்டு நிலவரங்களின் பிரகாரம் இலங்கையை தரமுயர்த்த வேண்டியதன் முக்கியத்துவத்தைப் பற்றிக் குறிப்பிட்டார்.

இளைஞர்களே இந்த நாட்டின் எதிர்காலம். அவர்களின் நிபுணத்துவத்தில் தம்மை மேம்படுத்திக் கொள்ள பங்களிப்பு வழங்குவது மற்றும் திறன்களை மேம்படுத்திக் கொள்ள உதவுவதனூடாக இலங்கைக்கு பயன் பெற்றுக் கொள்ளக்கூடியதாக இருக்கும் எனத் தெரிவித்தார். (4)

# பிக் பேஷ் இருபது-20
## மெல்பேர்ன் ஸ்டார்ஸ் வெற்றி



மெல்பேர்ன் மைதானத்தில் நேற்றுமுன்தினம் வெள்ளிக்கிழமை நடைபெற்ற இப்போட்டியில், மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணியும் அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணியும் மோதின.

இப்போட்டியில் நாணய சுழற்சியில் வெற்றிபெற்ற அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணி, முதலில் களத்தடுப்பை தீர்மானித்தது.

இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி, நிர்ணயிக்கப்பட்ட 20 ஓவர்கள் நிறைவில் 2 விக்கெட்டுகள் இழப்புக்கு 179 ஓட்டங்களை பெற்றுக் கொண்டது.

இதனைத்தொடர்ந்து 180 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்கு களமிறங்கிய அடிலெய்ட் ஸ்ட்ரைக்கர்ஸ் அணி, 14.2 ஓவர்கள் நிறைவில் 68 ஓட்டங்களுக்கு சுருண்டது. இதனால் மெல்பேர்ன் ஸ்டார்ஸ் அணி 111 ஓட்டங்களால் அபார வெற்றி பெற்றது. (4)

# பிரிஸ்பேன் டெஸ்ட்;அவுஸ்திரேலியா முதல் இன்னிங்சில் 369 ரன்களுக்கு ஓல் அவுட்

அவுஸ்திரேலியா- இந்தியா அணிகளுக்கு இடையிலான 4ஆவது மற்றும் கடைசி டெஸ்ட் கிரிக்கெட் போட்டி பிரிஸ்பேனில் நேற்றுமுன்தினம் தொடங்கியது.

இதையடுத்து, 2ஆவது நாள் ஆட்டம் நேற்று தொடங்கியது. சிறப்பாக ஆடிய டிம் பெய்ன் 50 ரன் எடுத்த நிலையில் ஷர்துல் தாகூர் பந்து வீச்சில் அவுட் ஆனார். 47 ரன்கள் எடுத்த நிலையில் கேமரூன் க்ரீனும் வெளியேறினார்.




அடுத்துவந்த பட் கம்மின்ஸ் 2 ரன்னில் வெளியேறினார். ஆனால், 9ஆவது விக்கெட்டுக்கு ஜோடி சேர்ந்த ஸ்டார்க் - நாதன் லயன் ஜோடி கடைசி நேரத்தில் அதிரடியாக விளையாடியது. லயன் 22 பந்துகளில் 24 ரன்கள் எடுத்த நிலையில் வோஷிங்டன் சுந்தர் பந்துவீச்சில் அவுட் ஆனார்.

கடைசி விக்கெட்டிற்கு ஜோடி சேர்ந்த ஸ்டார்க் - ஜாஷ் ஹேசல்வுட் நிதான ஆட்டத்தில் ஈடுபட்டனர்.

இறுதியாக, நடராஜன் பந்துவீச்சில் ஹேசல்வுட் வெளியேறினார்.

இதன்மூலம் அனைத்து விக்கெட்டுகளையும் இழந்த அவுஸ்திரேலிய அணி தனது முதல் இன்னிங்ஸில் 369 ரன்கள் குவித்தது. இந்திய அணி தரப்பில் நடராஜன், ஷர்துல் தாகூர், வோஷிங்டன் சுந்தர் தலா 3 விக்கெட்டுகளை வீழ்த்தினர்.(4)

முதலாம் ஆண்டு
நினைவஞ்சலி



தோற்றம் 17 - 02 - 1936
மறைவு 29 - 01 - 2020

திருமதி தங்கம்மா இரத்தினம்

அன்போடு அரவணைத்து
ஆசையாய் அறிவுரைகள் கூறி – எம்மை
எல்லாம் வாழவைத்த தாயே
என்றும் நீங்காது உம் நினைவுகள்.

சிதம்பர நிலையம்,
துன்னாலை மத்தி, கரவெட்டி.
(C-1180)
குடும்பத்தினர்



104 ஆவது
பிறந்த நாள்
நினைவுகள்
மக்கள் திலகம் தமிழ் நாட்டின்
முன்னாள் முதலமைச்சர்
M.G.இராமச்சந்திரன்
அவர்களை நினைவுகூருகின்றோம்.
(S306)
ப.விஜயகுமார் 27/1, பொன்னப்பா லேன், மானிப்பாய் றோட், யாழ்ப்பாணம்.

# தேசிய பாதுகாப்பிற்கு அச்சுறுத்தல்

# நீதி அமைச்சரை பதவி விலகக்கோரி ஆர்ப்பாட்டம்

## பங்குபற்றுமாறு சிங்களே தேசிய கூட்டு ஒன்றியம் அழைப்பு



**(கொழும்பு)**

**சட்டத்தரணிகளை பிரதான பொலிஸ் அதிகாரிகளாக நியமிப்பதற்கு அமைச்சர் அலி சப்ரியினால் அமைச்சரவைப் பத்திரம் சமர்ப்பிக்கப் பட்டுள்ளமை கற்ற மக்கள் சமூகத்தின் மத்தியில் சந்தேகத்தை ஏற் படுத்தியுள்ளதாகத் தெரிவித்து, தேசிய பாதுகாப்பை கருத்திற் கொண்டு அலி சப்ரியை அமைச்சரவை அமைச்சு பதவியிலிருந்து விலக்குமாறு வலியுறுத்தி இன்று ஞாயிற்றுக்கிழமை சிங்களே தேசிய கூட்டு ஒன்றியத்தினால் கண்டியில் ஆர்ப்பாட்டமொன்று ஏற்பாடு செய்யப்பட்டுள்ளது.**

இது தொடர்பில் அந்த அமைப்பினால் நேற்று சனிக்கிழமை வெளியிடப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கத்தின் மிகவும் முக்கியத்துவமுடைய அமைச்சு பதவியை வகிக்கும் அமைச்சரான அலி சப்ரி இனங்களுக்கிடையில் பேதங்கள் ஏற்படும் வகையில் தெரிவித்த கருத்தானது, 69 இலட்சம் மக்களால் ஆட்சியில் அமர்த்தப்பட்ட அரசாங்கத்தின் அமைச்சரொருவரால் ஜனநாயகமுடைய சமூகத்தில் மக்கள் எதிர்பார்க்காததொரு விடயமாகும்.

ஒரே நாடு : ஒரே சட்டம் என்பது நடைமுறைப்படுத்தப் பட வேண்டும் என்று கூறப்படுவதை ஏற்றுக் கொள்கின்ற போதிலும், சட்டத்தரணிகளை பிரதான பொலிஸ் அதிகாரிகளாக நியமிப்பதற்கு அமைச்சரவையில் அவரால் சமர்ப்பிக்கப்பட்டுள்ள அமைச்சரவைப் பத்திரம் கற்ற மக்கள் சமூகத்தின் மத்தியில் சந்தேகத்தை ஏற்படுத்தியுள்ளது. எனவே அலி சப்ரியை அமைச்சரவை அமைச்சு பதவியிலிருந்து விலக்குமாறு நாம் ஜனாதிபதியிடம் கோரிக்கை விடுக்கின்றோம்.

இதனை வலியுறுத்தி அமைதியான முறையில் கண்டி தலதா மாளிகை சுற்றுவட்டாரத்தில் இன்று ஞாயிற்றுக்கிழமை பிற்பகல் 2 மணியளவில் ஆர்ப்பாட்டமொன்று முன்னெடுக்கப்படவுள்ளது.

ஆர்ப்பாட்டத்தின் நோக்கம் தொடர்பில் அஸ்கிரிய மற்றும் மல்வத்து பீடத்தின் மகா சங்கத்தினருக்கும் இதன் போது தெளிவுபடுத்தப்படும் என அந்த அமைப்பு தெரிவித்தது. (நி-4)

# 283 பேர் நாடு திரும்பினர்

(கொழும்பு)

ஓமான் நாட்டுக்கு தொழில் நிமித்தமாக சென்ற 283 இலங்கையர்கள் நேற்று சனிக்கிழமை காலை 8.30 மணியளவில் கட்டுநாயக்க சர்வதேச விமான நிலையத்தை வந்தடைந்துள்ளனர்.

ஸ்ரீலங்கன் விமான சேவைக்கு சொந்தமான யு.எல் -206 என்ற விமானத்தில் இவர்கள் நாட்டை வந்தடைந்தனர்.

இவ்வாறு வருகைதந்த அனைவரும் பி.சி.ஆர்.பரிசோதனைக்கு உட்படுத்தப்பட்டு, தனிமைப்படுத்தல் நிலையங்களுக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளதாக விமான நிலையத் தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

# தூய்மைப்படுத்துவோம் தூய்மையைப் பேணுவோம்

(யாழ்ப்பாணம்)

"தூய்மைப்படுத்துவோம் தூய்மையைப் பேணுவோம்" செயற்றிட்டம் மாநகர முதல்வரின் பணிப்பின் பேரில் யாழ்.மாநகர சபையின் ஆளுகைக்குட்பட்ட பகுதிகளைத் தூய்மைப்படுத்தல் செயற்றிட்டத்தின் தொடக்க நிகழ்வு இன்று காலை 7 மணியளவில் ஆரம்பமாகும்.

யாழ்.மாநகர சபை தூய்மைப்பணியாளர்கள், மாநகர சபை உறுப்பினர்கள், வர்த்தகர்கள், தன்னார்வத் தொண்டு நிறுவனங்களைச் சேர்ந்த சமூக ஆர்வலர்கள் மற்றும் பொதுமக்களின் பங்கேற்புடன் நடைபெறும்.

இதில் பங்கெடுக்க விரும்புகின்ற சமூக ஆர்வலர்கள் இன்று ஞாயிற்றுக்கிழமை காலை 7 மணியளவில் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் கன்னாதிட்டிச் சந்திக்கு அருகில் உள்ள மாநகர சபையின் பாசார் பிரட்டு மையத்தில் ஒன்றுகூடவும். உரிய சுகாதார நடைமுறைகளுடன் குறித்த தூய்மைப்படுத்தல் செயற்றிட்டம் முன்னெடுக்கப்படும். (5-4-33)

## 487 பேர் குணமடைவு

(கொழும்பு)

நாட்டில் நேற்று சனிக்கிழமை மேலும் 487 கொரோனாத் தொற்றாளர்கள் குணமடைந்துள்ளதாக சுகாதார அமைச்சு தெரிவித்துள்ளது.

அதன்படி இலங்கையில் கொரோனாத் தொற்றிலிருந்து குணமடைந்தோர் எண்ணிக்கை 44,746 ஆக உயர்வடைந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது.

இலங்கையில் கொரோனாத் தொற்றுக்குள்ளான 255 பேர் இதுவரை உயிரிழந்துள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (நி-4)

## பெயர் மாற்ற அறிவித்தல்

புத்தூர் கிழக்கு புத்தூரை சேர்ந்த இராசதுரை இராஜகுமார்(781764655V) ஆகிய நான் எனது மகளாகிய மகிஷாவின் பெயரினை 17.01.2021 இன்று முதல் யோஸ்னிதா எனப் பெயர் மாற்றம் செய்கிறேன்.

எனவே இனிவரும் காலங்களில் அவர் சார்ந்த சகல ஆவணங்களிலும் யோஸ்னிதா எனும் பெயரையே பயன்படுத்துவார் என இத்தால் இலங்கை சனநாயகக் குடியரசு வாழ் மக்கள் அனைவருக்கும் அறியத் தருகின்றோம்.

**இராசதுரை இராஜகுமார்**
**(யோஸ்னிதா சார்பாக)**

(5297)


# துயர் பகிர்கிறோம்

## சபாரத்தினம் யோகரத்தினம்

(ஓய்வுநிலை போதனா ஆசிரியர்-தொழில்நுட்ப கல்லூரி)

பிறப்பு
1944 – 08 – 25

இறப்பு
2021 – 01 – 16



எமது நண்பன் யோ.ரிசாந்தன் அவர்களின் பாசமிகு தந்தை சபாரத்தினம் யோகரத்தினம் (ஓய்வு நிலை போதனா ஆசிரியர்-தொழில்நுட்பக் கல்லூரி) அவர்கள் 16.01.2021 அன்று காலமான செய்தியறிந்து துயரடைவதுடன். அன்னாரின் குடும்பத்தினருக்கு எமது ஆழ்ந்த அனுதாபங்களைத் தெரிவிப்பதோடு அவரின் ஆத்மா சாந்தியடைய இறைவனைப் பிரார்த்திக்கிறோம்.

ஓம் சாந்தி! சாந்தி!! சாந்தி!!!

**நண்பர்கள், வியாபார நிர்வாக முதுமாணி(MBA)**
**4ஆம் அணி, முகாமைத்துவ கற்கைகள் வணிக பீடம்**
**யாழ்ப்பாண பல்கலைக்கழகம்.**

(C-1177)

# சுகாதார நடைமுறைகள் தளர்த்தப்பட்டமை பொதுமக்களின் சிரமத்தை குறைக்கவே

## பொறுப்புணர்ந்து செயற்படுமாறு அரச அதிபர் அறிவுறுத்து

(யாழ்ப்பாணம்)

**சுகாதார நடைமுறை தளர்வுகளை பொதுமக்கள் துஷ்பிரயோகம் செய்யாது தங்களையும், சமூகத்தையும் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டியது அவசியம் என யாழ்.மாவட்ட அரசாங்க அதிபர் க.மகேசன் தெரிவித்துள்ளார்.**



யாழ்.மாவட்டத்தில் தற்போதைய கொரோனா நிலைமைகள் தொடர்பில் நேற்று ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவிக்கும் போதே அவர் மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

கொரோனாத் தொற்றினைத் தடுப்பதற்கு விதிக்கப்பட்டிருந்த கட்டுப்பாடுகள் யாழ்.மாவட்டத்தில் சற்று தளர்த்தப்பட்டுள்ளன. பாடசாலைகள் ஏற்கனவே ஆரம்பிக்கப்பட்டுள்ளன. அதேபோல் எதிர்வரும் காலங்களில் தனியார் கல்வி நிலையங்களை ஆரம்பிப்பதற்குரிய அறிவுறுத்தல்கள் கிடைக்குமென எதிர்பார்க்கப்படுகின்றது.

இந்த நிலையில் சினிமா திரையரங்குகள் மற்றும் வழிபாட்டு இடங்கள் போன்றவற்றில் சில தளர்வுகள் அறிவிக்கப்பட்டுள்ளன.

இதனைவிட கடந்த வாரம் தொடக்கம் மீன் சந்தைகள், அதேபோல் மூடப்பட்டிருந்த கடைகளினை மீள திறப்பதற்குரிய அனுமதி சுகாதாரப் பிரிவினரால் வழங்கப்பட்டுள்ளது.

எனினும் பொதுமக்கள் சுகாதார நடைமுறைகளை பின்பற்றி தமது செயற்பாடுகளை செயற்படுத்த வேண்டும் அதேபோல் நேற்று முன்தினம் இடம்பெற்ற சுகாதார வழிகாட்டல் எதிர்வரும் திங்கட்கிழமை முதல் யாழ்ப்பாண மாவட்டத்தில் திருமண மண்டபங்கள், வரவேற்பு மண்டபங்கள் மற்றும் ஹோட்டல் மண்டபங்களை திறப்பதற்குரிய அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

அதேநேரத்தில் அங்கு சுகாதார நடைமுறைகளை இறுக்கமாக பின்பற்றி நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதிக்கப்பட்டுள்ளது.

எனவே தளர்வுகளை பொதுமக்கள் துஷ்பிரயோகம் செய்யாது சுயகட்டுப்பாட்டோடு தங்களையும் சமூகத்தையும் பாதுகாக்கும் வகையில் செயற்பட வேண்டியது கட்டாயமாக இருக்கின்றது.

இந்த தளர்வுகள் மக்களுடைய சிரமங்களை குறைப்பதற்கும் அதே போல அவர்களுடைய வாழ்வாதார நடவடிக்கைகளை மேம்படுத்துவதற்குமாகவே மேற்கொள்ளப்பட்டுள்ளன.

எனவே பொதுமக்கள் எந்த விதமான அலட்சியப் போக்கையும் காட்டாது அனைவரும் ஒரு சமூகப் பொறுப்புணர்வுடன் நடந்துகொள்ள வேண்டியது அனைவரதும் பொறுப்பாகும்.

யாழ்.மாவட்டத்தினை பொறுத்தவரை சுகாதாரப் பிரிவினர் மற்றும் ஏனைய பிரிவினரின் ஒத்துழைப்புடன் கொரோனா நிலைமையை கட்டுப்பாட்டுக்குள் வைத்திருக்கின்றோம்.

சுகாதாரப் பிரிவினர் வெளிமாவட்டங்களில் இருந்து வருபவர்கள் எவ்வாறு நடந்துகொள்ள வேண்டும் என்பது தொடர்பில் வழிகாட்டுவார்கள்.

மக்கள் சிரமத்திற்குள்ளாகிவிடக்கூடாது என்பதற்காக தளர்த்தப்பட்டுள்ள இந்த நடைமுறையானது முழுமையாக தளர்த்தப்பட்டதாகக் கருதப்பட முடியாது. எனினும் அந்தந்த பகுதி சுகாதார பிரிவினரால் அதற்குரிய வழிகாட்டல்கள் பின்பற்றப்படும்.

எனவே வெளி மாவட்டங்களில் பயணங்களை மேற்கொள்வோர் தமது பயணவிவரங்களை சுகாதாரப் பிரிவினருக்கு வழங்குவதன் மூலமே அதற்குரிய நடவடிக்கையினை முன்னெடுக்க முடியும் எனவும் தெரிவித்தார். (5-4-33)

# வாகனத் தரிப்பிட நிலையம் திறப்பு

(குப்பிழான்)




கோண்டாவில் கிழக்கு ஸ்ரீ அற்புதநர்த்தன சனசமூக நிலையமும் குமரன் விளையாட்டுக் கழகமும் இணைந்து அமரர் திருமதி.நல்லையா பரிபூரணம் ஞாபகார்த்தமாக நல்லூர் சுகாதார வைத்திய அதிகாரி பணிமனையில் அமைக்கப்பட்டுள்ள வாகனத் தரிப்பிட நிலையம் நேற்று முன்தினம் திறந்து வைக்கப்பட்டது.

நிலையங்களின் தலைவர் து.சுதன் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்வில் பிரதம விருந்தினராகக் கலந்து கொண்ட வடமாகாண சுகாதார சேவைகள் பணிப்பாளர் வைத்திய கலாநிதி ஆ.கேதீஸ்வரன் சம்பிரதாயபூர்வமாகத் திறந்து வைத்தார்.

மேற்படி நிகழ்வில் நல்லூர் பிரதேச சபையின் சுகாதார வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி அ.ஜெயக்குமரன், திட்டமிடல் வைத்திய அதிகாரி வைத்திய கலாநிதி மோகனகுமார் ஆகியோர் கலந்து கொண்டனர். (5-4-18)

# விபத்தில் ஒருவர் காயம்

(கரணவாய்)



மந்திகை மடத்தடி பகுதியில் முச்சக்கர வண்டி, மோட்டார் சைக்கிள், துவிச்சக்கர வண்டி ஆகியன மோதி விபத்து ஏற்பட்டது.

இவ்விபத்தில் காயமடைந்த ஒருவர் பருத்தித்துறை ஆதார வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளார்.

விபத்துத் தொடர்பான விசாரணைகளை நெல்லியடிப் பொலிஸார் மேற்கொண்டு வருகின்றனர். (5-4-60)

# தொற்றாளருடன் தொடர்புடைய 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டனர்

(யாழ்ப்பாணம்)

தென்மராட்சி-மந்துவில் மேற்குப் பகுதியைச் சேர்ந்த கொரோனாத் தொற்றாளர் ஒருவர் கடந்த ஒன்பதாம் திகதி எழுமாறாக எழுதுமட்டுவாழ் பகுதியில் மேற்கொள்ளப்பட்ட பி.சி.ஆர்.பரிசோதனை மூலம் அடையாளம் காணப்பட்டுள்ள நிலையில் அவருடன் தொடர்பினைப் பேணிய 30 பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

மந்துவில் மேற்கு மற்றும் மந்துவில் கிழக்குப் பகுதிகளில் உள்ள 9 குடும்பங்களைச் சேர்ந்த முப்பது பேரே இவ்வாறு தனிமைப்பட்டுள்ளனர்.

தொற்றாளர் பயணித்த ஆட்டோ சாரதி, தொற்றாளரின் மனைவி மற்றும் மகன் சென்ற சிகை அலங்கரிப்பு நிலைய உரிமையாளர், பலசரக்குக் கடை உரிமையாளர் மற்றும் தொடர்பு பேணிய உறவினர்கள் ஆகியோரே இவ்வாறு தனிமைப்படுத் தப்பட்டுள்ளனர்.

தனிமைப்படுத்தப்பட்டவர்களில் 13 பேருக்கான பி.சி.ஆர். பரிசோதனைகள் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை மேற்கொள்ளப்பட்டன.

இவ்வாறு அவரவர் வீடுகளில் தனிமைப்படுத்தலில் இருப்போர் எதிர்வரும் 24ஆம் திகதி வரை தனிமைப்படுத்தலில் வைக்கப்படுவார்கள் எனத் தெரிவிக்கப்படுகிறது.

சாவகச்சேரி சுகாதாரப் பிரிவினர் வெளிமாவட்டங்களில் இருந்து வரும் வாகனங்களை மறித்து எழுமாறாக பி.சி.ஆர்.பரிசோதனை மேற்கொண்டபோதே நபருக்கு கொரோனாத் தொற்று இருந்தமை கண்டறியப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (5-30)

# மாணவர்களின் பாதுகாப்பு கருதி மேம்பாலம் அமைக்க கோரிக்கை

(சாவகச்சேரி)

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக மேம்பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டிய தேவைப்பாடு நிலவுவதாக முன்னாள் வடக்கு மாகாண சபை உறுப்பினர் கே.சயந்தன் கோரிக்கை விடுத்துள்ளார்.

அண்மையில் தென்மராட்சி பிரதேச செயலகத்தில் இடம்பெற்ற பிரதேச அபிவிருத்திக் குழுக்கூட்டத்தின் போதே அவர் இக்கோரிக்கையை முன்வைத்தார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

சாவகச்சேரி இந்துக் கல்லூரிக்கு முன்பாக ஏ-9 பிரதான வீதி மற்றும் ரயில் பாதை ஆகியவற்றுக்கு மேலாக மேம்பாலம் ஒன்று அமைக்கப்பட வேண்டும்.

சாவகச்சேரி இந்துக் கல்லூரியில் இரண்டாயிரத்துக்கும் மேற்பட்ட மாணவர்கள் கல்வி பயில்கின்றனர். இதனால் ஏ-9 வீதியில் 'காலை மற்றும் பாடசாலை முடிவடையும் வேளைகளில் போக்குவரத்துப் பிரச்சினை ஏற்படுகிறது. இதனால் பிள்ளைகளுக்குப் பாதுகாப்பு இல்லாத சூழ்நிலை காணப்படுகிறது.

குறித்த திட்டம் உலக வங்கியின் திட்டத்தில் உள்வாங்கப்பட்ட போதிலும் அந்த நிதி ஒதுக்கீடு தற்போது நிறுத்தப்பட்டுள்ளது.

எனவே வேறு திட்டங்களின் ஊடாக மேம்பாலம் அமைத்து மாணவர்கள் மற்றும் பயணிகளின் பாதுகாப்பினை உறுதிப்படுத்த வேண்டும் என அவர் மேலும் தெரிவித்திருந்தார். (5-4-30)

# இதுவரை ஒரு இலட்சம் பேர் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்

(கொழும்பு)

நாடளாவிய ரீதியில் இது வரை ஒரு இலட்சத்திற்கும் மேற்பட்டவர்கள் சுயதனிமைப் படுத்தப்பட்டுள்ளனர். இதன்படி நாட்டின் பல்வேறு பாகங்களில் ஒரு இலட்சத்து 10 ஆயிரத்து 238 பேர் சுயதனிமைப்படுத் தப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊட கப் பேச்சாளர் பிரதிப் பொலி ஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

இவர்களுள் சுமார் 26 ஆயி ரம் பேர் கம்பஹா மாவட்டத்தில் பதிவு செய்யப்பட்டுள்ளதுடன் ஏனையவர்கள் நாட்டின் வெவ் வேறு மாவட்டங்களில் தனி மைப்படுத்தல் செயற்பாடுகளு க்குட்படுத்தப்பட்டுள்ளதாகவும் அவர் தெரிவித்தார்.

இதேவேளை கம்பஹா மற் றும் களுத்துறை ஆகிய மாவ ட்டங்களில் அதிகளவானவர் கள் தனிமைப்படுத்தப்பட்டுள் ளதாகவும் அவர் மேலும் தெரி வித்துள்ளார்.

இந்த நிலையில் இவ்வாறு தனிமைப்படுத்தப்பட்டுள்ளவர் கள் பொது இடங்களில் நடமாடி வருகின்றமை தொடர்பில் முறை ப்பாடு கிடைக்கப் பெற்றுள்ளதா கவும் அவர் குறிப்பிட்டுள்ளார்.

எனவே இவ்வாறு தனிமை ப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறி செயற்படுபவர்களை கைது செய்வதற்காக நேற்று முதல் சிவில் உடையில் விசேட சுற்றி வளைப்பு நடவடிக்கைகளில் பொலிஸார் ஈடுபட்டுள்ளதாக வும் அவர் தெரிவித்துள்ளார்.

மேலும் தனிமைப்படுத்தல் விதிமுறைகளை மீறி செயற்ப டும் நபர்கள் பயணிக்கும் வாக னங்கள் அரசுடைமையாக்கப் படும் என்பதுடன் இவ்வாறு கைது செய்யப்பட்டவர்களுக்கு எதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட் டுள்ளதாகவும் பொலிஸ் ஊட கப் பேச்சாளர் தெரிவித்துள் ளார். (நி-4)

# புதிய கல்வி முறை அறிமுகப்படுத்தப்படும்-ஜனாதிபதி

(கொழும்பு)

**உழைப்பின் கௌரவத்தை பாதுகாக்கும் மற்றும் திற மையான சமுதாயத்தை உருவாக்குவதை நோக்கமாகக் கொண்ட ஒரு புதிய கல்வி முறை அறிமுகப்படுத்தப்படும் என ஜனாதிபதி கோட்டாபய ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.**



விரைவான வளர்ச்சியை அடைவதற்கும் குறுகிய கால த்தில் எதிர்பார்க்கப்படும் பொரு ளாதார இலக்குகளை அடை வதற்கும் தேசிய கல்விகொள்கை ஒன்று ஏற்கனவே வகுக்கப் பட்டுள்ளது.

மேலும் அனைத்து பல்க லைக்கழகங்களையும் ஸ்மா ர்ட் கற்றல் பல்கலைக்கழகங் களாக மாற்றுவதன் மூலம் எதிர்காலத்தில் அதிக தொழில் நுட்ப வல்லுநர்களை உருவா க்குவதன் முக்கியத்துவத்தை உயர் கல்வியில் சிறந்து விள ங்க முன்னுரிமை அளிப்பதை எதிர்பார்ப்பதாகவும் ஜனாதிபதி தெரிவித்தார். (நி-4)

# 12 ஆயிரத்திற்கும் மேற்பட்ட கைதிகள் விடுதலை

(கொழும்பு)

கடந்த ஆண்டு டிசெம்பர் மாதம் முதலாம் திகதியில் இருந்து இதுவரை 12 ஆயிர த்து 329 கைதிகள் விடுவிக் கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டு ள்ளது. இவ்வாறு விடுதலை செய்யப்பட்டவர்களில் சென்ற ஆண்டில் 26 பெண்களும் 1,100 ஆண்களும் அடங்குவ தாக சிறைச்சாலைகள் திணை க்களம் அறிவித்துள்ளது.

மேலும், விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்த 371 பெண் கள் மற்றும் 10 ஆயிரத்து 832 ஆண்கள் 2020 டிசெம்பர் 1 முதல் ஜனவரி 16 வரை விடு விக்கப்பட்டுள்ளனர்.

இதேவேளை சிறைச்சா லைகளில் கொரோனா தொற்று உறுதியானவர்களின் மொத்த எண்ணிக்கை 4 ஆயிரத்து 282 ஆக உயர்ந்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# கொரோனாவால் மட்டக்களப்பில் ஒருவர் உயிரிழப்பு

## குறித்த பகுதி முடக்கப்பட்டது

(கல்முனை)

மட்டக்களப்பு நகர் மாநகர சபை பொதுச் சந்தைக்கு அருகி லுள்ள பகுதியில் மாரடைப்பால் இறந்த 79 வயதுடைய முதிய வர் ஒருவருக்கு கொரோனாத் தொற்று என நேற்று சனிக்கி ழமை கண்டறியப்பட்டுள்ளதை யடுத்து, அந்த பகுதி முடக்கப் பட்டு வீதிகள் யாவும் மூடப்பட் டுள்ளதாக மட்டக்களப்பு பிராந் திய சுகாதார சேவைகள் பணிப் பாளர் நாகலிங்கம் மயூரன் தெரிவித்தார்.

குறித்த நபர் சுகயீனம் கார ணமாக வீட்டிலேயே நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை இரவு மாரடைப்பினால் உயிரி ழந்துள்ளார். இதனையடுத்து உயிரிழந்தவர் மீது மேற்கொள் ளப்பட்ட அன்டிஜன் பரிசோத னையில் அவருக்கு கொரோ னாத் தொற்று கண்டறியப்பட் டது.

இதனையடுத்து, குறித்த நபரின் சடலத்தினை அங்கி ருந்து வைத்தியசாலைக்கு எடுத்துச் செல்வதற்கான நட வடிக்கையின்ன பொது சுகா தார ஊழியர்கள் மேற்கொ ண்டுவருவதுடன், அந்த பகு தியில் கிருமிநாசினி தெளிக்கும் நடவடிக்கைகளும் முன்னெடுக் கப்பட்டு வருகின்றன. இந்நி லையில், உயிரிழந்தவரின் சடலத்தை பார்க்க சென்றவர் கள் தனிமைப்படுத்தப்பட்டுள்ள னர்.

இதேவேளை மட்டக்களப்பு மாவட்டத்தில் கொரோனாத் தொற்றினால் இதுவரை 5 பேர் உயிரிழந்துள்ளதாக அவர் தெரிவித்தார். (நி-4)

# மணப்பெண் உட்பட அறுவர் அழகு நிலையத்தில் மயக்கம்

(கொழும்பு)


அழகு நிலையமொன்றி னுள் இருந்து மணப்பெண்கள் உள்ளிட்ட 6 பேர் மயக்கமடை ந்த நிலையிலிருந்து மீட்கப்பட் டுள்ள சம்பவம் ஒன்று பெரும் அதிர்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.

இந்தச் சம்பவம் மீரிகம பகுதியில் நேற்று முன்தினம் இடம்பெற்றுள்ள நிலையில் பொலிஸார் தீவிர விசாரணை யில் ஈடுபட்டுள்ளனர்.

அழகு நிலையத்தின் உரி மையாளர், மூன்று ஊழியர்கள் மற்றும் திருமணத்தின் பின்ன ரான வீட்டிற்கு வரும் விழா விற்கு ஆடை அணிந்திருந்த இரண்டு மணப்பெண்கள் மய க்கம் அடைந்த நிலையில் மீட் கப்பட்டு வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர்.

எனினும் அவர்கள் ஆபத் தான கட்டத்தில் இல்லையென வைத்தியசாலை வட்டாரங்கள் தெரிவித்துள்ளன.

இந்நிலையில் எயார் கண்டி ஷனர் மூலம் வெளியேறிய நச்சுவாயுவை அவர்கள் சுவா சித்திருக்கலாம் என்று சந்தே கிக்கப்படுகிறது. (நி-4)




**நற்குண முன்னேற்ற அமைப்பால் நேற்று முந்தி னம் வெள்ளிக்கிழமை மீசாலை வீரசிங்கம் ஆரம்ப பாடசாலை மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:- சுபேசன்)**



**2018 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரண தரத்தில் சித்தியடைந்த 12 மாணவர்களுக்கு தலா பத்தாயிரம் ரூபா காசோலை கன்பொல்லை மக்கள் நலன்புரி ஒன்றியத்தால் J/363 பிரிவு கிராம உத்தியோகத்தர் காரியாலயத்தில் வைத்து நேற்று முன்தினம் வழங்கி வைக்கப்பட்டது.**

# சிறைக்கைதி தப்பியோட்டம்

(கொழும்பு)

கராப்பிட்டிய வைத்தியசா லையில் சிகிச்சை பெற்றுவந்த சிறைக்கைதியொருவர் தப்பி யோடியுள்ளார்.

பூசா சிறைச்சாலையில் தடு த்து வைக்கப்பட்டிருந்த குறித்த கைதி தற்கொலைக்கு முயற்சி த்த நிலையில் கராப்பிட்டிய வைத்தியசாலையில் அனுமதி க்கப்பட்டார்.

இதன்போதே அவர் தப்பிச் சென்றுள்ளதாக சிறைச்சாலை ஊடகப்பேச்சாளர் சிறைச் சாலை ஆணையாளர் சந்தன ஏக்கநாயக்க தெரிவித்தார்.

வெலிகமவைச் சேர்ந்த குறி த்த கைதி 5 வருடங்களும் 3 மாதங்களும் சிறைத்தண் டனை விதிக்கப்பட்டுள்ள ஒரு வர் என அவர் தெரிவித்தார். தப்பிச்சென்ற கைதியைத் தேடி விசாரணைகள் ஆரம்பிக்கப் பட்டுள்ளன. (நி-4)

# இரண்டு வார காலப் பகுதிக்குள் நாட்டிற்கு கொரோனா தடுப்பூசி


## பேராசிரியர் சன்ன ஜயசுமன உறுதி

(கொழும்பு)

**கொரோனா தடுப்பூசி எதிர்வரும் இரண்டுவார காலப் பகுதிக்குள் நாட்டிற்கு கிடைக்கப்பெறும் என எதிர்பார்ப்பதாக இராஜாங்க அமைச்சர் பேராசிரியர் சன்ன ஜயசுமன தெரிவித்துள்ளார்.**


இதன்படி அஸ்ட்ராஜெனகா மற்றும் பைசர் பயோஎன்டெக் ஆகிய தடுப்பூசிகளை இலங்கைக்கு கொண்டு வருவதற்கான ஏற்பாடுகள் மேற்கொள்ளப்பட்டு வருவதாகவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

இந்த விடயம் தொடர்பில் உலக சுகாதார அமைப்பு உட்பட வெளிநாட்டு அரசாங்கத்தின் பலருடன் பேச்சுவார்த்தைகள் முன்னெடுக்கப்பட்டு வருவதாகவும் இராஜாங்க அமைச்சர் மேலும் தெரிவித்துள்ளார்.




இந்தியாவில் தயாரிக்கப்படுகின்ற ஒக்ஸ்போர்ட் பல்கலைக்கழகம் மற்றும் அஸ்ட்ராஜெனகா கொரேனா தடுப்பூசியை பெற்றுக்கொள்ளவும் நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளது. (நி-4)

# ஏற்றுமதிப் பயிர்ச் செய்கைக்காக 700 பில்லியன் நிதி ஒதுக்கீடு



(கொழும்பு)

2025 ஆம் ஆண்டில் 100 பில்லியன் ரூபாவை வருமானமாக ஈட்டுவது சிறு ஏற்றுமதிப் பயிர் விவசாய திணைக்களத்தின் இலக்காகும் என ஏற்றுமதி விவசாயத்துறையின் பணிப்பாளர் ஜெனரல் ஏ.பி.ஹீன்கெந்த தெரிவித்துள்ளார்.

இந்த முறை பாதீட்டில் ஏற்றுமதி விவசாய திணைக்களத்திற்காக 700 பில்லியன் ரூபா ஒதுக்கப்பட்டுள்ளதாக அவர் குறிப்பிட்டுள்ளார்.

இதன் ஊடாக கறுவா, மிளகு, கராம்பு, சாதிக்காய், கொக்கோ மற்றும் கோப்பி பயிர்ச்செய்கைகளுக்கான உதவியும், இலவசமாக மரக்கன்றுகளை விநியோகிக்கும் நடவடிக்கைகளும் இடம்பெறவுள்ளன.

அத்துடன் வீட்டுத் தோட்ட பயிர்ச்செய்கைகளுக்காகவும் மரக்கன்றுகள் விநியோகிக்கப்படவுள்ளதாகவும் ஏற்றுமதி விவசாயத்துறையின் பணிப்பாளர் தெரிவித்துள்ளார். (நி-4)

# திருகோணமலையின் ஒரு பகுதி முடக்கப்பட்டது

(திருமலை)

திருகோணமலை, உப்புவெளி பிரதேச செயலாளர் பிரிவிற்குட்பட்ட பாலையூற்று, பூம்புகார் கிழக்கு பிரதேசம் நேற்று முதல் முடக்கப்பட்டுள்ளது.

பூம்புகார் கிழக்கு பிரதேசத்தில் நேற்று முன்தினம் மட்டும் 13 புதிய தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டதை அடுத்து குறித்த பிரதேசம் முடக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து பூம்புகார் கிழக்கு பிரதேசத்திற்கு உள்நுழையும் மூன்று வீதிகளில் தடைகள் ஏற்படுத்தப்பட்டு பொலிஸார் மற்றும் இராணுவ வீரர்கள் பாதுகாப்பு பணிகளில் ஈடுபடுத்தப்பட்டுள்ளனர்.

கடந்த மூன்று தினங்களில் பூம்புகார் கிழக்கு பிரதேசத்தில் 20 தொற்றாளர்கள் உறுதி செய்யப்பட்டதை அடுத்து குறித்த பிரதேசம் முடக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)



# சடலம் மீட்பு


(ஹற்றன்)

காசல் ரீ நீர்த்தேக்கத்துக்கு நீர் வழங்கும் கெசல்கமுவ ஓயாவிலிருந்து இனம் தெரியாத ஒருவரின் சடலத்தை பொலிஸார் மீட்டுள்ளனர்.

நோர்வூட் பொலிஸ் பிரிவிற்குட்பட்ட நோர்வூட் ஆற்றுப்பகுதியிலேயே பிரதேசவாசிகளால் வழங்கப்பட்ட தகவலுக்கமைவாக நேற்றுக்காலை சடலம் மீட்கப்பட்டுள்ளதாக நோர்வூட் பொலிஸார் தெரிவித்தனர்.

சடலம் பழுதடைந்துள்ளமையால் இதுவரையில் அடையாளம் காணப்படவில்லை எனத் தெரிவிக்கும் பொலிஸார் மேலதிக விசாரணைகளை மேற்கொண்டு வருவதாகவும் தெரிவித்தனர். (நி)

# காத்தான்குடியை விடுவிக்க முடியாது




(மட்டக்களப்பு)

காத்தான்குடி பொலிஸ் பிரிவை தனிமைப்படுத்தி வைத்து தற்போது மூன்று வாரங்களாகியுள்ளன.

எனினும் அந்த பகுதிகளில் முன்னெடுக்கப்பட்ட பி.சி.ஆர் மற்றும் அன்டிஜன் பரிசோதனைகளின் போது புதிதாக 190 பேருக்கு கொவிட்-19 வைரஸ் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது.

அதனால் அந்த பகுதியை தற்போதைய சூழ்நிலையில் விடுவிக்க முடியாது. இதனால் அந்த பகுதியில் தொடர்ந்தும் தனிமைப்படுத்தல் மற்றும் நோய்தடுப்பு சட்டவிதிகளுக்கமைய செயற்படுமாறு கேட்டுக்கொள்கின்றோம் என பிரதிப் பொலிஸ்மா அதிபர் அஜித் ரோஹண தெரிவித்தார். (நி-4)

## சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தில்

# இரத்தினபுரியில் இரத்தினக்கல் கோபுரம்

## மக்களின் கனவை நனவாக்குவோம்

(கொழும்பு)

இரத்தினபுரி மக்கள் பல தசாப்தங்களாக எதிர்பார்த்திருந்த இரத்தினக்கல் கோபுரம் அமைக்கும் கனவு நனவாகும் என பிரதமர் மகிந்த ராஜபக்ஷ தெரிவித்துள்ளார்.

இரத்தினபுரி, தெமுமாவத்தை மகிந்த ராஜபக்ஷ சர்வதேச இரத்தினக்கல் கோபுரத்திற்கு அடிக்கல் நாட்டுவதனை முன்னிட்டு காணொளி தொழில்நுட்பம் ஊடாக வாழ்த்துக்களை தெரிவித்த போதே, பிரதமர் மகிந்த ராஜபக்ஷ இவ்வாறு குறிப்பிட்டுள்ளார்.

"எதிர்வரும் 4 ஆண்டு காலத்திற்குள் இரத்தினக்கல் மற்றும் தங்காபரண துறையில் 5 பில்லியன் அமெரிக்க டொலர் அந்நிய செலவணி கிடைக்கும் என அரசாங்கம் எதிர்பார்க்கின்றது.

எமது தாய்நாடு இரத்தின தீபம் என்று போற்றப்படுகிறது. உலகின் பார்வையில் அந்தளவிற்கான மதிப்பை இரத்தினக்கல் கைத்தொழிலின் மூலம் நாம் பெற்றுள்ளோம்.

இந்தத் கைத்தொழில் நேற்று இன்று ஆரம்பிக்கப்பட்டதொன்று அல்ல. பல நூற்றாண்டுகளாக நம் முன்னோர்கள் இந்த பூமியிலிருந்து வெளிப்படும் கற்களின் மதிப்பை நாட்டிற்கு அர்ப்பணித்தனர்.

உலகின் வளர்ச்சிக்கேற்ப இந்த கைத்தொழிலும் முன்னேற்றமடைந்தது. இலங்கை மட்டுமல்ல, உலகின் பல நாடுகளும் இரத்தினக்கல் கைத்தொழிலுக்குள் போட்டியிட்டன.

இருப்பினும், குறிப்பிட்ட நேரத்தில் நம் நாடு அதில் கவனம் செலுத்தவில்லை.

இதன் விளைவாக, இரத்தினக்கல் கைத்தொழிலில் ஈடுபட்டுள்ள வர்த்தகர்கள் பல சிரமங்களை எதிர்கொண்டனர். அவர்களது குடும்பங்களின் குழந்தைகளும் அதனால் பாதிக்கப்பட்டனர்.

ஒரு அரசாங்கம் என்ற ரீதியில் நாங்கள் எப்போதும் இரத்தினக்கல் கைத்தொழிலைப் பாதுகாக்க முயற்சித்தோம். இரத்தினக்கல்லின் மதிப்பை நாட்டின் மதிப்பீட்டுடன் இணைப்பதற்கு பல்வேறு நடவடிக்கைகள் எடுக்கப்பட்டுள்ளன.

இரத்தினபுரியில் உள்ள உங்களுக்கு இரத்தினக்கல் குறித்து புதிதாக எதனையும் கூறுவதற்கு இல்லை. சப்ரகமுவ போன்றே மேலும் பல மாகாணங்களில் முன்னெடுக்கப்படும் இந்த இரத்தினக்கல் கைத்தொழில் குறித்து நாங்கள் முன்னரைவிட அதிக கவனம் செலுத்தி வருகிறோம்.

சுபீட்சத்தின் நோக்கு திட்டத்தின் கீழ் இரத்தினபுரிக்கு இரத்தினக்கல் கோபுரம் அமைக்கும் கனவு நனவாவதாக நான் உங்களுக்கு தெரிவிக்க விரும்புகின்றேன்" என அவர் தெரிவித்தார். (நி-4)

## இராசிபலன்

17.01.2021
தை 04, ஞாயிற்றுக்கிழமை
சதுர்த்தி முற்பகல் 10.27 மணிவரை
சதயம் முற்பகல் 8.28 மணிவரை
சுபநேரம் 9.35 - 11.05 மணிவரை
இராகுகாலம் 5.05 - 6.35 மணிவரை
சந்திராஷ்டமம்:- ஆயிலியம்.

வளவன்

**மேஷம்** — குடும்பத்தில் குதூகலம் தரும் சம்பவங்கள் இடம்பெறலாம், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும்.

**ரிஷபம்** — உறவினர்களும் நண்பர்களும் வலியவந்து உதவுவார்கள், மகிழ்ச்சிதரும் செய்திகள் வந்து சேரலாம், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், போசன சுகமுண்டு.

**மிதுனம்** — தித்திக்கும் பயணங்கள் இடம்பெறலாம், பெரிய மனிதர்களின் சந்திப்பு இடம்பெறும் வாய்ப்புண்டு, சுணங்கிய காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கடகம்** — சிந்தித்து செயற்பட்டு சிறப்புக்களை காண வேண்டிய நாள், பயணங்களின் போது விழிப்புணர்வு அவசியம், வழிபாட்டால் மகத்துவம் காண வேண்டிய நாள்.

**சிம்மம்** — கௌரவமான சம்பவங்கள் இடம்பெறலாம், வருமானம் திருப்தி தரும் வகையில் அமையும், எடுத்த காரியங்களில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**கன்னி** — சுவாரஸ்யமான சம்பவங்கள் இடம்பெறும் வாய்ப்புண்டு, வழிபாட்டுச் சிந்தனை மேலோங்கும் நாள், ஆரோக்கியத்தில் முன்னேற்றம் காண்பீர்கள்.

**துலாம்** — பிறருக்கு உதவும் எண்ணம் உருவாகும், பிள்ளைகளின் முன்னேற்றத்தில் அக்கறை காட்டுவீர்கள், தாழ்ந்த சுபாவமுண்டு, போசன சுகமுண்டு.

**விருச்சிகம்** — சுபகாரியங்களுக்கு சிறிது செலவு செய்து மகிழ்வீர்கள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்ட முற்படுவீர்கள், பயணங்கள் கைகூடும் வாய்ப்புண்டு.

**தனுசு** — உறவினர் வழியில் ஒத்துழைப்புக்கள் கிடைக்கும் வாய்ப்புண்டு, பொருளாதார நிலை உயர வழிவகை செய்வீர்கள், காரிய அனுகூலமுண்டு, போசன சுகமுண்டு.

**மகரம்** — வாக்கு மேன்மையுண்டு, பணப்புழக்கம் அதிகரிக்கும் நாள், எடுத்த காரியங்களில் அதிக பிரயாசை காட்டுவீர்கள், நண்பர்கள் சந்திப்புண்டு.

**கும்பம்** — ஆழ்ந்த சிந்தனையுண்டு, போசன சுகமுண்டு, புதிய முயற்சிகளில் ஆர்வம் காட்டுவீர்கள், வீட்டை பராமரிப்பதில் அக்கறை கூடும், கௌரவமான நாள்.


**மீனம்** — எடுத்த காரியங்களை முடிப்பதில் கூடிய அக்கறை காட்டும் சூழ்நிலை ஏற்படலாம், சயனசுகக் குறைவுண்டு, சுபவிரயங்கள் கூடும் வாய்ப்புண்டு.

குற்றமுள்ள நெஞ்சு குறுகுறுக்கும்.

# சடலங்களில் இருக்கும் வைரஸ் உயிரற்றவை
# அச்சம் தேவையில்லை என்கிறார் விசேட நிபுணர்

(கொழும்பு)

**கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மரணித்தவர்களின் சடலங்களை பல வாரங்கள் அதி குளிர்சாதனங்களில் வைத்திருந்த நிலையில் அவற்றில் பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டு பார்க்கும்போது வைரஸ் தொற்று இருப்பதாகவே காண்பிக்கும் என்றாலும் அவை உயிருள்ள நிலையில் இருக்காது என பாராளுமன்ற உறுப்பினரும் வைரஸ் தொடர்பான விசேட நிபுணருமான பேராசிரியர் திஸ்ஸ விதாரண தெரிவித்தார்.**



கொவிட் தொற்றுக்குள்ளாகி மரணித்தவர்களில் சடலங்கள் அதி குளிர்சாதனங்களில் வைக்கப்பட்டுள்ள நிலையில், சில வாரங்கள் சென்று பி.சி.ஆர். பரிசோதனை மேற்கொண்டாலும் வைரஸ் இருப்பது கண்டறியப்பட்டுள்ளதாகவும் அதனால் அடக்கம் செய்வது அச்சுறுத்தலான விடயம் எனவும் ஒருசிலரால் தெரிவிக்கப்படும் கருத்து தொடர்பில் தெரிவிக்கையிலேயே இவ்வாறு குறிப்பிட்டார்.

இது தொடர்பாக அவர் தொடர்ந்து தெரிவிக்கையில்,

அதிகுளிர் சாதனங்களில் பல வாரங்கள் இருக்கும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மரணித்தவர்களின் சடலங்களில் இருந்து பெறப்படும் மாதிரிகளைப் பரிசோதித்து பார்க்கும் போது, அதில்கொரோனா வைரஸ் இருக்கலாம் என்றாலும் அவை உயிருள்ளதாக இருக்காது. அதனால் மரணித்தவர்களின் சடலங்களில் இருந்து வைரஸ் பரவுவதற்கு வாய்ப்பில்லை.

மேலும் கொரோனாத் தொற்றுக்குள்ளாகி மரணிப்பவரின் சடலத்தில் உயிருள்ள வைரஸ் பல மணிநேரங்கள் இருக்கலாம் அந்த சடலங் களை அடக்கம் செய்த பின்னர், நீருடன் கலந்து வைரஸ் பரவுவதாக விஞ்ஞான ரீதியில் இதுவரை உறுதிப்படுத்தப்படவில்லை. அதனால் சடலங்களில் இருக்கும் வைரஸ் தொடர்பாக தேவையற்ற பீதியை ஏற்படுத்திக்கொள்ள தேவையில்லை எனத் தெரிவித்தார். (நி-4)



கிளிநொச்சி ஓம் சக்திவேல் ஆலய ஸ்தாபகரும் பிரதம பூசகருமாகிய ஓம் சக்திவேலின் நிதிப்பங்களிப்பில் புதுக்குடியிருப்பு 10 ஆம் வட்டாரத்தில் தெரிவுசெய்யப்பட்ட 20 கர்ப்பவதிகளுக்கு போசாக்கு உலர்உணவுப்பொதிகள் கடந்த செவ்வாய்க்கிழமை புதுக்குடியிருப்பு பொதுநோக்கு மண்டபத்தில் வைத்து வழங்கப்பட்டன.

# நாளை முதல் மீண்டும் புகையிரத சேவை



(நல்லூர்)

புகையிரத சேவைகள் நாளை ஆரம்பிக்கப்பட இருப்பதால் இன்று முதல் ஆசன முற்பதிவுகளை மேற்கொள்ளலாம் என யாழ்ப்பாண பிரதான புகையிரத நிலைய அதிபர் ரி.பிரதீபன் தெரிவித்துள்ளார்.

புகையிரத சேவைகள் ஆரம்பமாகவுள்ளமை குறித்து நேற்று ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும் போதே அவர் இவ்வாறு தெரிவித்தார்.

நாட்டில் ஏற்பட்டுள்ள கொரோனா வைரஸ் அச்சம் காரணமாக நிறுத்தப்பட்டிருந்த புகையிரதே சேவைகள் நாளை 18 ஆம் திகதி திங்கட்கிழமை முதல் ஆரம்பிக்கப்பட இருக்கின்றது.

அந்த வகையில் யாழ்ப்பாணத்தில் இருந்து இரண்டு புகையிரதங்கள் புறப்பட இருக்கின்றது. முதலாவதாக காங்கேசன்துறையில் இருந்து காலை 5.30 இற்கு புறப்பட்டு, யாழ்ப்பாணத்தில் இருந்து காலை 6.10 இற்கு புறப்படுகின்ற உத்தர தேவி கடுகதி புகையிரதமும் காங்கேசன் துறையில் இருந்து காலை 9 மணிக்கு புறப்பட்டு, யாழ்ப்பாணத்தில் இருந்து 9.45 இற்கு புறப்படும் யாழ்.தேவி புகையிரதமும் சேவையை ஆரம்பிக்க இருக்கின்றன.

அவ்வாறே கல்கிசையில் இருந்து 5.55 இற்கும் 6.35 இற்கு கொழும்பிலிருந்தும் புறப்படும் யாழ்.தேவி புகையிரதமும் 11.50 இற்கு கொழும்பிலிருந்து புறப்படும் உத்தரதேவி புகையிரதமும் நாளை 18 ஆம் திகதி சேவையை ஆரம்பிக்க இருக்கின்றன.

ஏனைய புகையிரத சேவைகள் 25 ஆம் திகதி தொடக்கம் முக்கியமாக கொழும்பிலிருந்து புறப்படும் குளிரூட்டப்பட்ட புகையிரதமும், இரவு தபால் புகையிரதம் உட்பட அனைத்து புகையிரத சேவைகளும் படிப்படியாக ஆரம்பமாக உள்ளன.

இன்று 17 ஆம் திகதி தொடக்கம் காலை முதல் ஆசனங்களை யாழ்.புகையிரத நிலையத்தில் முற்பதிவு செய்து கொள்ள முடியும்.

மேலதிக விபரங்களுக்கு 021 222 2271 என்ற தொலைபேசி இலக்கங்களுக்கு தொடர்பினை மேற்கொண்டு அறிந்து கொள்ள முடியும்.

பயணிகள் சுகாதார நடைமுறைகளை பின் பற்றி புகையிரதத்தில் பயணத்தினை மேற்கொள்ளுமாறும் யாழ்ப்பாணம் பிரதான புகையிரத நிலைய அதிபர் கேட்டுக் கொண்டுள்ளார். (5-33)

# புத்தாண்டுப் பலன்கள்

## 01.01.2021 முதல் 31.12.2021 வரை



**கும்ப இராசி வாசகர்களே!**

புத்தாண்டின் தொடக்கம் ஏழரைச் சனியின் தொடக்கமாகவே அமைகின்றது. முதல் கட்டமாக விரயச்சனி இப்பொழுது தொடங்குகின்றது. அதே நேரத்தில் உங்கள் இராசிக்கு தன-இலாபாதிபதியான குரு பகவான், விரய ஸ்தானத்திலேயே இருக்கின்றார். எனவே இந்தப் புத்தாண்டில் விரயங்கள் அதிகரிக்கலாம். இருப்பினும் சனி உங்கள் இராசிநாதன் என்பதால் வரவில்லாமல் செலவு ஏற்படுத்த மாட்டார். தேவைக்கேற்ற பணம் வந்து கொண்டேயிருக்கும். திடீரென நல்ல மாற்றங்களும் வரலாம். வரும் மாற்றங்களை ஏற்றுக்கொண்டு செயற்படுவதன் மூலமே சிறப்பான எதிர்காலத்தை அமைத்துக்கொள்ள இயலும். பொதுவாக உங்கள் சுய ஜாதக அடிப்படையில், சனி பகவான் வருவது முதல் சுற்றா, இரண்டாவது சுற்றா, மூன்றாவது சுற்றா என்பதை அறிந்து கொள்ளுங்கள். பொங்குசனி காலமாக இருந்தால் தடைகளும் தாமதங்களும் பெரியளவில் ஏற்படாது.

ஆண்டின் தொடக்கத்தில் குருச்சந்திர யோகமும் நீச்சபங்க இராஜயோகமும் ஏற்படுகின்றது. உங்கள் இராசிக்கு 6 இற்கு அதிபதியான சந்திரனை குரு பகவான் பார்ப்பதால் நிதிப்பற்றாக்குறை அகலும். ஒரு சிலருக்கு தொழில் மாற்றங்கள் உறுதியாகலாம். ஒரே நேரத்தில் பல வேலைகளைச் செய்து சாதனை நிகழ்த்துவீர்கள்.

### புத்தாண்டின் தொடக்க நிலை

வருடத் தொடக்கத்தில் உங்கள் இராசிநாதனாகவும் விரய ஸ்தானாதிபதியாகவும் விளங்கும் சனி, விரய ஸ்தானத்திலேயே சஞ்சரிக்கின்றார். அவரோடு குரு இருப்பது ஒரு வழிக்கு நன்மைதான். சனியின் கடுமை குறைய வழிவகுத்துக் கொடுப்பார். உத்தியோகத்தில் இருந்து விலகக்கூடிய சூழ்நிலை வந்தாலும் புதிய உத்தியோகம் உங்களுக்கு கிடைக்கும். தொழில் மாற்றம் செய்ய விரும்புவோருக்கு அதுவும் தானாக அமையும்.

இலாப ஸ்தானத்தில் சூரியன் இருப்பதால், அரசுவழி அனுகூலங்கள் கிடைக்கும். தொழிலை விரிவுசெய்ய அல்லது இடமாற்றங்கள் செய்ய பொருளுதவி தேவைப்பட்டால் கேட்ட இடத்தில் உதவிகள் கிடைக்கும். வங்கிகளின் ஒத்துழைப்பு மட்டுமல்லாமல், வள்ளல்களின் ஒத்துழைப்பும் கிடைக்கும். குடும்ப ஸ்தானாதிபதி குரு நீச்சம் பெற்றிருப்பதால் குடும்பத்தில் ஒருசில பிரச்சினைகள் மீண்டும் தலைதூக்கும். கோபத்தைக் குறைத்துக் கொண்டு பிரச்சினைகளை அணுகுவது நல்லது. ஒரு கடனை அடைக்க மற்றொரு கடனை வாங்கும் சூழ்நிலை ஏற்படலாம். செவ்வாய் மூன்றில் இருப்பதால் உடன் பிறப்புகளால் நன்மை உண்டு. என்றாலும் அடிக்கடி அவர்களின் குணங்களில் மாற்றங்கள் ஏற்படும். சுக ஸ்தானத்தில் ராகுவும் 10 ஆம் இடத்தில் கேதுவும் இருக்கின்றார்கள். எனவே தாயின் உடல் நலத்திலும் கவனம் தேவை. உங்கள் உடல் நலத்திலும் கவனம் செலுத்த வேண்டியது அவசியம்.

### மகர குருவின் சஞ்சாரம்

ஆண்டின் தொடக்கத்தில் குரு பகவான் மகர இராசியில் சஞ்சரிக்கின்றார். அது அவருக்கு நீச்ச வீடாகும். 2, 11 ஆகிய இடங்களுக்கு அதிபதியானவர் குரு. வாக்கு, தனம், குடும்பம், இலாபம் ஆகிய ஆதிபத்தியங்களைக் கொண்டவராக விளங்கும் குரு பகவான், இப்பொழுது விரய ஸ்தானத்திற்கு வருகின்றார். எனவே எவ்வளவு பணம் கைக்கு கிடைத்தாலும் அடுத்த நிமிடமே செலவாகிவிடும். குடும்பத்தில் உள்ளவர்களின் எண்ணங்களையும் நிறைவேற்ற செலவு செய்து விடுவீர்கள். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு வரக்கூடிய இடமாற்றத்தில் தாமதம் ஏற்படலாம். நீங்கள் போய்ச்சேருவதற்குள் அங்கு வேறு ஒருவர் நியமிக்கப்படலாம். எதையும் ஒரு முறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வதோடு, அனுபவஸ்தர்களையும் அருளாளர்களையும் கலந்து ஆலோசித்து செயற்பட்டால் ஓரளவேனும் வெற்றிகள் கிடைக்கும்.

**நல்ல மாற்றங்கள் இல்லம் தேடி வரும்**

**ஜோதிடக் கலாமணி சிவல்புரி சிங்காரம்**

உங்கள் இராசிக்கு இலாப ஸ்தானத்திற்கு அதிபதியாகவும் குரு விளங்குவதால், பொருளாதாரத்தில் எதிர்பார்த்த பலன் கிடைக்கும் என்றாலும் முயற்சி அதிகம் தேவைப்படும். வெளிநாடு சென்று பணிபுரிய வேண்டுமென்ற ஆர்வம் அதிகரிக்கும். வெளிநாட்டிலிருந்து சொந்த ஊர் திரும்ப முடியாமல் தத்தளிப்பவர்களுக்கு, இப்பொழுது பயணம் அமைவதற்கான வாய்ப்பு




கிடைக்கும். இளைய சகோதரத்தோடு இருந்த பகை மாறும். 'வாகனங்களில் இருந்த பிரச்சினை அதிகரிக்கின்றதே, எப்பொழுது தான் புதிய வாகனம் வாங்கலாம்' என்று சிந்தித்தவர்களுக்கு இப்பொழுது நவீன வாகனங்களை வாங்கி மகிழும் யோகம் உண்டு. செய்யும் தொழிலை விரிவுபடுத்த எடுத்த முயற்சியில் மாற்றினத்தவர்களின் ஒத்துழைப்பு கிடைக்கும்.

### குருவின் பார்வை பலன்கள்

புத்தாண்டில் மகரத்தில் சஞ்சரிக்கும் குருவின் பார்வை, உங்கள் இராசிக்கு 4, 6, 8 ஆகிய இடங்களில் பதிவாகின்றது. எனவே குடும்பத்தில் ஏற்பட்ட மனக்கசப்புகள் மாறும். தாய்வழி ஆதரவு கிடைக்கும். கவனமாகவும் நிதானமாகவும் செயற்பட்டு காரியங்களைச் சிறப்பாக முடிப்பீர்கள். உங்கள் மேற்படிப்பிற்கோ அல்லது உங்கள் குடும்பத்தைச் சார்ந்தவர்களின் கல்வி விருத்திக்காகவோ எடுத்த முயற்சி கைகூடும். இடம், பூமி வாங்கும் யோகம் உண்டு. ஒரு சிலருக்கு வீடுகட்டி குடியேறும் யோகம்கூட ஏற்படலாம். ஆரோக்கியத் தொல்லை அகல, மாற்று மருத்துவம் கைகொடுக்கும். எதிரிகள் விலகிச் செல்வர். இழந்த பதவிகள் மீண்டும் கிடைக்கலாம். உத்தியோகத்தில் உள்ளவர்களுக்கு ஊதிய உயர்வுடன் கூடிய மாறுதல் கிடைக்கும்.

கும்ப குருவின் சஞ்சார காலத்தில், குருவின் பார்வை உங்கள் இராசிக்கு 5, 7, 9 ஆகிய இடங்களில் பதிகின்றது. எனவே பூர்வ புண்ணிய ஸ்தானம் பலமடைகின்றது. கொடுக்கல்-வாங்கல்கள் ஒழுங்காகும். தொழிலில் மட்டுமல்ல, வாழ்க்கையிலும் வளர்ச்சி ஏற்படும். வழக்குகள் சாதகமாக முடியும்.

கல்யாணம் போன்ற சுபகாரியங்கள் கைகூடுவதில் இருந்த தடைகள் அகலும். உத்தியோகத்தில் பணி நீக்கம் செய்யப்பட்டவர்கள் மீண்டும் சேரும் வாய்ப்பு உண்டு. அடகுவைத்த நகைகளை மீட்டுக் கொண்டு வருவதில் ஆர்வம் காட்டுவீர்கள். பங்காளிப்பகை மாறும். பாகப்பிரிவினைகள் சுமுகமாக முடியும்.

### குருவின் வக்கிர காலம்

16.06.2021 முதல் 13.09.2021 வரை, கும்ப இராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். இக்காலத்தில் பொருளாதாரப் பற்றாக்குறை அதிகரிக்கும். தன-லாபாதிபதி வலுவிழக்கும் பொழுது எதையும் திட்டமிட்டுச் செய்ய இயலாது. கூடுதல் விரயங்களைச் சந்திக்க நேரிடும். குடும்பத்தில் பழைய பிரச்சினை மீண்டும் தலைதூக்கும். குடும்ப உறுப்பினர்கள் ஒருவரை ஒருவர் புரிந்து கொண்டு செயற்பட்டால் அமைதி கிடைக்கும். பயணங்களால் தொல்லை உண்டு. பணிபுரியும் இடத்தில் உங்கள் மேல் திருப்தி ஏற்படாது. புதிய வேலைக்கு முயற்சித்தாலும் அதில் குறுக்கீடுகள் நிறைய இருக்கும். இளைய சகோதரத்தோடு பிணக்குகள் ஏற்படலாம். இல்லம்தேடி வம்பு வழக்குகள் வரும் என்பதால் எதிலும் கொஞ்சம் விழிப்புணர்ச்சியோடு இருப்பது நல்லது.

14.09.2021 முதல் 13.10.2021 வரை, மகர ராசியில் குரு வக்கிரம் பெறுகின்றார். விரய ஸ்தானத்தில் வக்கிரம் பெறும்பொழுது விரயங்கள் கூடுதலாக இருக்கும். மனச் சஞ்சலங்கள் அதிகரிக்கும். எதையும் திருப்தியாகச் செய்ய இயலாது. தொழில் முன்னேற்றத்தில் எதிரிகளின் குறுக்கீடுகள் அதிகரிக்கும். வெளிநாடு அல்லது வெளிமாநிலம் சென்று பொருள்தேட நினைப்பவர்களுக்கு, இக்காலத்தில் சிக்கல்களும், சிரமங்களும் அதிகரிக்கும். அலுவலகப் பணியில் உங்களுக்கு கிடைக்க வேண்டிய சலுகைகள் மற்றவர்களுக்குப் போய்ச் சேரும். பதவி உயர்வு பற்றிய தகவல் பரிசீலனையில் இருக்குமே தவிர நடைமுறையில் வராது. திட்டமிட்ட காரியங்களை வெகு சிரத்தையுடன் செய்தால் வெற்றி கிடைக்கும்.

### சனியின் வக்கிர காலம்

12.05.2021 முதல் 26.09.2021 வரை, மகரத்தில் சனி வக்கிரம் பெறுகின்றார். உங்கள் இராசிநாதன் வக்கிரம் பெறும் இந்த நேரம் உடல்நலனில் அக்கறை செலுத்த வேண்டிய காலமாகும். ஆரோக்கியத் தொல்லை அதிகரிக்கும். வீண் விரயங்கள் கூடுதலாக இருக்கும். ஒரு காரியத்தை ஒன்றுக்கு இரண்டு முறை செய்யக்கூடிய சூழ்நிலை ஏற்படும். நண்பர்கள் நம்பிக்கைக்குரிய விதம் நடந்துகொள்ள மாட்டார்கள். நாணயப் பாதிப்புகள் ஏற்படலாம். பொதுவாழ்வில் இருப்பவர்களுக்கு புதிய திருப்பம் ஏற்படும். 12 ஆம் இடத்திற்கு அதிபதியாகவும் சனி விளங்குவதால் இடமாற்றம், ஊர் மாற்றம், உத்தியோக மாற்றம் எளிதில் கிடைக்கும். கடன் சுமை பாதிக்கு மேல் குறையும்.

### கவனமுடன் செயற்பட வேண்டிய காலம்

14.04.2021 முதல் 03.06.2021 வரை, மற்றும் 04.06.2021 முதல் 21.07.2021 வரை செவ்வாய்-சனி பார்வைக் காலமாகும். இக்காலத்தில் எதைச் செய்தாலும் அனுபவஸ்தர்களின் ஆலோசனையைக் கேட்டுச் செய்வது நல்லது. வாய்தாக்களும் வழக்குகளும் வந்துகொண்டே இருக்கும். மதிப்பையும், மரியாதையையும் தக்க வைத்துக்கொள்ள இயலுமா என்பது சந்தேகம்தான். மக்கள் செல்வங்களால் சில பிரச்சினைகள் உருவாகி மனக்கவலையை கொடுக்கும். மருத்துவச் செலவுகள் அதிகரிக்கும்.

குடும்பத்தில் ஒருவர் மாற்றி ஒருவருக்கு உடல்நலத் தொல்லை வரலாம். அவற்றை ஆரம்பத்திலேயே கவனித்துக் கொள்வது நல்லது. உத்தியோகத்தில் உடன் பணிபுரிபவர்களால் தொல்லைகள் உண்டு. குடும்பப் பிரச்சினைகளை மூன்றாம் நபரிடம் சொல்ல வேண்டாம். பொதுவாக பல வேலைகளில் தாமதங்கள் ஏற்படும்.

### வளர்ச்சி தரும் வழிபாடு

ஒவ்வொரு புதன்கிழமையும் திருமாலையும் திருமகளையும் வழிபடுவது நல்லது. இல்லத்தில் விநாயகர் படம் வைத்து, கணபதி கவசம் பாடி வழிபட்டால் காரியங்களில் வெற்றி கிடைக்கும்.

### பெண்களுக்கான பலன்கள்

இந்தப் புத்தாண்டில் சனி விரயஸ்தானத்தில் இருப்பதால் அதிக விரயங்கள் ஏற்படும். எதைச் செய்தாலும் ஒருமுறைக்குப் பலமுறை யோசித்துச் செய்வது நல்லது. கணவன்-மனைவிக்குள் ஒற்றுமை அதிகரிக்க விட்டுக்கொடுத்துச் செல்லுங்கள். தாய்வழி ஆதரவு கிடைக்கும். வீடு, இடம் போன்ற அசையாச் சொத்துகள் உங்கள் பெயரில் வாங்கும் யோகம் உண்டு.

பிள்ளைகளை உங்கள் மேற்பார்வையில் வைத்துக்கொள்ளுங்கள். ஆரோக்கியத்தில் அதிக அக்கறை காட்டுவது நல்லது. பணிபுரியும் பெண்களுக்கு இடமாற்றங்கள் உறுதியாகலாம். செவ்வாய் - சனி பார்வை காலத்தில் வழிபாடுகள் மூலமே வளர்ச்சியை தக்க வைத்துக் கொள்ள இயலும்.

(தொடரும்)

# வெளிநாடுகளுக்கு பயணிக்க கொரோனா தடுப்பூசியை பெற்றிருப்பது அவசியமில்லை-உலக சுகாதார அமைப்பு

(ஜெனீவா)

**வெளிநாடுகளுக்கு பயணிப்பதற்காக கொரோனாத் தடுப்பூசியைப் பெற்றிருப்பது தகுதியாகக் கருதப்படவில்லை என உலக சுகாதார அமைப்பு தெரிவித்துள்ளது.**

கொரோனா வைரஸ் மற்றும் அதற்கான தடுப்பூசி குறித்த பல முக்கியமான தகவல்களை இதுவரை கண்டுபிடிக்கப்படவில்லை என உலக சுகாதார அமைப்பின் அவசரநிலை நிர்வாக குழு தெரிவித்துள்ளது.

இருப்பினும், கொரோனா தடுப்பூசியை பெற்றுக் கொள்ளாதது சர்வதேச பயணத்தைத் தவிர்க்க ஒரு காரணமாக ஏற்க முடியாதென வலியுறுத்தப்பட்டிருந்தது.

உலக சுகாதார அமைப்பின் அவசர சேவைகளின் தலைவர் வைத்தியர் மைக் ரியன், புதிய கொரோனா வைரஸ் தொடர்பாக அனைத்து நாடுகளும் விழிப்புடன் இருக்க வேண்டும் என்று தெரிவித்திருந்தார். (நி-4)

## உலகப் பிரசித்தி பெற்ற அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு ஆரம்பமானது

### 655 வீரர்கள்,800 காளைகள் பங்கேற்பு



(சென்னை)

உலகப் பிரசித்தி பெற்ற அலங்காநல்லூர் ஜல்லிக்கட்டை முதல்வர் பழனிச்சாமி மற்றும் துணை முதல்வர் ஓ.பன்னீர் செல்வம் ஆகியோர் கொடியசைத்து ஆரம்பித்து வைத்தனர்.

அவனியாபுரம், பாலமேடு ஜல்லிக்கட்டை தொடர்ந்து நேற்று சனிக்கிழமை அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டு நடைபெற்று வருகின்றது.

போட்டியை முதல்வர் பழனிச்சாமி மற்றும் துணை முதல்வர் ஓ.பன்னீர்செல்வம் ஆகியோர் ஆரம்பித்து வைத்தனர்.


ஜல்லிக்கட்டில் 700 காளைகள் பங்கேற்கவிருப்பதாக தகவல்கள் தெரிவிக்கின்றன.

அலங்கா நல்லூர் ஜல்லிக்கட்டில் 655 மாடுபிடி வீரர்கள் பங்கேற்கின்றனர். 800 காளைகளும் களமிறங்குகின்றன. என்பது குறிப்பிடத்தக்கது.(நி-4)

## மூவாயிரம் தனிமைப்படுத்தும் மையங்கள் அமைக்கும் பணி சீனாவில் தீவிரம்

(பீஜிங்)

வருடாந்த சந்திர புத்தாண்டு விரைவில் தொடங்கவிருப்பதால், புத்தாண்டுக் கொண்டாடங்களின்போது கொரோனா பரவல் அதிகரிக்கும் என்ற எதிர்பார்ப்பின் பேரில் கூடுதலாக கொரோனா மையங்களை சீனா உருவாக்கி வருகின்றது. கூடுதலாக 3,000 தனிமைப்படுத்தம் மையங்கள் அமைக்கப்பட்டு வருகின்றன. இதுதொடர்பான ஒளிப்படங்களை மாநில ஊடகங்கள் வெளியிட்டுள்ளன.



கடந்த ஆண்டின் தொடக்கத்தில், சீனா விரைவாக களவைத்தியசாலைகளை உருவாக்கி, உடற்பயிற்சிக் கூடங்களை தனிமைப்படுத்தும் மையங்களாக மாற்றியபோது, வுஹானில் அப்போதைய தொற்றுப் பரவல் சாதரணமாக கட்டுப்படுத்தப்பட்டது.


இதனிடையே ஹைலோங்ஜியாங் மாகாணத்தில் தொற்றுப் பரவல் தீவிரமடைந்ததையடுத்து அவசர நிலை பிரகடனப்படுத்தப்பட்டுள்ளது. (நி-4)

## உலகின் மிகப்பெரிய தடுப்பூசி திட்டம் தொடக்கி வைத்தார் பிரதமர் மோடி

(டில்லி)

உலகின் மிகப்பெரிய தடுப்பூசி திட்டத்தை பிரதமர் மோடி நேற்று ஆரம்பித்து வைத்ததையடுத்து, நாடு முழுவதும் 3006 மையங்களில் தடுப்பூசி போடும் பணி ஆரம்பமானது.

இந்தியாவில் கொரோனாவுக்கு எதிரான தடுப்பு மருந்துகளான கோவிஷீல்டு, கோவேக்சின் ஆகிய மருந்துகளின் பல்வேறு கட்ட வெற்றிகரமான பரிசோதனைக்கு பின், இந்த தடுப்பூசிகளின் அவசர பயன்பாட்டுக்கு தலைமை மருந்து கட்டுப்பாட்டு அதிகாரி அனுமதி அளித்தார்.



முதல்கட்டமாக, சுகாதார பணியாளர்கள் மற்றும் கொரோனாத் தடுப்பு பணியில் ஈடுபட்டுள்ள பிற முன்கள பணியாளர்கள் என சுமார் 3 கோடி பேருக்கு தடுப்பூசி போடப்படும். அடுத்ததாக 50 வயதுக்கு மேற்பட்டவர்கள், 50 வயதுக்கு உட்பட்ட நோயாளிகள் என சுமார் 27 கோடி பேருக்கு போடப்படும் என்று தெரிவிக்கப்பட்டது.

அதன்படி, உலகிலேயே மிகப்பெரிய கொரோனாத் தடுப்பூசி திட்டத்தை இந்தியா நேற்று தொடங்கியது. இந்த மாபெரும் திட்டத்தை பிரதமர் நரேந்திர மோடி காணொளி வாயிலாக தொடங்கி வைத்தார். (நி-4)

## 12 நாடுகளுக்கு பயணத்தடை விதித்தது சவுதி அரேபியா



(ரியாத்)

கொரோனா வைரஸிற்கு எதிரான முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, அனுமதியின்றி 12 நாடுகளுக்கு பயணம் செய்யக்கூடாது என சவுதி அரேபியா தனது மக்களுக்கு எச்சரித்துள்ளது.

அதிக ஆபத்துள்ள நாடுகளில் உள்ள மக்கள் உடனடியாக சவுதி அரேபிய தூதரகத்தில் பதிவு செய்ய வேண்டும் என்று உள்துறை அமைச்சகம் அறிவுறுத்தியுள்ளது.

அனுமதிக்கப்பட்ட நாடுகளுக்கு பயணிக்க விரும்பும் சவுதி அரேபியர்கள் கொரோனா வைரஸ் நோய்க்கு எதிரான அனைத்து முன்னெச்சரிக்கை நடவடிக்கைகளையும் பின்பற்றுவதை உறுதிசெய்து, பாதுகாப்பற்றதாகக் கருதப்படும் பகுதிகளிலிருந்து விலகி இருக்க வேண்டும் என்றும் அமைச்சகம் மேலும் தெரிவித்துள்ளது. (நி-4)

## 15 ஆண்டுகளின் பின் நடைபெறவுள்ள தேர்தல்



(ஜெருசலேம்)

பலஸ்தீன ஜனாதிபதி மஹ்மூத் அப்பாஸ், பாராளுமன்றம் மற்றும் ஜனாதிபதித் தேர்தல்களை அறிவித்துள்ளார். அந்நாட்டில், நீண்டகால பிளவுகளுக்கு மத்தியில் 15 ஆண்டுகளுக்கும் பின்னர் மக்கள், தேர்தலைச் சந்திக்கவுள்ளனர்.

இஸ்ரேலின் ஆக்கிரப்பிலுள்ள மேற்குக் கரையில் மட்டுப்படுத்தப்பட்ட சுய இராச்சியத்தைக் கொண்ட பலஸ்தீனிய ஆணையகம், எதிர்வரும் மே 22 ஆம் திகதி சட்டமன்றத் தேர்தலை நடத்தவுள்ளது.

அத்துடன், வரும் ஜூலை 31 ஆம் திகதி ஜனாதிபதித் தேர்தலை நடத்தும் என அப்பாஸின் அலுவலகம் நேற்று முன்தினம் வெள்ளிக்கிழமை வெளியிட்ட அரசாணையில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# முல்லை.மாவட்ட மக்களுக்கான
## அனர்த்த முகாமைத்துவத்தினரின் அறிவித்தல்

(பனிக்கன்குளம்)

முல்லைத்தீவு மாவட்ட நீர்ப்பாசன திணைக்கள தகவலின்படி தமது ஆளுகையின் கீழ் உள்ள 20 பாரிய மற்றும் நடுத்தர குளங்கள் அனைத்தும் நிரம்பி உள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது. 24 அடி கொள்ளளவு கொண்ட முத்தையன் கட்டு குளம் 23' 9" அடியினை பெற்றுள்ளதாகவும் நிலைமைக்கு ஏற்ப வான்கதவுகள் திறக்க திட்டமிடப்பட்டுள்ளது. எனவே பண்டாரவன்னி, பேராறு, கனகரத்தினபுரம், வசந்தபுரம், கெருடமடு, கற்சிலைமடு மூன்றாம் கண்டம், மன்னாகண்டல் மூன்றாம் கண்டம் ஆகிய பகுதிகளில் வாழும் மக்கள் வெள்ள பாதிப்பில் இருந்து தங்களைப் பாதுகாத்துக் கொள்வதற்கு ஏற்ற வகையில் நடவடிக்கைகளை மேற்கொள்ளுமாறு முல்லைத்தீவு மாவட்ட அனர்த்த முகாமைத்துவ பிரிவினர் அறிவித்துள்ளனர். (5-4-281)

# வழிந்தோடாத வெள்ளநீர் கவனிக்காத அதிகாரிகள்
## மக்கள் விசனம்



(கிளிநொச்சி)

கொக்குத்தொடுவாய் வடக்கு கிராம உத்தியோகத்தர் பிரிவின் தாழ்நிலப் பகுதிகளிலுள்ள மக்களின் குடியிருப்புக்களில் கடந்த ஒரு வாரத்திற்கு மேலாக வெள்ள நீர் நிரம்பிக் காணப்படுகின்றது.

இதனால் அப் பகுதியிலுள்ள மக்களின் அன்றாட செயற்பாடுகள் பாதிக்கப்பட்டுள்ளதுடன், பாரிய சுகாதார நெருக்கடிகளையும் எதிர்நோக்கியுள்ளனர்.

இப்பகுதி மக்கள் எதிர்நோக்கும் பிரச்சினைதொடர்பில் முன்னாள் வடமாகாணசபை உறுப்பினர் துரைராசா ரவிகரன் அண்மையில் நேரில் சென்று பார்வையிட்டதுடன், கிராம உத்தியோகத்தர் மற்றும் அனர்த்த முகாமைத்துவத் திணைக்களத்தினர், கரைதுறைப்பற்று பிரதேசசபைத் தலைவர், கரைதுறைப்பற்று பிரதேசசெயலக அதிகாரிகள் ஆகியோருக்கு தெரியப்படுத்தியிருந்தார்.

அத்தோடு அப்பகுதி மக்களும் தாம் எதிர்நோக்கும் பிரச்சினை தொடர்பில் உரியவர்களுக்குத் தெரியப்படுத்தியுள்ளதுடன், தமது குடியிருப்புப் பகுதியிலுள்ள வெள்ள நீரினை அப்புறப்படுத்த நடவடிக்கை எடுக்குமாறும் கோரிக்கை விடுத்திருந்தனர்.

இந்நிலை தொடர்ந்தும் காணப்படுவதாக மக்கள் கவலை தெரிவிக்கின்றனர்.(5-4)

# வழமைக்குத் திரும்பும் போக்குவரத்துக்கள்

(கண்டாவளை)

முல்லைத்தீவு மாவட்டத்தின் மாந்தை கிழக்கு மற்றும் துணுக்காய் ஆகிய பிரதேச செயலாளர் பிரிவுகளில் உள்ள சுமார் 15இற்கும் மேற்பட்ட கிராமங்களுக்கான போக்குவரத்துகள் துண்டிக்கப்பட்டிருந்தன.

கடந்த சில நாட்களாக பெய்த கனமழை மற்றும் குளங்கள் நிரம்பி வான் பாய்ந்தமையால் போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டன.

குறிப்பாக முல்லைத்தீவு மாந்தை கிழக்கு பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட சிறாட்டி குளம் கிராமத்திற்கான போக்குவரத்து கடந்த 5 நாட்களுக்கு மேலாக துண்டிக்கப்பட்டிருந்தது.

அத்துடன் வவுனிக்குளம் தொடர்ந்து வான் பாய்ந்து வந்தமையால் பாலியாற்றினை அண்டிய கரையோரப் பிரதேசங்களும் வெள்ளத்தினால் பாதிக்கப்பட்டிருந்தன.

இதேபோன்று துணுக்காய் பிரதேச செயலர் பிரிவுக்குட்பட்ட கோட்டை கட்டிய குளம்,அம்பலப் பெருமாள் குளம், தென்னியன் யன்குளம்,மருதங்குளம் ஆகிய குளங்கள் வான் நிரம்பி வான் பாய்ந்தமையால் குறித்த கிராமங்களுக்கான போக்குவரத்துக்கள் துண்டிக்கப்பட்டிருந் தன.

தற்போது வெள்ள நீர் வடிந்து குளங்களின் வான் பாயும் அளவுகளும் குறைவடைந்துள்ளமையால் போக்குவரத்துக்கள் வழமைக்குத் திரும்பியுள்ளன. இருப்பினும் குறிப்பிட்ட சில இடங்களிலுள்ள வீதிகளில் வெள்ளநீர் காணப்படுகிறது. (5-315)

# மன்னாரில் அதிகரிக்கும் கொரோனா தொற்று கட்டுப்படுத்த நடவடிக்கை எடுக்கும் பொலிஸார்

(மன்னார்)

மன்னார் மாவட்டத்தில் கொரோனாத் தொற்று பரவல் நாளுக்கு நாள் அதிகரித்துள்ள நிலையில் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வர்த்தக நிலைய உரிமையாளர்கள் மற்றும் ஊழியர்கள் மீது நேற்றுக் காலை மன்னார் பொலிஸார் சட்ட நடவடிக்கைகளை மேற்கொண்டனர்.

தொடர்ச்சியாக மன்னார் மாவட்டத்தில் மேற்கொள்ளப்பட்டு வரும் பி.சி.ஆர். பரிசோதனை முடிவுகளின் அடிப்படையில் கொரோனாத்தொற்றாளர்களின் எண்ணிக்கை நாளுக்கு நாள் அதிகரித்து வருகின்றது.

இந்த நிலையில் மக்களை உரிய சுகாதார நடைமுறைகளைக் கடைப்பிடிக்குமாறு பொலிஸார் மற்றும் சுகாதாரத் துறையினர் தொடர்ச்சியாக வலியுறுத்தி வருகின்றனர்.

இந்த நிலையில் கொரோனா பரவலை தடுக்கும் முகமாக மன்னார் பொலிஸார் மேற்படி சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாத வர்த்தக நிலையங்கள், உணவகங்கள் மீது வழக்குப் பதிவு செய்து வருகின்றனர்.


குறிப்பாக முகக்கவசம் அணியாத வர்த்தகர்கள், கிருமித் தொற்று நீக்கிகள் மற்றும் வாடிக்கையாளர்கள் கைகழுவுவதற்கு ஒழுங்கான ஏற்பாடு மேற்கொள்ளாத வர்த்த நிலையங்கள் ஆகியவற்றின் மீதும் வழக்குப் பதிவு செய்யப்பட்டதுடன் ஒரு சில வர்த்தகர்கள் எச்சரிக்கப்பட்டு விடுவிக்கப்பட்டனர்.

அதேநேரத்தில் பொது இடங்களில் சமூக இடைவெளி மற்றும் முகக்கவசங்களை சரியான முறையில் அணியாமல் நடமாடும் பொதுமக்கள் மீது சட்ட நடவடிக்கை மேற்கொள்வதற்கான ஏற்பாடுகள் மன்னார் பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்டு வருகின்றமையும் குறிப்பிடத்தக்கது.

மக்கள் சுகாதார நடைமுறைகளைப் பின்பற்றாது நடந்து கொள்ளும் விதம் குறித்து உரிய அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு வரப்பட்டுள்ளமையும் குறிப்பிடத்தக்கது. (5-285)

# 101 ஆவது ஆண்டு நிறைவு 101 பானைகளில் பொங்கல்





(கிளிநொச்சி)

இரணைமடு குளத்திலிருந்து நீர்ப்பாசனத்தின் பொங்கல் விழா நீர்ப்பாசனம் ஆரம்பிக்கப்பட்டு101ஆண்டுகள் நிறைவை முன்னிட்டு வருடாந்த பொங்கல் விழா நேற்று சிறப்பாக கிளிநொச்சியில் இடம்பெற்றது.

குறித்த பொங்கல் நிகழ்வு நேற்றுக் காலை இரணைமடு விவசாய சம்மேளனத்தின் ஏற்பாட்டில் இடம்பெற்றது.

இரணைமடு கனகாம்பிகை அம்மன் ஆலயத்தில் இடம்பெற்ற இப் பொங்கல் நிகழ்வில் கிளிநொச்சி மாவட்ட அரசாங்க அதிபர் திருமதி ரூபவதி கேதீஸ்வரன், கிளிநொச்சி மாவட்ட பிரதி நீர்ப்பாசன பணிப்பாளர் த.ராஜகோபு, இரணைமடு நீர்ப்பாசன பொறியியலாளர் செந்தில் குமரன் உள்ளிட்ட பலர் கலந்துகொண்டனர். (100,316,350)

# வவுனியாவில் 1900 ஏக்கர் பயிர்கள் முற்றாக அழிவு

(நெளுக்குளம்)

வவுனியா மாவட்டத்தில் கடந்த சில தினங்களாக பெய்து வரும் கனமழை காரணமாக 1808 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கையும் 1081 ஏக்கர் உழுந்து பயிர்ச்செய்கையும் அழிவடைந்துள்ளதாக வவுனியா மாவட்ட கமநல அபிவிருத்தி திணைக்களத்தின் பிரதி ஆணையாளர் இ.விஜயகுமார் தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவிக்கையில், கடந்த சில நாட்களாக கனமழை பெய்து வருகின்றது. இந்நிலையில் 97 குளங்களின் கீழே செய்கை பண்ணப்பட்டிருந்த 1808 ஏக்கர் நெற்பயிர்ச்செய்கை முழுமையாக அழிவடைந்துள்ளதுடன், 1081 ஏக்கர் உழுந்து பயிர்ச்செய்கையும் அழிவடைந்துள்ளது.

குறித்த பயிர் களிற்கான காப்புறுதியை செய்திருப்பவர்களிற்கு அதற்கான காப்புறுதித் தொகை வழங்கப் படும் என தெரிவித்தார்.

இதேவேளை வவுனியாவில் அனைத்து குளங்களும் வான் பாய்ந்து வருகின்ற நிலையில் கனமழை நீடிக்கும் பட்சத்தில் மேலும் பயிர்கள் அழிவடைவதற்கான சந்தர்ப்பங்கள் உண்டு எனவும் தெரிக்கப்படுகிறது. (5-299)




கருகம்பனை இந்து இளைஞர் கழகமும் சித்திரமேழி பழனியானந்தன் சனசமூக நிலையமும் இணைந்து முன்னெடுக்கும் விதையனைத்தும் விருட் சமே செயற்றிட்டத்தின் கீழ் மன்னார் மாவட்டத்தில் வெள்ளாங்குளம் அரசினர் தமிழ் கலவன் பாடசாலை, மூன்றாம் பிட்டி அரசினர் தமிழ் கலவன் பாடசாலை தேவன் பிட்டி றோமன் கத்தோலிக்க தமிழ் மகா வித்தியாலயம் ஆகிய 3 பாடசாலைகளைச் சேர்ந்த 96 மாணவர்களுக்கு கற்றல் உபகரணங்கள் வழங்கி வைக்கப்பட்டன. (படம்:-தவசீலன்)

தெய்வ அருளில் ஒருவனுக்கு நம்பிக்கை இருக்குமானால் அவன் வாழ்வின் எல்லா வகையான கஷ்டங்களையும் விபத்துக்களையும் எளிதில் கடந்து விடுவான். அவனை எதுவும் அசைக்க முடியாது. *ஸ்ரீ அரவிந்த அன்னை*

வலம்புரி
TP: 021 222 3378
website : www.valampurii.lk

## தளர்ந்தேன் எம் பிரான் எனைத் தாங்கிக் கொள்ளே!

பறட்டைக் காட்டுக்கு கறட்டி ஓணான் பஞ்சவர்ணக்கிளி என்ற சொற்பதம் தரும் கருத்து மிகவும் ஆழமானது.

பறட்டைக் காடுகளைத் தேடி பஞ்சவர்ணக் கிளிகள் ஒருபோதும் வருவதில்லை. வரப் போவதுமில்லை.

ஆக, பறட்டைக் காட்டில் இருக்கக்கூடிய கரட்டி ஓணான்தான் அங்கு பஞ்சவர்ணக் கிளி. இதுதான் பறட்டைக் காடுகளின் தலைவிதியும் கூட.

ஆம், பறட்டைக் காடுகளில் வானுயர்ந்த மரங்கள் கிடையா. முதிரை, பாலை, கருங்காலி என்ற வர்க்கத்தை நினைத்தும் பார்க்க முடியாது.

மாறாக ஈஞ்சு, எரிக்கிலை, கள்ளி, காரை, விடத்தல் போன்ற முள்ளு மரங்கள் அடங்கிய பற்றைகளே அங்கு வாசம் செய்யும்.

எனவே பற்றைக் காடுகள் எழில்மிகுந்த வனங்களுடன் ஒருபோதும் ஒப்பிடக்கூடியவை அல்ல என்பதோடு இதனை முடிவுறுத்திக் கொள்ளலாம்.

இப்போது இலங்கையில் கொரோனாத் தொற்று உச்சமடைந்துள்ளது.

இருந்தும் கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முடக்கிவிட முடியாத நிலையில் அரசாங்கம் உள்ளது.

ஏலவே கொரோனாத் தொற்றைக் கட்டுப்படுத்திய நாடு என்ற பெருமைக்கு உரிமை கோரிய இலங்கை, கொரோனா இரண்டாவது அலையில் அகப்பட்டு கன்னா பின்னா என்ற நிலைமைக்கு வந்துவிட்டது.

உண்மை கொரோனாவைக் கட்டுப்படுத்துவதற்காக நாட்டை முடக்கினால், இலங்கையின் பொருளாதாரம் அதலபாதாளத்துக்குப் போய்விடும்.

இப்போதும் இலங்கையின் பொருளாதாரத்தை எதுகொண்டும் தூக்கிவிட முடியாது என்றளவிலேயே நிலைமை உள்ளது.

இந்நிலையில் கொரோனாவை மையப்படுத்தி நாட்டை முடக்கினால் எல்லாம் அம்போ என்றாகிவிடும்.

இந்நிலையில் சந்தைகளைத் திறப்பது, மண்டபங்களில் நிகழ்வுகளை நடத்துவதற்கு அனுமதிப்பது என்ற நிலைமைக்கு அரசாங்கம் வந்துவிட்டது.

கொரோனா உச்சமடைந்திருக்கும் இவ்வேளையில், அரசாங்கம் எடுத்த இந்தத் தீர்மானம் எங்கே போய்முடியும்? என்பதைக் காலம்தான் கணிப்பீடு செய்ய வேண்டும்.

எதுவாயினும் கொரோனாத் தடை மருந்து மக்களுக்கு வழங்கப்படுவதற்குள் கொரோனா தாண்டவமாடினால் என்ன செய்ய முடியும்.

எம்பிரானே! தளர்ந்தேன் எனைத் தாங்கிக் கொள்ளே.

# வவுனியா பட்டாணிச்சூர் கிராமம் முடக்கத்திலிருந்து நாளை விடுவிப்பு

(வவுனியா)

வவுனியாவில் கொரோனா தொற்று அடையாளம் காணப்பட்ட நிலையில் தனிமைப்படுத்தப்பட்டிருந்த பட்டாணிச்சூர் பகுதி நாளை திங்கட்கிழமை விடுவிக்கப்படவுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

வவுனியா பட்டாணிச்சூரை சேர்ந்த கர்ப்பிணிப் பெண் மற்றும் பல்கலைகழக மாணவர் ஒருவருக்கு கொரோனா தொற்று உறுதிப்படுத்தப்பட்ட நிலையில் குறித்த கிராமம் கடந்த நான்காம் திகதி முடக்கப்பட்டிருந்தது. இந்நிலையில் தொற்று உறுதிசெய்யப்பட்டவர்களுடன் தொடர்புகளை பேணிய பலருக்கு பி.சி.ஆர் பரிசோதனைகளும் முன்னெடுக்கப்பட்டிருந்தது.

இதேவேளை குறித்த கிராமம் முடக்கப்பட்டு நேற்றுடன் 12 நாட்கள் கடந்துள்ள நிலையில் நாளை திங்கட்கிழமை விடுவிக்கப்படவுள்ளது.

இதேவேளை வவுனியா நகரில் கொரோனா தொற்றாளர்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ள நிலையில் நகரப்பகுதிகள் உட்பட 19 கிராம சேவையாளர்கள் பிரிவுகளில் தனிமைப்படுத்தல் ஊரடங்குசட்டம் அமுல்படுத்தப்பட்டுள்ளது. அவற்றில் பசார் வீதி, தர்மலிங்கம் வீதி, சந்தை வீதி, கந்தசாமி கோவில் வீதி, ஹொறவப்பொத்தானை வீதியின் ஒருபகுதி என்பன தொடர்ந்தும் முடக்கப்படுவதுடன் ஏனைய பகுதிகள் நாளை திங்கட்கிழமை விடுவிக்கப்படவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

(ம-3,250,299)

# ஐஸ்கிறீமில் கொரோனா வைரஸ்

## சீனாவில் கண்டறிவு

(சீனா)

சீனாவில் தயாரிக்கப்பட்ட 4,800 இற்கும் மேற்பட்ட ஐஸ்கிறீம் பெட்டிகளில் கொரோனா வைரஸ் உள்ளடங்கியிருப்பது கண்டறியப்பட்டுள்ளது.

ஐஸ்கிறீமில்கொரோனா வைரஸ் கண்டறியப்பட்டதை அடுத்து சீனாவின் டியன்ஜின் மாநகராட்சியில் ஐஸ்கிறீம் தயாரிக்கும் தொழிற்சாலையின் அனைத்து ஐஸ்கிறீம்களின் விற்பனைக்கும் தடை விதிக்கப்பட்டு, அந்த தொழிற்சாலை முடக்கப்பட்டுள்ளது.

எனினும் நடவடிக்கை எடுக்கப்படுவதற்கு முன்னரே 65 ஐஸ்கிறீம் பெட்டிகள் விற்பனை செய்யப்பட்டுவிட்டதாக சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

இந்நிலையில் இவற்றை வாங்கி உட்கொண்டவர்களைக் கண்டறியும் முயற்சியில் அதிகாரிகள் ஈடுபட்டுள்ளனர்.

அத்துடன், இந்த ஐஸ்கிறீம் தயாரிப்பு நிறுவன ஊழியர்கள் 1,662 பேர் சுய தனிமைப்படுத்தப்பட்டு, கொரோனா பரிசோதனைக்கு உட்படுத்தப்படவுள்ளனர்.

இந்த தொழிச்சாலைக்கு நியூசிலாந்தில் இருந்தும், உக்ரைனில் இருந்தும் பால் பவுடர் இறக்குமதி செய்யப்பட்டது கண்டறியப்பட்டுள்ளது.

ஐஸ்கிறீம் தொழிற்சாலையில் வேலை செய்துவந்த யாரேனும் ஒருவரிடம் இருந்து கொரோனா வைரஸ் பரவியிருக்கலாம் என சீன அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

ஐஸ்கிறீமில் மனித தொடர்புகளிலிருந்து கொரோனா பரவியிருக்கலாம் என லீட்ஸ் பல்கலைக்கழகத்தைச் சேர்ந்த நுண்ணுயிரியல் நிபுணர் டாக்டர் ஸ்டீபன் கிரிஃபின் தெரிவித்துள்ளார்.


ஐஸ்கிறீம் பாலில் இருந்து தயாரிக்கப்பட்டு உறைகுளிரில் சேமிக்கப்படுவதால் அவற்றில் வைரஸ் எளிதாக உயிர்வாழும். எனினும் அனைத்து ஐஸ்கிறீம்களிலும் கொரோனா இருக்கும் என நாம் அச்சமடையத் தேவையில்லை எனவும் டாக்டர் ஸ்டீபன் கிரிஃபின் குறிப்பிட்டார். (ம-3)

## மின்சாரம் தடைப்படும்

உயர்அழுத்த மற்றும் தாழ் அழுத்த மின் விநியோக மார்க்கங்களின் கட்டமைப்பு மற்றும் பராமரிப்பு வேலைகளுக்காக நாளை 18 ஆம்திகதி திங்கட்கிழமை காலை 8 மணியிலிருந்து பிற்பகல் 5 மணிவரை

**வவுனியா பிரதேசத்தில்** மகாகச்சக்கொடிய கிராமம், சின்னசிப்பிக்குளம், வீரபுரம் ஆகிய பிரதேசங்களிலும் மின் சாரம் தடைப்படும்.

# இயேசுநாதரின் திருவாக்கியங்கள்



## சாந்தமான மனம் வேண்டும்

❖ பொறுமையுள்ளவர்கள் பூமியை சுதந்தரித்து அமைதிப்பெருக்கில் பேரானந்தம் அடைவார்கள்.

❖ மகனே! நல்ல போதனையை மறக்காதே. என் கட்டளைளை உன் இதயம் கடைபிடிக்கட்டும். அவைகள் தான் உனக்கு நெடுநாள் வாழ்வையும், தீர்க்க ஆயுளையும், சாந்தியையும் அள்ளி அள்ளித் தரும்.

❖ திராட்சை மது சிவப்பாய் இருக்கும்போதும், மதுக் கோப்பையில் அதன் வர்ணம் பளபளப்பாய்ப் படியும் போது அது தானாகவே இயங்கும் போதும் அதைப் பாராதே! முடிவில் அது பாம்பைப்போல கடித்து, வீரியனைப் போல் கொட்டும்.

❖ சாந்தமான மனம் உடலுக்கு ஜீவன். ஆனால், பொறாமையோ ஒரு எலும்புருக்கி.

❖ அடங்காதவர்களை எச்சரியுங்கள். பலஹீன மனம் படைத்தவர்களைத் தேற்றுங்கள். எல்லா மனிதர்களிடமும் பொறுமையாய் இருங்கள்.

❖ பொல்லாதவர்களைக் குறித்து எரிச்சலடையாதே. நியாயக்கேடு செய்கிறவர் மீது பொறாமை கொள்ளாதே. ஏனெனில் அவர்கள் புல்லைப் போல வெகுசீக்கிரத்தில் அறுப்புண்டு, பசும்பூண்டைப் போல வாடிப் போய் விடுவார்கள்.

# நாடு திரும்பிய நால்வருக்கு கொரோனாத் தொற்று

(கொழும்பு)

இலங்கைக்கு வெளிநாட்டில் இருந்து வந்த மேலும் நான்கு பேர் கொரோனா தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

நேற்று சனிக்கிழமை மொத்தம் 695 பேர் கொரோனாத் தொற்றினால் பாதிக்கப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது.

இதேவேளை மத்திய கிழக்கு, ஜேர்மனி, இந்தியா மற்றும் சீனா ஆகிய நாடுகளில் இருந்தும் பலர் நாடு திரும்பியதாக அறிவிக்கப்பட்டுள்ளது. (நி-4)

# ஹற்றனில் மாணவனுக்கு தொற்று

## மாணவர்கள், ஆசிரியர்கள் தனிமைப்படுத்தலில்

(ஹற்றன்)

மாணவனுக்கு கொரோனாத் தொற்று உறுதி செய்யப்பட்ட நிலையில் அவர் கடந்த தினங்களில் பாடசாலைக்கு சென்றுள்ளமை கண்டறியப்பட்டு சக மாணவர்கள் 53 பேர் மற்றும் ஆசிரியர்கள் சிலரும் தனிமைப்படுத்தப்பட்டுள்ள சம்பவம் ஹற்றனில் இடம்பெற்றுள்ளது.

ஹற்றன் நகரிலுள்ள பிரபல பாடசாலையொன்றில் தரம்-10 இல் கல்வி பயிலும் மாணவர் ஒருவரின் தந்தை கொழும்பில் இருந்து திரும்பிய போது கினிகத்தேனை கலுகல சோதனைச் சாவடியில் மேற்கொண்ட பி.சி.ஆர். பரிசோதனையில் தொற்று உறுதியானதையடுத்து அவர் தனிமைப்படுத்தல் நிலையத்திற்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளார். இதையடுத்து குறித்த தொற்றாளரது குடும்பத்தினர் பி.சி.ஆர். பரிசோதனைக்குட்படுத்தப்பட்டிருந்தனர்.

குறித்த பரிசோதனை முடிவுகள் நேற்று முன்தினம் வெளிவந்த நிலையில் மாணவனுக்கும் தொற்று ஏற்பட்டுள்ளமை உறுதி செய்யப்பட்டுள்ளது.

இதையடுத்தே குறித்த பாடசாலையின் மாணவர்கள் 53 பேரும் ஆசிரியர்கள் சிலரும் தனிமைப்படுத்தலுக்கு உட்படுத்தப்பட்டுள்ளதாக ஹற்றன் டிக்கோயா நகரசபை பொதுச்சுகாதார பரிசோதகர் தெரிவித்தார். (நி-4)

# 40 மில்லியன் பெறுமதியான

## தங்க ஆபரணங்கள், பணம் கொள்ளை

(கம்பஹா)

மோட்டார் சைக்கிளில் வருகை தந்த இருவர் தனியார் நிதி நிறுவனமொன்றில் பாரிய கொள்ளையில் ஈடுபட்டு தப்பிச் சென்றுள்ளனர்.

கம்பஹா - மிரிஸ்வத்த பகுதியிலுள்ள நிதி நிறுவனமொன்றிலேயே இந்த சம்பவம் இடம்பெற்றுள்ளதாக பொலிஸார் தெரிவித்தனர்.

40 மில்லியன் ரூபா பெறுமதியான பணம் மற்றும் தங்க ஆபரணங்கள் கொள்ளையிடப்பட்டுள்ளதாக பொலிஸார் குறிப்பிட்டனர்.

இந்தச் சம்பவம் குறித்து விசாரணைகளை நடத்த 5 பொலிஸ் குழுக்கள் களத்தில் இறக்கப்பட்டுள்ளன. (நி-4)

# சட்ட விதிமுறைகளை மீறியோர் கைது

(கொழும்பு)

தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறிய குற்றச்சாட்டில் மேலும் 35 பேர் கைது செய்யப்பட்டுள்ளதாக பொலிஸ் ஊடகப் பேச்சாளரும் பிரதி பொலிஸ்மா அதிபருமான அஜித் ரோஹண தெரிவித்துள்ளார்.

நாட்டில் அமுல்படுத்தப்பட்டுள்ள தனிமைப்படுத்தல் சட்ட விதிமுறைகளை மீறுவோர் தொடர்பாக கருத்து தெரிவிக்கும்போதே அவர் இவ்வாறு குறிப்பிட்டுள்ளார். (நி-4)

# மேய்ச்சல் தரை வேண்டுமென வலியுறுத்திப் போராட்டம்

(ஏறாவூர்)

மட்டக்களப்பு மயிலத்தமடு மாதவனை பண்ணையாளர்களின் மேய்ச்சல் தரை உடனடியாக பெற்றுத்தரப்பட வேண்டுமென வலியுறுத்தி இந்தக் கவனயீர்ப்புப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது. கால்நடைப் பண்ணையாளர்கள் தொடர்ச்சியாக தாக்குதலுக்குள்ளாகுவதாகவும் அவர்கள் தெரிவித்தனர்.

மட்டக்களப்பு- திருகோணமலை வீதியை சித்தாண்டியில் மறித்து பொங்கல் பானையை வீதியில் வைத்து பண்ணையாளர்கள் கவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

இதனையடுத்து அங்கு சென்ற ஏறாவூர் பொலிஸார் வீதியில் வைக்கப்பட்டிருந்த பொங்கல் பானையை அகற்றுவதற்கு நடவடிக்கை எடுத்திருந்தனர். பின்னர் போக்கு வரத்துக்கு இடையூறு ஏற்படாத வகையில் வீதியின் இருமருங்கிலும் நின்று பண்ணையாளர்கள் கனவனயீர்ப்பில் ஈடுபட்டனர்.

சுமார் இரண்டு மணித்தியாலங்களின் பின்னர் சம்பவ இடத்திற்கு வந்த பிரதேசசபை உத்தியோகத்தர்களிடம் தமது கோரிக்கை அடங்கிய மகஜரை பண்ணையாளர்கள் கையளித்தனர். அதனையடுத்து கவனயீர்ப்புப் போராட்டத்தில் ஈடுபட்டவர்கள் அங்கிருந்து கலைந்து சென்றனர். (நி-4)

# மீண்டும் ஆட்சியை கைப்பற்றுவோம்

## ரணில் சூளுரை



**(கொழும்பு)**

**ஜே.ஆர். ஆட்சியை கைப்பற்றியது போன்று மீண்டும் ஆட்சியை கைப்பற்றியே தீருவோம் என ஐக்கிய தேசியக் கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க சூளுரைத்துள்ளார்.**

காலகட்டங்கள் வெவ்வேறாயினும் சிறந்த திட்டமிடலே இங்கு முக்கியமாகின்றது.

எனவே வெற்றி இலக்கை நோக்கிய பயணத்தை ஆரம்பித்துள்ள நிலையில் அதற்காக ஒன்றிணைந்து செயற்பட முன்வருமாறு அனைத்து உறுப்பினர்களுக்கும் ஐக்கிய தேசிய கட்சியின் தலைவர் ரணில் விக்கிரமசிங்க அழைப்பு விடுத்துள்ளார்.

ஐக்கிய தேசியக் கட்சியின் பிரதி தலைவர் ருவன் விஜேவர்தன மற்றும் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார உட்பட புதிய பதவிகளுக்கு தெரிவானவர்களை கொள்ளுப் பிட்டியிலுள்ள இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடிய போதே மேற்கண்டவாறு ரணில் விக்கிரமசிங்க தெரிவித்தார்.

இந்த சந்திப்பில் முன்னாள் நிதி அமைச்சர் மங்கள சமரவீர மற்றும் சிவில் செயற்பாட்டாளர்களும் கலந்து கொண்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. அவர் மேலும் தெரிவிக்கையில்,

ஐக்கிய தேசிய கட்சியில் தற்போது ஏற்படுத்தப்பட்டுள்ள மாற்றங்கள் குறித்து மக்கள் மத்தியில் நம்பிக்கை தளிர்விட்டுள்ளது. கிராமத்தை பின்னணியாக கொண்ட ஒருவருக்கு கட்சியின் பொதுச்செயலாளர் பதவி வழங்கப்பட்டமை சிறந்ததொரு விடயமாகும்.

1977களில் பெரும்பான்மையுடன் நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றிய ஜே.ஆர். ஜயவர்தனவின் பயணத்தையே நாம் தொடர வேண்டியுள்ளது. அன்று ஜே.ஆர். உடன் இருந்த அனைவரும் பாராளுமன்ற உறுப்பினர்கள் அல்ல.

அன்றைய சூழலும் இன்றைய நிலைமையும் வெவ்வேறு என்றாலும் சிறந்த திட்டமிடலே எம்மை வெற்றி இலக்கை நோக்கி கொண்டு செல்லும். எனவே கட்சியின் வெற்றி இலக்கை நோக்கிய திட்டத்தை தயாரிக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள்.

மிக குறுகிய காலத்தில் தற்போதைய அரசாங்கம் மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்துள்ளது. எதிர்க்கட்சியும் அதே நிலையில் தான் உள்ளது. ஹரின் மற்றும் ரஞ்சன் ஆகியோரை ஐக்கிய தேசிய கட்சி தனிமைப்படுத்தி விடக்கூடாது .

அவர்களுக்கு ஏற்படக்கூடிய அநீதிகளின் போது நிச்சயம் குரல் கொடுக்க வேண்டும். தேவைப்படின் நீதிமன்றத்தின் ஊடாகவும் நடவடிக்கை எடுக்க முடியும் என அவர் மேலும் தெரிவித்தார். (நி-4)

# அதிகரிக்கும் தொற்றாளர்கள் கண்டி முடக்கப்படுமா?

(கண்டி)

கண்டி மாவட்டத்தில் மட்டும் நேற்று முன்தினம் 59 பேர் புதிதாக கொரோனாத் தொற்றுக்கு உள்ளான நிலையில் கண்டுபிடிக்கப்பட்டுள்ளதாக மத்திய மாகாண சுகாதார சேவைகள் திணைக்களம் தெரிவித்துள்ளது.

அத்துடன் கண்டி மாவட்டத்தில் இதுவரை கொரோனா நோயாளர்களின் எண்ணிக்கை 1891ஆக உயர்வடைந்துள்ளது. அதேபோன்று அந்த மாவட்டத்தில் கொரோனா மரணம் 17 ஆக அதிகரித்துள்ளது.

மேலும் கண்டி மாநகர எல்லைக்குட்பட்ட பகுதியில் 384 பேருக்கும், அக்குறணையில் 340 பேருக்கும், பஹத்ததும்பர பகுதியில் 168 பேருக்கும் தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளது. எனவே அதிகரித்து வரும் தொற்றாளர்களை அடுத்து கண்டி நகரமும் விரைவில் முடக்கப்படலாம் என தகவல்கள் தெரிவிக்கின்றன. (நி-4)

# நகரசபை தலைவர்களின் பதவிகள் பறிபோனது

(கொழும்பு)

பலாங்கொடை மற்றும் எம்பிலிப்பிட்டி நகர சபைகளின் தலைவர்களின் சேவை இடைநிறுத்தப்பட்டுள்ளது.

இந்நிலையில், பலாங்கொடை மற்றும் எம்பிலிப்பிட்டிய நகர சபைகளின் தலைவர்களை பதவிகளிலிருந்து விலக்குவதற்கு சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கரி கொப்பேகடுவ நடவடிக்கை எடுத்துள்ளார்.

இதனடிப்படையில் அதன் பலாங்கொடை மற்றும் எம்பிலிப்பிட்டிய நகர சபைகளின் அதிகாரங்களை உபதலைவர்களுக்கு வழங்குவதற்கு வர்த்தமானி அறிவித்தலொன்று வெளியிடப்பட்டுள்ளது.

நகர சபை சட்டத்தை மீறிய குற்றச்சாட்டின் கீழ் குறித்த இருவரையும் பதவிவிலக்க, சப்ரகமுவ மாகாண ஆளுநர் டிக்கரி கொப்பேகடுவ வர்த்தமானி ஊடாக நடவடிக்கை எடுத்துள்ளமை குறிப்பிடத்தக்கது. (நி-4)

# 1000 ரூபா சம்பளப் பேச்சுவார்த்தை; இறுதி முன்மொழிவு சமர்ப்பிப்பு

(கொழும்பு)

பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கான நாளாந்த சம்பளமாக 1105 ரூபாவை பெறுவதற்கான இறுதி முன்மொழிவை இலங்கை பெருந்தோட்ட சம்மேளனம் தெரிவித்துள்ளது.

தொழிலமைச்சர் மற்றும் பெருந்தோட்ட சம்மேளனங்களின் தலைவர்களுடன் நேற்று முன்தினம் நடைபெற்ற கலந்துரையாடலின் போது தமது இறுதியான முன்மொழிவுகள் கையளிக்கப்பட்டதாக இலங்கை பெருந்தோட்ட தொழிலாளர் சங்கம் தெரிவித்துள்ளது.

மேலும் இவ்வறிக்கையில் பெருந்தோட்ட தொழிலாளர்களுக்கு நிலையான வருமான உயர்வை வழங்கும் இலக்குடன் இந்த முன்மொழிவுகள் கையளிக்கப்பட்டுள்ளதாகவும் நாளாந்த சம்பளம் 1000 ரூபாவிற்கு மேலதிகமானதாக இருப்பதை இந்த புதிய முன்மொழிவு உறுதிப்படுத்தி இருப்பதாகவும் இலங்கை பெருந்தோட்ட தொழிலாளர் சம்மேளனம் தெரிவித்துள்ளது.

குறித்த கலந்துரையாடலில் தொழிலமைச்சர் நிமல் ஸ்ரீபால டி சில்வா தலைமையில் நடைபெற்றது.

இதில் இராஜாங்க அமைச்சர் ஜீவன் தொண்டமான், இலங்கை தேசிய தோட்டத் தொழிலாளர் சங்கத் தலைவர் வடிவேல் சுரேஸ் எனப் பலரும் கலந்து கொண்டமை குறிப்பிடத்தக்கது. (நி)

## அமெரிக்காவின்...

களம் வெளிநாட்டு பயங்கரவாத அமைப்புகளின் திருத்தப்பட்ட பட்டியலை வெளியிட்டுள்ளது.

விடுதலைப் புலிகள் அமைப்பு தொடர்ந்தும் இந்தப் பட்டியலில் இடம்பெற்றுள்ளது.

வெளிநாட்டுப் பயங்கரவாத அமைப்புகளின் பட்டியலில் தமிழீழ விடுதலைப் புலிகள் அமைப்பு கடந்த 10.08.1997ஆம் ஆண்டு முதல் பட்டியலிடப்படுகிறது. (ம-3)

## தனியார் கல்வி...

தனியார் கல்வி நிறுவனங்களில் வகுப்புக்களை நடத்த சுகாதார சேவைகள் பணிப்பாளர் அனுமதி வழங்கியுள்ளார்.

அதனடிப்படையில் எதிர்வரும் 25 ஆம் திகதிக்கு பின்னர் மேலதிக வகுப்புக்களை நடத்த அனுமதி வழங்கப்பட்டுள்ளது.

ஒரு வகுப்பில் அதிகபட்சமாக 100 பேர் அல்லது 50% இருக்கை அளவிலான மாணவர்களுக்கு மாத்திரமே வகுப்புக்களை மேற்கொள்ள அனுமதி வழங்கப்பட்டுள்ளது. (ம-3)

## வடக்கில் 10...

குட்பட்ட பகுதிகளில் இருந்து பெறப்பட்ட மாதிரிகளை பரிசோதனைக்கு உட்படுத்தியதில் இவ்வாறு 10 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளது.

இதற்கமைவாக, வவுனியா மாவட்ட பொது வைத்தியசாலையில் இருவருக்கும் மன்னார் பொது வைத்திய சாலையில் ஒருவருக்கும் கோப்பாய் கொரோனா சிறப்பு சிகிச்சை நிலையத்தில் ஐவருக்கும், காங்கேசன்துறை தனிமைப்படுத்தல் நிலையத்தில் இருவருக்கும் என 10 பேருக்கு தொற்று உறுதி செய்யப்பட்டுள்ளதாக தெரிவிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ம-3,18,250,299)

## ஜனநாயகம்...

பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

மாறாக சர்வாதிகார போக்கில் பயணிப்பவராகவும் பாசிசவாதியாகவும் இருக்கக் கூடாது. எனவே ஜனாதிபதியின் அந்த கொள்கைக்கு எதிராக போராடுவோம் என்றும் அவர் மேலும் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் அமைந்துள்ள எதிர்க்கட்சி தலைவர் அலுவலகத்தில் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பின்போது அவர் இந்த விடயத்தினை தெரிவித்துள்ளார். (ம-3)

## 715 பேருக்கு...

சுகாதார அமைச்சின் தொற்று நோயியல் பிரிவு அறிவித்துள்ளது.

அதன்படி இதுவரை அடையாளம் காணப்பட்ட மொத்த நோயாளிகளின் எண்ணிக்கை 52 ஆயிரத்து 309 ஆக அதிகரித்துள்ளது. (ம-3)

## கொரோனா...

தெரிவித்தார்.

காலி - வெலிகம பிரதேசத்தில் நேற்று நடைபெற்ற நிகழ்வில் கலந்துகொண்ட சபாநாயகர், அங்கு ஊடகவியலாளர் எழுப்பிய கேள்விக்குப் பதிலளித்தபோதே மேற்கண்டவாறு கூறினார்.

கொரோனா ஆபத்தால் இரண்டு வாரங்களுக்கு பாராளுமன்றத்தை மூடுமாறு கோரிக்கை எழுந்துள்ள நிலையில் சபாநாயகர் அந்தக் கோரிக்கையை நிராகரித்துள்ளார். (ம-3)

## சர்வதேச குற்ற...

கட்சிகளின் தலைவர்களும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகளும் கூட்டாக ஒப்பமிட்டுக் கடிதம் அனுப்பி வைத்துள்ளனர்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் தலைவர் இரா.சம்பந்தன், தமிழ் மக்கள் தேசியக் கூட்டணியின் தலைவர் சி.வி.விக்னேஸ்வரன், தமிழ்த் தேசிய மக்கள் முன்னணியின் தலைவர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் மற்றும் சிவில் அமைப்புக்களின் பிரதிநிதிகள் ஆகியோரின் கூட்டுக் கையொப்பங்களுடன் அனுப்பி வைக்கப்பட்டுள்ள அந்தக் கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளதாவது,

இலங்கையின் உள்நாட்டுப் பொறிமுறை ஒன்று சாத்தியப்படாது என்பது புலனாகி இருக்கிறது.

இலங்கை தொடர்பாக பல்வேறு கட்டங்களில் ஜெனிவாவில் நடைபெற்ற மனித உரிமைகள் மாநாட்டில் மேற்கொண்ட தீர்மானங்களும் குறிப்பிடத்தக்க முன்னேற்றத்தைத் தரவில்லை.

இந்தத் தீர்மானத்தில் வலியுறுத்தப்பட்டிருந்த விடயங்கள் எவற்றையும் இலங்கை அரசாங்கம் நடைமுறைப்படுத்தி இருக்கவில்லை.

இந்தநிலையில், இந்த விடயத்தை சர்வதேச குற்றவியல் விசாரணைக்கு கொண்டு செல்லும் வகையில், ஐக்கிய நாடுகள் மனித உரிமைகள் பேரவையின் உறுப்பு நாடுகள், ஐக்கிய நாடுகளின் பாதுகாப்பு சபை மற்றும் பொதுச் சபை போன்றவற்றுக்கு பாரப்படுத்த நடவடிக்கை எடுக்க வேண்டும்.

அத்துடன், இந்த விடயம் தொடர்பான மனித உரிமைகள் ஆணையாளர், ஐக்கிய நாடுகளின் பொதுச் செயலாளருக்கு விளக்கமளிக்க வேண்டும்.

மேலும் இலங்கையை ஐக்கிய நாடுகளின் மனித உரிமைகள் பேரவை தங்களது மேற்பார்வையின் கீழ் வைத்துக் கொள்ளும் வகையில், பிரதிநிதி ஒருவரை நியமித்து, தற்போது சிறுபான்மையினருக்கு எதிராக இடம்பெறுகின்ற நிகழ்வுகள் குறித்து கண்காணிக்க வேண்டும்.

அத்துடன், சிரியாவில் போர்க்குற்றங்கள் குறித்து ஆதாரங்களை சேகரிப்பதற்காக நியமிக்கப்பட்டதைப் போன்ற பொறிமுறை ஒன்றை இலங்கை தொடர்பாகவும் உருவாக்கி, ஒரு வருடத்துக்குள் ஆய்வறிக்கை ஒன்றை பெற்றுக் கொள்ள நடவடிக்கை எடுக்க வேண்டும் என்றும் அந்த கூட்டறிக்கையில் வலியுறுத்தப்பட்டுள்ளது. (ம-3)

## கொரோனாத்...

ளது.

அதன்படி, இலங்கையில் கொரோனா தொற்றினால் உயிரிழந்தோரின் எண்ணிக்கை 256ஆக அதிகரித்துள்ளது.

அத்துல்கோட்டை பகுதியைச் சேர்ந்த 82 வயதான பெண்ணொருவரே உயிரிழந்துள்ளார். (ம-3)

## இலங்கையின்...

வர் ருவன் விஜேவர்தன மற்றும் பொதுச் செயலாளர் பாலித ரங்கே பண்டார உட்பட புதிய பதவிகளுக்கு தெரிவானவர்களை கொள்ளுப்பிட்டியிலுள்ள இல்லத்தில் நேற்று முன்தினம் சந்தித்து கலந்துரையாடியபோதே மேற்கண்டவாறு தெரிவித்தார்.

இதன்போது கருத்து வெளியிட்ட அவர்,

1977களில் பெரும்பான்மையுடன் நாட்டின் அதிகாரத்தை கைப்பற்றிய ஜே.ஆர். ஜெயவர்தனவின் பயணத்தையே நாம்தொடரவேண்டியுள்ளது.

கட்சியின் வெற்றி இலக்கை நோக்கிய திட்டத்தை தயாரிக்க அனைவரும் ஒத்துழைப்பு வழங்குங்கள்.

சாகல ரத்நாயக்க மற்றும் அனோமா கமகே ஆகியோர் இதற்கு தலைமை தாங்கி ஆலோசனைகள் பெற்று திட்டத்தை வரைவார்கள்.

மிகக் குறுகிய காலத்தில் தற்போதைய அரசாங்கம் மக்கள் மத்தியில் நம்பிக்கை இழந்துள்ளது. எதிர்க் கட்சியும் அதே நிலையில் தான் உள்ளது.

ஹரின் மற்றும் ரஞ்சன் ஆகியோரை ஐக்கிய தேசிய கட்சி தனிமைப்படுத்திவிடக்கூடாது. அவர்களுக்கு ஏற்படக் கூடிய அநீதிகளின் போது நிச்சயம்குரல் கொடுக்க வேண்டும். தேவைப்படின் நீதிமன்றத்தின் ஊடாகவும் நடவடிக்கை எடுக்க முடியும் என்றார். (ம-3)

# கொரோனா தடுப்பூசிகள்

## நாட்டுக்கு வராது ரணில் தெரிவிப்பு

(கொழும்பு)

கொரோனா தடுப்பூசிகளை நாட்டுக்கு கொண்டு வருவதற்கு அரசாங்கத்திற்கு எந்தவொரு திட்டமும் இல்லை என ஐக்கிய தேசியக் கட்சித் தலைவர் ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மிரிஹான பகுதியில் நேற்று இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார். அனைவருக்கும் மார்ச் மாதம் தடுப்பூசி கிடைக்கும் எனக் கூறப்பட்டுள்ளது.

எனினும், அது முழுமையாக உண்மைக்கு புறம்பானது என ரணில் விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார். (ம-3)


வலம்புரி
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603,
021 567 1532



தன நிதானய
திகதி - 2021.01.16
சீட்டிழுப்பு இலக்கம் - 406
K 10 33 43 81
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்



ஜாதிக சம்பத
சீட்டிழுப்பு திகதி 16/01/2021 சீட்டிழுப்பு இலக்கம் 1088
வெற்றி இலக்கங்கள்
C 8 5 7 6 7 4
தேசிய லொத்தர் சபை



கொவிசெத உத்தியோகபூர்வ முடிவுகள்
சீட்டிழுப்பு திகதி 16.01.2021
சீட்டிழுப்பு இலக்கம் 2664
ஆங்கில எழுத்து வெற்றி இலக்கங்கள்
Y 12 27 59 66
தேசிய லொத்தர் சபை



மஹஜன சம்பத
திகதி 2021/01/16
சீட்டிழுப்பு இலக்கம் 4369
ஆங்கில எழுத்து வெல்லப்பட்ட இலக்கங்கள்
E 5 0 3 4 8 6
தேசிய லொத்தர் சபை



மெகா பவர்
திகதி 16/01/2021
சீட்டிழுப்பு இலக்கம் 0736
வெற்றி எழுத்து சுப்பர் இலக்கம் வெற்றி இலக்கங்கள்
G 09 01 08 49 71



சீட்டிழுப்பு வாரம் 044
சீட்டிழுப்பு திகதி 16.01.2021
வெற்றி இலக்கங்கள்
04 06 16
வெல்லப்பட்ட மொத்தப் பரிசுத் தொகை ரூ. 23,22,980/=



அத கோடிபதி
தினம்: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 1165
வர்ணம்: மஞ்சள்
சீட்டிழுப்பு திகதி: 16.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 99,150,135
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
01 07 52 63 M
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.



சனிதா
தினம்: சனிக்கிழமை
சீட்டிழுப்பு இல: 3495
வர்ணம்: பச்சை
சீட்டிழுப்பு திகதி: 16.01.2021
இன்றைய ஜக்பொட் பரிசு ரூ. 40,721,425
வெற்றி இலக்கங்கள் ஆங்கில எழுத்து
10 19 32 53 Z
வெற்றி பெற்ற டிக்கட்டுக்கள் 6 மாதங்களுக்கு செல்லுபடியாகும்.



ராசி
சுப்பர் ஜக்பொட் 31,32,497/=
திகதி : 16.01.2021
வெற்றி வாரம் : 3046
வர்ணம் : இள நீலம்
வெற்றி இலக்கங்கள் மகரம்
04 15 32 62
வெல்லப்பட்ட மொத்த பரிசுத் தொகை ரூ. 94,64,120



SUPER BALL
சீட்டிழுப்பு வாரம் 1339
நிறம் கரும் நீலம்
சீட்டிழுப்பு திகதி 16/01/2021
தினம் சனிக்கிழமை
வெற்றி எழுத்தும் இலக்கங்களும்
V 15 23 27 55
அடுத்த சுப்பர் ஜக்பொட் 63,571,371/=



சங்வர்தன வாசனாவ
உத்தியோகபூர்வ முடிவுகள்
வெற்றி வாரம் 402 திகதி 16.01.2021 வர்ணம் சிவப்பு
ஆங்கில எழுத்து O வெற்றி இலக்கங்கள் 09 32 57 விதி எண் 6
எதிர்வரும் சுப்பர் பரிசுப்பொதி ரூ. 12,992,184
6 மாதங்களுக்குச் செல்லுபடியாகும்.
தொ. பே.: 0112 333 546/47
Web: www.dlb.lk

## அறிவித்தல்

**கிளி/முருகானந்த கல்லூரி பழைய மாணவர் சங்க பொதுக்கூட்டம்**

இடம் - பாடசாலை மாநாட்டு மண்டபம்
காலம் - 04.02.2021 வியாழக்கிழமை
நேரம் - மு.ப 9.00 மணி
விடயம் - புதிய நிர்வாக தெரிவும் பாடசாலை வளர்ச்சி தொடர்பான விடயங்களை ஆராய்தலும்.

அனைத்து பழைய மாணவர்களும் தனிப்பட்ட அழைப்பாக இதனை கருதி சமுகமளிக்குமாறு கேட்டுக் கொள்கின்றோம்.

**த.நந்தகுமார்**
**செயலாளர்,**
**கிளி /முருகானந்த கல்லூரி**
**பழைய மாணவர் சங்கம்.**

(C-1184)

## விற்பனைக்கு

நோயாளர்களுக்கான
Adjustable Bed
Air Mattress விற்பனைக்கு.

(C-1183)

**076 333 9747**

## ENGLISH CLASS
## ஆங்கில வகுப்பு

பிரத்தியேக வகுப்புகள்
உங்கள் வீட்டிற்கு வந்து
கற்பிக்கப்படும்.

(5300)

**077 658 9443**
யாழ்ப்பாணம்

**அன்னா** EXPRESS Courier Services
விரைவுப் பொதிகள் சேவை

3-6 நாட்கள்

**லண்டன் 1000/=**
**070 3305500**
**075 3305500**

(C-1156)

976,கே.கே.எஸ் வீதி
நாச்சிமார்கோவிலடி
யாழ்ப்பாணம்

சங்கானை, ஆவரங்கால், நெல்லியடி, சங்கத்தானை
பளை, கிளிநொச்சி, புதுக்குடியிருப்பு, முல்லை
மல்லாவி, மன்னார், வவுனியா, கொழும்பு

லண்டன்,பிரான்ஸ்,ஜேர்மனி உட்பட 20 நாடுகளுக்கு மேலதிக கட்டணமாக வரிகள் ஏதும் இல்லை
15,000 /- பெறுமதி வரை காப்புறுதி இலவசம்
உங்கள் வீடுகளுக்கே வந்து பொதிகள் பெற்றுக்கொள்ளப்படும்.(யாழ் மாவட்டம் முழுவதும்)

**வலம்புரி**
விளம்பரத் தொடர்புகளுக்கு
021 221 7603 021 567 1532

## வேலை வாய்ப்பு

இலங்கையின் தலைசிறந்த நிறுவனத்தின் கிளையானது கோண்டாவிலில் புதிதாக ஆரம்பிக்கப்படவுள்ளது. அதற்கான உடனடி வேலைவாய்ப்பினை நிறுவனம் கோரியுள்ளது.

**க. பொ. த. உயர்தர சித்தி அடிப்படை தகைமையாக கொள்ளப்படுகின்றது.**

(5303)

**077 499 3186**

## விரைவு பொதிகள் சேவை

**V2 TRAVELS**
**UK-1000/=Kg**
பிரான்ஸ் / ஜெர்மனி / டென்மார்க் / நெதர்லாந்து / இத்தாலி / சுவிஸ் **1150/=Kg**

எமது நேரடிக்கிளைகள்
- யாழ்ப்பாணம்
- புத்தூர்
- கோப்பாய்
- நெல்லியடி
- கொடிகாமம்
- மானிப்பாய்
- புதுக்குடியிருப்பு
- சுன்னாகம்
- கிளிநொச்சி
- பருத்தித்துறை
- வல்வெட்டித்துறை
- சாவகச்சேரி

(C-1102)

**0768226240** DHL

## வேலை வாய்ப்பு

எமது MB நிறுவனத்தின் இவ் வருடத்திற்கான வேலை வாய்ப்பு வழங்கப்படவுள்ளது. நாடெங்கிலும் விஸ்தரிக்கப்பட வுள்ள எமது கிளைகளுக்கு கீழ்க்காணும் பதவிகளுக்கு விண்ணப்பங்கள் கோரப்படுகின்றன.

**மேற்பார்வையாளர், அலுவலக உத்தியோகத்தர், உதவி முகாமையாளர், கிளை முகாமையாளர், உதவியாளர்கள்.**

10, O/L, A/L படித்த இளைஞர், யுவதிகள் அனைவரும் விண்ணப்பிக் கலாம், உங்கள் தகைமைகளுக்கேற்ப பதவிகள் வழங்கப்படும், ஒவ்வொரு பதவிகளுக்கும் பயிற்சிகள் வழங்கப்படும், பயிற்சியின் போது 18,000 /= - 22,000/= பயிற்சியின் பின்னர் 45,000/= + நேர்முகத் தேர்வில் நபர்கள் தெரிவு செய்யப்படுவர்.

(5305)

**077 200 0018, 077 174 3524**

## வேலை வாய்ப்பு

உலகளாவியரீதியில் முதல்தர காப்புறுதி நிறுவனமொன்றில் வேலை வாய்ப்பு வெற்றிடங்கள்.

- **விற்பனை முகாமையாளர்**
- **நிதி ஆலோசகர்**

மேலதிக தொடர்புகளுக்கு

(C-1179)

**Call : 077 354 5351**
**Whatsapp / Viber : 074 021 0683**

## விற்பனைக்கு

யாழ். மாநகர சபை எல்லைக்குள் மானிப்பாயில் வீதிக்கு அண்மையாக வீட்டுடன் கூடிய 2 1/4 பரப்பு காணி விற்பனைக்கு உண்டு.

(5286)

தொடர்பு
**077 328 8279**

## சிங்கள வகுப்புக்கள்

தரம் 6 - 11 வரையான மாணவர் களுக்கான இரண்டாம் மொழி சிங்கள வகுப்புகள் நடைபெறுகின்றது.
இடம் - இலங்கை வேந்தன் திருமண மண்டபத்திற்கு அருகில்

(5298)

**074 039 9017**
**077 990 6867**

## மணமக்கள் தேவை

தங்கள் தேடுதலுக்கும்; தகுதிகளுக்கும் ஏற்ற மணமக்களை தெரிவு செய்ய விரும்பின் எம்முடன் தொடர்பு கொள்ளவும்.
கனடா 1992, சுவிஸ் 1983, லண்டன் 1988 உள்ள மணமக்களுக்கு மணமக்கள் தேவை.

(5296)

**IMO 0094762049298**
**077 0237639**
Whatsapp
**004917643399372**

# மரண அறிவித்தல்



## திருமதி கனகம்மா நடராசா

சரசாலை வடக்கை பிறப்பிட மாகவும் இல. 711, சிவிக்சென்ரர், வட்டக்கச்சியை வசிப்பிடமா கவும் கொண்ட திருமதி நட ராசா கனகம்மா நேற்று (16.01.2021) சனிக்கிழமை காலமானார்.

அன்னார் காலஞ்சென்ற வல்லி புரம் - பொன்னாச்சி தம்பதியின ரின் அன்பு மகளும் காலஞ்சென்ற நடராசாவின் அன்பு மனைவியும் காலஞ்சென்ற செல்லம்மா, செல்லாச்சி ஆகியோரின் அன்புச் சகோதரியும், காலஞ்சென்ற தங்கம்மா, காலஞ்சென்ற சரவணமுத்து, இராசம்மா, கனகசபை ஆகியோரின் மைத்துனியும் S. N. செல்வராசா (ஓய்வுபெற்ற விவசாய பாடவிதான உத்தியோகத்தர்), காலஞ்சென்ற ஜெயராசா (ஜெயம்), குலராசா (சட்டவாளர், லண்டன்), ஞானராசா(லண்டன்), ஜெயவதனி (வதனி புடவையகம் -லண்டன்), பகிதராசா ஆகியோரின் அன்புத் தாயாரும், தங்கேஸ்வரி, காலஞ்சென்ற தங்கராணி, றீற்றாராணி(லண்டன்), பவானி (லண்டன்), வெற்றிவேல் (லண்டன்) ஆகியோரின் அன்பு மாமியாரும் விபூசனா, ஜதீசனா (லண்டன்), சோபனா (லண்டன்), சஞ்சீவன் (கால்நடை அபிவிருத்தி போதனாசிரியர், பூநகரி), நிதர்ஷனா (யாழ். மருத்துவபீடம்), குவேதினி (யாழ். சித்த மருத்துவபீடம்), சண்ஜீவராசா (SLIIT), அஞ்சலா, கேப்பிரியன், அபிசனா, மதுசனா, பாவனா (Orthoptics student), கவினா (லண்டன்), பிரதீபன் (Best Studio), கௌரீசன் (லண்டன்), அமலகுமார் (லண்டன்), தனுசன் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் சேதா, நேமிதா, றைஸ்வரியா (லண்டன்), றிஸ்விகா (லண்டன்), டிவானிகா ஆகியோரின் அன்புப் பூட்டியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக் கிரியை இன்று (17.01.2012) ஞாயிற்றுக் கிழமை காலை 9.00 மணியளவில் அன்னாரின் இல்லத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக பன்னங்கண்டி இந்துமயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளுமாறு கேட்டுக்கொள்கின்றோம்.

(C-1181)

இல. 711, சிவிக்சென்ரர்,
வட்டக்கச்சி.

தகவல்:-
குடும்பத்தினர்

# மரண அறிவித்தல்



## இரத்தினம் சிவநாதன்

(ஜெய்ப்பூர் செயற்கை கால் நிலையம், சுண்டிக்குளி)

தோற்றம் 22.04.1955 மறைவு 15.01.2021

சரவணையை பிறப்பிடமாகவும் யாழ்ப்பாணம் கொட்டடி வைரவர் கோவிலடியை வசிப்பிடமாகவும் கொண்ட இரத்தினம் சிவநாதன் நேற்று முன்தினம் (15.01.2021) வெள்ளிக் கிழமை இறைவனடி சேர்ந்தார்.

அன்னார் காலஞ்சென்ற இரத் தினம் - தெய்வானை (கமலாதேவி) தம்பதிகளின் அன்பு மகனும் மகாநாதன், மகாலட்சுமி, கோமதி ஆகியோரின் அன்புச் சகோதரரும் புஷ்பலதா, ரவிச்சந்திரன், மதிமோகன் ஆகியோரின் அன்பு மைத்துனரும் ருத்திகா, சதுர்த்திகா ஆகியோரின் அன்பு பெரியப்பாவும் பிரசாந், நிசாந்தன், நிசாந்தினி, சுபாஜினி, கஜேந்தினி, தயாநிதி, ஜனுசன், மதுசன், டிலக்சி ஆகியோரின் அன்பு மாமனாரும் ஜெனுசனின் அன்புப் பேரனும் ஆவார்

அன்னாரின் இறுதிக் கிரியைகள் இன்று (17.01.2021) ஞாயிற்றுக்கிழமை காலை 7.00 மணியளவில் இல. 180, பிரதான வீதியில் அமைந்துள்ள வைற்கவுஸ் மண்டபத்தில் நடைபெற்று பூதவுடல் தகனக் கிரியைக்காக கோம்பயன் மணல் இந்து மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக்கொள்ளவும்.

(5304)

ஆஸ்பத்திரி வீதி,
யாழ்ப்பாணம்.
021 222 6268

தகவல்:-
லிங்கநாதன் குடும்பத்தினர்

இப்பத்திரிகை வலம்புரி அன்கோ ஸ்தாபனத்தாரால் இல.3,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் றோட், யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 17.01.2021 இல் அச்சிட்டு வெளியிடப்பட்டது.

Registered as a Newspaper in Srilanka

விலை : 30.00

வலம்புரியின் வாரமலர்

# சங்குநாதம்

நாதம் 292

Viber 076 636 3378

வள்ளுவர் ஆண்டு 2052 | 17.01.2021 | தொலைபேசி : 021 222 3378



## நல்லூர் நுழைவாயிற் கோபுரம்









உங்கள் சங்குநாதத்தில் அரசியல் - அறிவியல் - ஆன்மிகம் - ...

# ஆலடி மாநாடு

**வாத்தியார்** வைத்திலிங்கம் தலைமையில் ஆலடி மாநாடு கூடியது.

மாநாட்டு உறுப்பினர்கள் அனைவரும் ஆலடிக்கு வந்திருந்தனர்.

இறைவணக்கத்துடன் ஆலடி மாநாட்டை ஆரம்பிப்பம் என்று வாத்தியார் கூற, அனைவரும் எழுந்து நின்று இறை வணக்கம் செலுத்தி அமர்ந்தனர்.

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிலைமைகள் எப்படி இருக்குதாம் கங்காணி கார்த்திகேயன் வினவினார்.

இடிச்ச தூபியை மீளவும் கட்டுவது என்ற உறுதிமொழியோட நிலைமை தணிஞ்சிருக்குது. விதானையார் பதிலளித்தார்.

**மூப்பர்:** அதுசரி... யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில கொஞ்சக் காலம் ஒரே குழப்பமாக இருக்குது. என்ன சங்கதியோ தெரியல்ல.

**சாத்திரியார்:** எல்லாம் பரமேஸ்வரப் பெருமானின்ர விளையாட்டுத்தான்.

**மூப்பர்:** என்ன சாத்திரியார் சொல்லுறியள்.

**சாத்திரியார்:** யாழ். பல்கலைக்கழகத்தில வீற்றிருக்கின்ற பரமேஸ்வரப் பெருமான் பாலஸ்தாபனத்திலயல்லோ இருக்கிறார். அவரை எண்டைக்கு உரிய இடத்தில வைத்துக் கும்பாபிஷேகம் செய்யினமோ அண்டைக்குத்தான் தோஷம் கலையும்.

இருந்தாலும் நிவாரணம் தேட முடியாத தோஷங்களும் அங்க இருக்கத்தான் செய்யுது.

**கங்காணி:** என்ன சாத்திரியார் குழப்புறியள்.

சிவனுக்குப் பாலஸ்தாபனம் செய்து இன்னும் கும்பாபிஷேகம் செய்யாமல் காலம் கடப்பதால தோஷம் ஏற்படத்தான் செய்யும்.

ஆனால் நீங்கள் வேற தோஷங்களும் இருக்கு என்கிறியள். அதுதான் எனக்கு ஒண்டும் புரியல்ல.

**சாத்திரியார்:** இஞ்சே கங்காணியார் யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தில இலட்சுமிகரமாக இருந்த நுழைவு வாயிலை உடைத்து நெடுவால் மாதிரி இரண்டு தூண்கள் கட்டியிருக்கினம்.

அதுமட்டுமல்லாமல் மிக நீண்டகாலமாக நுழைவு வாயிலில இருந்த இரண்டு பெரிய நந்திச் சிலைகளையும் அடித்து உடைத்தல்லோ போட்டினம்.



## உலகத் தமிழர்களை ஒருகணத்தில் ஒன்றுபடுத்திய முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி

அதோட வீதியால போறவர்கள் பார்வதி பரமேஸ்வரனை வணங்குகிறத்துக்காக சேர். பொன்.இராமநாதன் வீதியில ஒரு பாதை விடப்பட்டிருந்தது.

அந்தப் பாதையை மறைப்புச் செய்து ஒரு கட்டடம் அமைச்சு பலகைக் கதவல்லோ போட்டிருக்கினம்.

முந்தியெல்லாம் அந்த வாசலில கற்பூரம் ஏற்றி பரமேஸ்வரனை வணங்குகிற வழிபாடு நடந்தது.

அந்த இடத்து மக்களும் அந்தப் பாதையால பயணிக்கிறவியளும் இந்த வழிபாட்டைச் செய்தினம்.

இப்ப வழிபாடு செய்யப் போனால் மாணவர்கள் அங்க குந்தியிருந்து கதைக்கினம். பிறகு என்னெண்டு கற்பூரம் கொளுத்துறது, பூச்சாத்திறது.

**பண்டிதர்:** இதுகளைப் பற்றியெல்லாம் நாங்கள் கதைக்கக்கூடாது பாருங்கோ. யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின்ர பிரதான நுழைவு வாயிலில இரண்டு தூண்கள் வால் போல உயர்ந்து நிற்குது.

இது ஏன் எண்டு கேட்டுப் பாருங்கோ ஆருக்கும் தெரியுமோ எண்டு.

பொறியியல் பீடமும் வந்த பிறகு இப்படியொரு கட்டுமானம். என்ன செய்யிறது.

**வாத்தியார்:** சரி...சரி... முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபியை இரவோடு இரவு உடைச்சதால தானே உலகத் தமிழர்கள் ஒன்று பட்டினம். இந்தக் கைங்கரியத்தை செய்த யாழ்ப்பாணப் பல்கலைக்கழக நிர்வாகத்தை நிச்சயம் பாராட்டத்தான் வேணும்.

**பண்டிதர்:** எங்கட தமிழ் மக்களின்ர உன்னதமான உணர்வுக்கு அனைவரும் மதிப்பளிக்க வேணும்.

இராணுவம் துவக்கை நீட்டிக் கொண்டு நின்ற போதிலும் எங்கட மக்கள் அகிம்சை வழியில தங்கட ஆதங்கத்தை முன்வைத்தினம்.

இந்த உணர்வு தான் உலகத் தமிழர்களை ஒரு கணப்பொழுதில ஒன்று பட வைத்தது.

**சிறாப்பர்:** பண்டிதர் ஐயா கூறுவது முற்றிலும் உண்மை.

முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைக்கப்பட்டுவிட்டது எண்ட உடன அந்தச் சாமத்திலும் எங்கட பிள்ளையள் துடித்தெழுந்ததைப் பார்த்தபோது, எங்கட தமிழ் இனம் வாழும். தமிழன்ர உணர்வை, இனப்பற்றை எவராலும் எதுவும் செய்ய முடியாது என்பது மீண்டும் நிரூபிக்கப்பட்டிருக்குது.

**வாத்தியார்:** நீங்கள் சொல்லுறது எல்லாம் சரி, ஆனா ஒரு விடயத்தில மட்டும் எனக்கு உடன்பாடில்லை.

**விதானையார்:** என்ன வாத்தியார் சொல்லுறியள்.

**வாத்தியார்:** முள்ளிவாய்க்கால் நினைவுத் தூபி உடைக்கப்பட்டபோது அது தொடர்பில சிலர் செய்த விமர்சனங்கள் நயத்தக்க நாகரிகமாக இருக்கல்ல.

எவரையும் நாங்கள் விமர்சிக்கலாம், கருத்துக்களை முன்வைக்கலாம். ஆனால் அந்த விமர்சனங்கள், கருத்துக்கள் நயத்தக்க நாகரிகத்தோடு இருக்க வேணும்.

யாருடைய சுய கௌரவத்தையும் பாதிக்கக் கூடிய வகையில் விமர்சனங்கள், கார்ட்டூன்கள் செய்வதைத் தவிர்ப்பது நல்லது.

எங்கட மன எழுச்சியை; ஆழமான கருத்தால, நியாயபூர்வமான கேள்விகளால, இது எங்கட இனத்தின் தாயகம் என்ற உரிமையோட கேட்கலாம்.

அதற்காக தனிப்பட்டவர்கள், அவர்களின் குடும்ப உறுப்பினர்கள் மனம் நோகக்கூடிய வகையில வாதங்களை, கருத்துக்களை முன்வைப்பது முற்றாகத் தவிர்க்கப்பட வேணும் என்பதுதான் என்ர தயவான கருத்து.

இவ்வாறு வாத்தியார் கூற, அதனைத் தானும் ஆமோதிப்பது போல ஆலடிப் பிள்ளையார் கோயில் கண்டாமணியும் ஒலிக்க, ஆலடியில் இருந்தவர்கள் எழுந்து கோயிலுக்குச் சென்றனர்.

ஆதித்தன்

# தமிழினம் கடந்து வந்த கடினமான பாதை

**இற்றைக்கு இரண்டு தசாப்பதத்திற்கு முன் தமிழினம் எப்பேர்ப்பட்ட இறுக்கத்துக்கு மத்தியில் வாழ்ந்தது என்பதை இன்றைய இளம் சமுதாயம் அறிந்து கொள்ள வேண்டும்.**

தனது உரிமை தட்டிப் பறிக்கப்பட்டதால் அதைப் பெற்றுக் கொள்ள ஆயுதம் ஏந்திய தமிழினம்பட்ட இன்னல்கள் கொஞ்ச நஞ்சமல்ல.

இற்றைக்கு ஐந்து தசாப்தங்களைக் கடந்து விட்டது. எவ்வளவோ வழிகளில் தமிழினம் உரிமைகளைக் கேட்டு விட்டது. ஆட்சியாளர்கள் அதை தருவதற்கு மறுப்பு மட்டுமே பதிலாய் அமைகின்றது.

இலங்கைத் திருநாட்டை பூர்வீகமாகக் கொண்ட இனம் தமக்கான உரிமைகளைக் கேட்பது ஒன்றும் தவறில்லையே.

ஆனாலும் அது இனவாதமாக எண்ணெய் ஊற்றப்பட்டுக் கொண்டிருப்பதுதான் ஏன் என்று புரியவில்லை.

தமிழினத்தின் உரிமைப்போர் முள்ளிவாய்க்காலில் மௌனிக்கப்பட்டதன் பின் பயங்கரவாதம் அழிக்கப்பட்டு விட்டது. தமிழினத்திற்கான அரசியல் தீர்வு வழங்கப்படும் என அரசுகள் கூறிக்கொண்டாலும் அவை வெறும் வெற்றுத் தோட்டாக்களாகவே இருக்கின்றன.

ஒட்டுமொத்த தமிழினமும் பயங்கரவாதிகளாகப் பார்க்கப்படும் நிலை மாற்றப்பட வேண்டியது.

ஆனாலும் தமிழன் என்றாலே பயங்கரவாதியாக சித்திரிக்கும் சிதில நிலையே இலங்கைத் திருநாட்டில் நடமாடுகிறது.



இற்றைக்கு இரண்டு தசாப்தத்திற்கு முன் தமிழினம் எப்பேர்ப்பட்ட இறுக்கத்துக்கு மத்தியில் வாழ்ந்தது என்பதை இன்றைய இளம் சமுதாயம் அறிந்து கொள்ள வேண்டும்.

இன்றைய நவீன உலகம் சிறிய கைத்தொலைபேசிக்குள்ளேயே உலகம் முழுவதையும் அடக்கி வைத்திருக்கிறது.

மின்சாரம், போக்குவரத்து, தொலைத்தொடர்பு, பௌதீக வளம் என இப்போது இருப்பதைப் போல்தான் 90களில் இருந்திருக்கும் என நினைப்பவர்கள் அந்த நினைப்பை மறுதலித்தே ஆக வேண்டும்.

தேசிய அடையாள அட்டை இல்லாமல் வீட்டின் கதவைத் தாண்ட முடியாத ஒரு காலத்தை இப்போது நினைத்துக்கூட பார்க்க முடியாது. ஆனாலும் அது தான் உண்மையானது.

வீதி அகலிப்பிற்காக உடைக்கப்பட்ட மதில்கள் எல்லாம் புதிதாக மிளிர்ந்து நின்றாலும் அன்று அடிமதிலில் ஓட்டை இட்டு அதன் வழி ஆயுதம் நீட்டி நிற்கும் நிலையைக் கடந்து வந்ததை நினைவில் வைத்திருக்க வேண்டும்.

வீதிகளில் சோதனைச் சாவடிக்கு 100 மீற்றர் தூரத்திற்கு முன்பே சைக்கிளினால் இறங்கி உருட்டிக் கொண்டு சென்று அடையாள அட்டை காட்டி உடல் சோதனை செய்யப்பட்ட பின்பு மீண்டும் சைக்கிளை உருட்டிக்கொண்டு சோதனைச் சாவடி எல்லை கடந்த பின் சைக்கிளில் ஓடிச் சென்றதை மறந்து விட முடியாது.

மாலை 6 மணிக்கு ஊரடங்குச் சட்டம் அமுலாகும். அதிகாலை 5 மணிக்கு ஊரடங்கு முடிவுறும். ஊரடங்கு காலத்தில் வெளியே செல்வதென்பது கத்திமேல் நடப்பதற்குச் சமமானது.

அவசர தேவை ஏதும் எனின் அதுவும் அரிக்கன் லாந்தருடனேயே வீதிக்கு வரமுடியும்.

நோயாளியை வைத்தியசாலைக்குக் கொண்டு செல்வதானாலும் அந்த நோயாளிகூட அடையாள அட்டையைக் கொண்டு சென்றே ஆக வேண்டும்.

வீதியில் செல்லும் போது லாந்தரைத் தலைக்கு மேல் தூக்கி செல்பவர்கள் முகம் தெரியக்கூடிய வகையில் செல்ல வேண்டும்.

அவசர தேவை ஏற்படும் போது வெளியே செல்ல வேண்டுமாயின் அநேகர் இரண்டு அரிக்கன் லாந்தரைக் கொண்டு செல்வது வழக் கமாயிற்று. ஒன்று காற்றில் அணைந்து போனாலும் மற்றையது உயிர் காக்கும் என்ற எண்ணமே அது.

இதைவிட பெரிய நெருக்கடி சுற்றிவளைப்பு எனும் "ரவுண்டப்".

சுற்றி வளைக்கப்படும் அந்தப் பகுதியில் உள்ள அனைவரும் குறித்த ஒரு இடத்திற்கு அழைத்துச் செல்லப்படுவார்கள். அங்கு "தலையாட்டி" என்பவர் ஒரு மறைவான இடத்தில் இருப்பார்.

தலையாட்டி இருக்கும் இடத்தினால் வரிசையாக நடந்து செல்ல வேண்டும். தலை ஆட்டி "தலை ஆட்டினால்" அவர் பிடிக்கப்படுவார். தடுத்து வைத்து விசாரணை செய்யப்படுவார். தண்டனைகளும் உண்டு.

வீட்டுக்கு வீடு குடும்பப்படம் எடுக்கப்பட்டு அதை ஒரு அட்டையில் ஒட்டி குடும்ப அங்கத்தவர்கள் பெயர்ப் பட்டியல் எழுதப்பட்டு கிராம உத்தியோகத்தர் மற்றும் பிரதேச செயலரின் கையொப்பம் இடப்பட்டிருக்கும்.

அதை பத்திரமாய் வைத்திருக்க வேண்டும். அதைவிட அதை பார் வையிடும்போது குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அங்கு நின்றிருக்க வேண்டும். இல்லையேல் அதற்குத் தனியான விசாரணை.

இப்படி நினைத்துப் பார்க்க முடியாத நரகக் கொடும் வாழ்க்கையை கடந்து வந்திருக்கிறது தமிழினம் என்பதை எம் இளம் பராயத்தினர் உணர்ந்து கொள்ள வேண்டும்.

தமிழினத்திற்கான தீர்வைப் பெற்றுத்தர தமிழர் தரப்புகளும் தவறிவிட்டன என்பதும் மறுக்க முடியாத உண்மை.

தமது சுயநல அரசியல் இலாபங்களுக்காக கிடைத்த சந்தர்ப்பங்களை எல்லாம் தவறவிட்டு காலத்திற்குக் காலம் உசுப் பேற்றல் வார்த்தைகளால் மக்களை மயக்கி, தாம் சுகபோக வாழ்க்கை வாழ்ந்ததே மிச்சமாகியது.

அதிலும் நல்லாட்சி அரசுக்கு ஒத்தாசை வழங்கி தமிழினத்துக்கான நீதியைப் பெற்றுத்தராமல் காலம் தளர்த்தியத்திற்கு எம் தமிழ்த் தலைமைகளே முக்கிய காரணமாகின்றனர் என்பது மறுக்க முடியாதது.

வன்னிப் பெரு நிலப்பரப்பில் ஒரு சிறிய பிரதேசத்துக்குள் பல்லாயிரக்கணக்கான பொதுமக்கள் முடங்கிக் கிடைக்க பயங்கரவாதம் அழிக்கப்படுகிறது எனும் போர்வையில் பல்லாயிரக்கணக்கான தமிழ் மக்கள் கொல்லப்பட்டதும்.

இன்று வரை யுத்தத்தின் வடுக்களைச் சுமந்து கொண்டு அன்றாட வாழ்வுக்காய் அல்லல்படுவோர்களையும் பார்த்து இரங்காத ஆட்சியாளர்கள் வேறு எதைக் கண்டு இரங்கப் போகிறார்கள்.

இன்றும் கூட தமிழ் இனப் படுகொலைக்கான நீதியைப் பெற்றுத்தர வேண்டும் என சர்வதேச மனித உரிமை செயற்பாட்டு அமைப்புகள் வலியுறுத்தி வரும் நிலையில் இலங்கையில் நடந்த இனப்படுகொலை ஆதாரங்களை இலங்கை அரசு அழிக்கிறது என இனப் படுகொலையைத் தடுத்தல் மற்றும் தண்டித்தலுக்கான சர்வதேச மையம் (ICPPG) ஐக்கிய நாடுகள் சபைக்கு மனுக் கொடுத்துள்ளது.

எதிர்வரும் மார்ச் மாதம் நடைபெறவுள்ள ஐ.நா.அமர்வில் ஈழத் தமிழர் விவகாரத்தை கையாள்வது தொடர்பில் தமிழ் தரப்புகள் ஒன்றுசேர்ந்து வரைபு ஒன்றை தயார் செய்துள்ளனர் என்பதுடன் இந்த வரைபை பாராளுமன்ற உறுப் பினர்களான நீதியரசர் சி.வி.விக்னேஸ்வரன், சட்டத்தரணி எம்.ஏ.சுமந்திரன், சட்டத்தரணி கஜேந்திரகுமார் பொன்னம்பலம் ஆகியோர் இணைந்து தயாரித்திருப்பது, தமிழர் வாழ்வில் விடிவெள்ளி தோன்றும் செயலுக்கான அத்திபாரமாக அமைந்துள்ளது.

ஆக, வெறும் வெற்றுக் கோசங்களையோ உணர்ச்சிவசப்படுதல்களையோ தவிர்த்து எம் இளம் சமூகத்தினர் தமிழ் மக்கள் கடந்து வந்த கடினமான பாதையை உணர்ந்து செயற்படுவது நல்லது.

அதிலும் எம் அரசியல் தலைவர்கள் சுயநல அரசியல் பேதங்களை மறந்து தமிழரின் நீதிக்காக செயற்பட வேண்டும்.

அவ்வாறு செயற்பட்டால் உங்கள் பெயர் தமிழ் மக்களின் மனங்களில் பொன்னெழுத்துக்களாய் பொறிக்கப்படும் என்பது நிச்சயமானது.

அபிமன்யு



# சிறுவர் அரங்கம்




அது ஒரு அழகிய கிராமம். அந்தக் கிராமத்தில் தோட்டக்காரன் ஒருவன் வாழ்ந்து வந்தான்.

அவன் தினமும் தோட்டத்தில் உள்ள செடி கொடிகளுக்கு தண்ணீர் ஊற்றி வந்தான். அவன் தண்ணீர் ஊற்றும்போதெல்லாம் அங்கு சில குரங்குகள் வந்து விளையாடும்.

பல வருடங்கள் அங்கேயே இருந்ததால் தோட்டக்காரனும் குரங்கும் நண்பர்களாயிருந்தன. தோட்டக்காரன் செய்யும் காரியங்களைப் பார்த்துப் பார்த்து குரங்குகளும் அப்படியே செய்து வந்தன.

ஒருமுறை தோட்டக்காரன் பக்கத்து ஊருக்குப் போக வேண்டியிருந்தது. குரங்குகளை அழைத்து விடயத்தைச் சொன்னான்.

குரங்குகளுக்கு சந்தோஷம். ஆனால், அவற்றுக்கு ஒரு பிரச்சினை. எந்தச் செடிக்கு எவ்வளவு தண்ணீர் ஊற்றுவது என்று தெரியவில்லை.

“அது ஒண்ணும் பெரிய பிரச்சினையில்லை. வேர் பெரியதாக இருந்தால் நிறைய தண்ணீர் ஊத்துங்க. சிறிய வேராக இருந்தால் கொஞ்சமாக தண்ணீர், ஊத்துங்க” என்று யோசனை சொன்னான்.

வெளியூர் போய் திரும்பி வந்து தோட்டத்தைப் பார்த்த தோட்டக்காரனுக்கு அதிர்ச்சி. அத்தனை செடிகளும் பிடுங்கப்பட்டு காய்ந்து கிடந்தன. “என்னாச்சு?” என்றான் தோட்டக்காரன்.

““வேர் பெருசா இருக்கா, சின்னதா இருக்கானு பார்க்கிறதுக்காக, செடியெல்லாம் பிடுங்கினோம்” என்றன குரங்குகள்.

**நீதி: புத்தியில்லாதவர்களிடம் பொறுப்பை கொடுப்பது, புத்தியில்லாத செயல்.**

# மகா அலெக்சாண்டரின் வரலாறு

## இதயம் கவர்ந்த இஸ்ஸஸ் யுத்தம்

44



எல்லோரும் படுக்கையில் படுங்கள். உங்கள் உடலில் ஏற்பட்டுள்ள காயங்களுக்கு நம்முடைய மருத்துவர்கள் மருந்தளிக்கப் போகிறார்கள்.

சொன்ன அடுத்த நொடி எல்லோரும் படுக்கையில் சாய்ந்தனர். மருத்துவர்கள் குழு காரியத்தில் இறங்கியது.

அலெக்சாண்டரும் தன் பங்கிற்கு மருத்துவப் பணிகளில் ஈடுபட்டார். அரிஸ்ரோட்டிலிடம் பெற்ற மருத்துவப் பயிற்சிகள் இப்போது அவருக்கு உதவின.

சிகிச்சைகள் முடிந்ததும் உணவருந்தும் இடத்திற்கு வந்தார் அலெக்சாண்டர். தன்னுடைய தோழர்களோடு சேர்ந்து பேசிக்கொண்டே சாப்பிடுவது அலெக்சாண்டரின் வழக்கம்.

இன்று நாம் சிறைபிடித்தவர்களில் யார் யாரெல்லாம் இருக்கிறார்கள்? நான்கு பேர் முக்கியமானவர்கள் மன்னா.

யார் அந்த நால்வர்? டேரியஸின் மனைவி, தாய் மற்றும் மணமாகாத இரண்டு மகள்கள்.

அடப்பாவமே... என்ன கொடுமை இது? மன்னா, இன்னொரு முக்கியமான விடயம். சீக்கிரமாகச் சொல்.

அவர்கள் நால்வரும் மன்னர் டேரியஸ் போரில் இறந்துவிட்டதாகவே நினைத்துக் கொண்டிருக்கிறார்கள்.


தவறு. மிகத்தவறு. உடனடியாக உண்மையைச் சொல்லிவிடுங்கள். வீரர்கள் சிலர் அந்த நால்வரிடம் விடயத்தைத் தெரிவிப்பதற்காகப் புறப்பட்டனர்.

அலெக்சாண்டருக்கு ஒரு யோசனை. ஏன் வீரர்கள் போய் விடயத்தைச் சொல்ல வேண்டும்? தாமே போய்ச் சொன்னால் அவர்களுக்கு நம்பிக்கையாக இருக்குமே?

நண்பர்களே வாருங்கள். நாம் சென்று அந்த நால்வரையும் மரியாதை நிமித்தம் சந்தித்துவிட்டு வரலாம்.

அலெக்சாண்டரைப் பார்த்ததும் எழுந்து நின்றனர் டேரியஸின் குடும்பத்தினர். இதற்கு முன்னர் யாருமே அலெக்சாண்டரைப் பார்த்ததில்லை. ஆனாலும் அவர் நடந்துவந்த தோரணை, மிடுக்கு எல்லாம் அவரை அலெக்சாண்டர் என்று நிரூபித்தன.

(தொடரும்)








## பொலிஸிடம் மாட்டிய அனுபவம் உண்டோ?

**தினேஷ்** — தொல்புரம்

**இந்த உலகத்திலே மனிதம் இருக்கா வியாசரே?**

இல்லை என்று சொல்லும் அளவில் இல்லை. மனிதம் எப்படி இருக்கிறது என்பதற்கு ஒரு சின்ன உதாரணம். சுன்னாகம் வீதி சமிக்ஞை விளக்குப் பகுதியில் சுமார் 80 வயது மதிக்கத்தக்க ஒரு மூதாட்டி அநாதரவாக கடைகளின் தாழ்வாரத்தில் வாழ்ந்து வருகிறார்.

சிக்னலில் நிற்பவர்களிடம் பசிக்கிறது என கைநீட்டுவார். முகக்கவசத்தை இன்னும் இறுக்கமாய் இழுத்து விட்டுவிட்டு தாம் அதைக் கவனிக்காதவர் போல் நிற்பவர்கள் பலர். இது தான் இன்றைய மனிதம்.

அன்பார்ந்த அதிகாரிகளே! அந்த மூதாட்டியை இல்லங்களில் எங்கேனும் சேர்த்து விட நடவடிக்கை எடுப்பீர்களா?

**ஸ்ரீ.லயன்** — வளலாய்

**முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்தத்தை நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள் வியா மாமா?**

சில வியங்கள் உணர்வு சார்ந்தது. உதாரணத்திற்கு பள்ளிக்கூடத்தில் நாம் படித்த வகுப்பறை எமது மனத்திரையில் இருந்து அழிக்கவே முடியாதது.

ஒரு வேளை அந்த வகுப்பறை இடிக்கப்பட்டால் எமது மனம் படும்பாடு எப்பேற்பட்டது என்பதை உணர்ந்தால் மட்டுமே வெளிக்கொணர முடியும்.

வன்னியில் கொத்துக் கொத்தாய் எமது உறவுகள் செத்து மடிந்தனர். அவர்களை நினைவு கூர பேரின அரசுகள் மறுக்கின்றன.

நினைவுத்தூபி சிலருக்கு வெறும் கல்லும் சிமெந்துமாய் இருக்கலாம். தமிழ் உணர்வுள்ளவர்க்கு அது உயிரிழந்த எம் உறவுகளின் ஆத்மாக்கள் குடிகொண்டிருக்கும் ஆலயம் அவ்வளவே.

**சேவகன்** — வதிரி

**நட்ட விதைகள் எல்லாம் நல்ல விதைகளா வியாசரே?**

நட்டவிதை எல்லாம் நல்லதே. ஆனால் அருகில் முளைக்கும் களைகளைப் பிடுங்காமல் விட்டுவிட்டால் அந்த களையின் தன்மை நட்ட விதையில் தெரியும்.

அதனால் விதை நட்டால் கவனமாய் களை எடுக்க வேண்டும்.

அது விவசாயத்திலும் சரி எம் தமிழர் வாழ்வியலும் சரி.

**சேகரி** — யாழ்ப்பாணம்

**பொலிஸிடம் மாட்டிய அனுபவம் உண்டோ?**

வீதியில் பொலிஸார் நின்றால் எதிரே வருபவர்களுக்கு கெட்லைட் அடித்து சிக்னல் காட்டுவது வழமையான ஒரு நல்ல விடயம். இப்படித்தான் நானும் எதிரே வந்த மோட்டார் சைக்கிளுக்கு பொலிஸ் என எச்சரிக்கை செய்ய கெட் லைட் அடித்து காட்டிவிட்டு சென்று கொண்டிருந்தேன்.

நான் கெட்லைட் அடித்து எச்சரிக்கை செய்தவர் மோட்டார் சைக்கிளைத் திருப்பி என்னைப் பின் தொடர்ந்து வந்து ஏன் கெட்லைட் அடித்தீர் எனக் கேட்டார்.

நானும் பொலிஸ் நிக்கிறான் என யதார்த்தமாய்க் கூறினேன்.

நானும் பொலிஸ் தான் என்ற பதில் அவரிடம் இருந்து வந்தது.

எனக்கு கையும் ஓடவில்லை காலும் ஓடவில்லை. பிறகெப்படி மோட்டார் சைக்கிள் ஓடுவது சொல்லுங்கள்.

**சுதன்** — குப்பிழான்

**அடிக்கல் நாட்டியாச்சமே?**

உணர்வுகளையும் மனிதாபிமானத்தையும் உடைத்துவிட்டு எப்பேற்பட்ட ஒத்தணம் கொடுத்தாலும் அந்த வலி ஆறப் போவதில்லை.

அடிக்கல் நாட்டப்பட்டது. அந்த அழுத்தம் இந்த அழுத்தம் என ஆயிரம் பேசினாலும் அடிக்கல் நாட்டப்பட்டதற்கு வலுவான காரணம் ஒன்று உண்டு. அது மாணவர் சக்தி என்பதே உண்மையானது.

உலகின் பல மாற்றங்களுக்கும் புரட்சிகளுக்கும் வித்திட்டது மாணவர் சக்தி என்பதைப் புரிந்து கொள்ள வேண்டியவர்கள் புரிந்து கொண்டால் சரி.

## முள்ளிவாய்க்கால் நினைவுத்தூபி இடித்ததை நீங்கள் எவ்வாறு உணர்கிறீர்கள் வியா மாமா?

**வாசுதேவ்** — உரும்பிராய்

**இயற்கையின் பக்கம் இருக்கும் நீதியை செயற்கை அநீதி பக்கம் சாய்க்க முடியுமா?**

உண்மை ஒருநாள் வெல்லும். இந்த உலகம் உன் பெயர் சொல்லும் அன்று ஊரே போற்றும் மனிதன் நீயடா நீயே.

பொய்கள் புயலாய் வீசும். ஆனால் உண்மை மெதுவாய் பேசும். அன்று நீயே வாழ்வில் வெல்வாய் கலங்காதே. இது கவிஞர் வைரமுத்துவின் கவிவரிகள்.

நீதிக்கு எப்போதும் தோல்வி கிடையாது. அநீதி புயலாய் வீசினாலும் நீதி தென்றலாய்ப் பேசும் என்பதே உண்மையானது. கலங்காதீர்.

**இன்பராஜ்** — வடமராட்சி

**ஏதும் விசேடமான கதை உண்டோ வியாசரே?**

சட்ட பூர்வம் இல்லாததை சட்ட பூர்வமாக்கிய கறுமாந்திரக் கதை உண்டு அதைச் சொல்லவா?

தமிழருக்கு உரிமைகள் எதையும் வழங்கக் கூடாது என வீரசேகர கொக்கரிக்கிறார் அதைச் சொல்லவா?

கொரோனா இன்னமும் சமூகத் தொற்றாக உருமாறவில்லை எனக் கூறுகிறார்கள் அதைச் சொல்லவா?

இந்தியவெளிவிவகார அமைச்சர் வந்து சொல்லும் வரை அமைதியாய் இருந்து விட்டு இப்போது செல் குத்தும் கதையைச் சொல்லவா? எதைச் சொல்ல தம்பி.

**சனிஸ்ரன்** — யாழ்ப்பாணம்

**மனதுக்குப் பிடித்த ஒன்று கை நழுவிப் போனால்?**

... எதை நீ கொண்டுவந்தாய்
அதை நீ இழப்பதற்கு...
இந்த வரி ஒன்றே போதுமானது.

உறவுகளும் சரி உடைமைகளும் சரி எதுவும் மனிதனுக்கு நிரந்தரமானது அல்ல.

அது வெறும் மாயை. இவை மாயை என்பதை உணர்ந்து கொண்டால் வாழ்வு வெறுமையாகும். அந்த வெறுமை வாழ்வில் எந்த பற்றுக்கும் இடமில்லை. இதுதான் பற்றறுத்தல் என்பது.



**அன்பு வாசகர்களே!**

அரசியல், ஆன்மீகம், நகைச்சுவை, பொழுதுபோக்கு என உங்கள் எண்ணத்தில் தோன்றிய கேள்விகளை 021 567 1532 எனும் இலக்கத்திற்கு SMS செய்யுங்கள் அல்லது ஆசிரியர், வியாசர் பதில்கள், இல. 03, 2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம் எனும் முகவரிக்கு எழுதி அனுப்புங்கள்.

## விழியினில் விளக்கு வை



வலிகள் நிறைந்த வாழ்க்கையிலே
வழி தடுமாறிடும் மானிடனே- உன்
விழியினில் விளக்கை ஏற்றி வைத்து
ஒளியினில் எழுதிடு உன் சரிதம்
துன்பங்கள் யாவும் ஏணிப்படி- உன்னை
தூக்கி நிறுத்திடும் நல்லபடி
இன்பமுடன் அவை யாவுமே
ஏற்றுவிட்டால் நீ எழுச்சி கொள்வாய்!
வேதனை நம்மைக் கண்டவுடன்
வெட்கத்தில் நாணும் நாளும் வரும்
சோதனை யாவும் எங்களுக்கு
சேவகம் புரியும் நேரம் வரும்- நம்
சாதனைப் பயணம் தொடருமென்றால்
சாத்தியமாகிடும் இவை யாவும்- நற்
போதனை யாவும் கேட்டுயர்ந்து
பேதமை அகற்றிடு மானிடனே!

செல்வி. பாமகள் சண்முகராஜா
கிளி/ இராமநாதபுரம் மேற்கு அ.த.க.பாடசாலை

## ஞாபகம் வருதே ஈருளி


**பி.வாசுகி, கொழும்பு**

காலங்கள் கடந்தாலும் கண்முன்னே நிழலாடி
மனதோடு உறவாடி மகிழ்வாகத் தெரிகிறதே
விஞ்ஞானம் இன்று வியாபாரம் ஆகிறதே
எஞ்ஞானம் இன்றியும் இருக்கிறது இவ்வுலகில்

காற்றோடு போராடிக் கரைகண்ட ஈருளிகள்
வீட்டுக்கொரு வீரனாக வீதியிலே வலம்வந்து
சுமைதாங்கி மடிதாங்கி சுமக்கின்ற சுமைகளை
எளிதாக எடுத்துவர இருந்ததே ஈருளிதான்

பணத்தின் விரயமின்றி படித்திடலாம் யாவரும்
எடுப்பார்கை பிள்ளைபோல இருந்திடுமே இல்லங்களில்
ஊக்கமான உடல்நலம் உடற்பயிற்சி தந்துவிடும்
உழைப்புக்குக் களைக்காது உதிரத்தைப் பெருக்கிவிடும்

எக்காலம் வந்தாலும் அக்கால மனிதரின்
கட்டுடம்பு வந்திடுமா கண்டறியா நோய்வருமா
ஏழைகளின் தோழனாக இருக்கிறானே இன்றுவரை
ஏட்டிக்குப் போட்டியாக ஆளுமிந்தப் பூமியிலே



## தடை... உடை...

எழுந்திரு தோழா!
இன்றும் நீ தூங்கினால்
எம் இனம் அழிந்து போகும்

கண்கண்ட காட்சிகளை
பார்த்தாயா?
காலத்தில் இல்லாத
துரோகங்கள்...
துரோகிகள்...

ஈனப் பிறவிகளின்
கதிரை மோகம்
எம் இனத்திற்கே
ஈனம் செய்கிறது

காலம் கடந்து
நீ விழித்தால்
அது கும்பகர்ணன் கதையாகும்

பாவாய் இருக்கும் எம் இனத்தில்
துளி விசங்களை அழித்திட
திடம் கொள்
முரண்டு பிடிப்பவர்களும்
முட்டுக்கட்டை போடுபவர்களும்
இருப்பர்...

இருந்தென்ன
உன் எழுகை
உயரமாக இருந்தால்
முட்டுக்கட்டைகள்
வெறும் மூட்டைகளே

தடை உடை உன்நடை

மாவை. நா.கஜேந்திரன்

## மௌனத்தின் தேடல் -511



## அடையாளம்

மனித மூச்சுக்கள் ஒவ்வொரு கணப்பொழுதும்
முடக்கப்பட்டுக் கொண்டிருக்கையில்
இது ஒன்றும் பெருமையல்ல
அறிவியல் படைத்த ஒரு பாதையில்
அழிவின் அருகே வந்துவிட்டோம் என
கலியுகம் படைத்த காட்சி இது

தேன்நிலா, நல்லூர்

## காலத்தின் மோகம்

தங்கத் தாரகையே
தரணி தன்னில் வந்துதித்த
சிவந்த இளம் ரோஜாவே
சிங்காரமாய் உடையணிந்து
சித்திரப்புதுமைகள் காட்டிடவே
அன்னையானவள்
அன்புடன் அளித்த கைகிலுக்கிதனை
கைவிலக்கியே
காலத்தால் கானம்பாடும்
கைத்தொலைபேசிதனை
கைகாட்டிடும் புதுமை
பறவை நீயல்லவா!

ஆ.பாலமதுஜா
யா/ வேம்படி மகளிர் பாடசாலை... 

## குழந்தையும் தெய்வமும்

குழந்தையும் தெய்வமும்
குணத்தாலொன்றாம்
குதூகலமாய் முகம் மலரும்
குறைகாணாது பிறரில்
உள்ளத்தில் உண்மை மட்டும்
ஒருபோதும் வஞ்சனைகள்
உயிர்த்தெழமாட்டாவாம்
உயர் பிறப்பு அதுவேயாம்
உணர்ந்திடுவீர் வாரீர்

த.சிவகாமி
நல்லூர்

## மாந்தரிலர் மாக்கள்

பிறந்தாரும் பொருளகளிலே
பிழை உணராக் குழந்தை
பெற்றோரும் மற்றோரும்
ஒன்றெனவே உணரும்
வஞ்சமனம் படைத்த சிலர்
வழங்கும் பொருள் மீது
வாசமுள மயக்க மருந்து
மருவிக் கொடுத்தபின்பு
மழலைகளைக் கடத்துவதும்
மாந்தரிலர் மாக்கள்

வைகதன்,
கொக்குவில்

## மௌனத்தின் தேடல் -512



அன்பு வாசகர்களே உங்கள் மனதில் தோன்றும் கவிதை, வியாசர் பதில்களை
ஆசிரியர் மௌனத்தின் தேடல்
வலம்புரி- சங்குநாதம்
இல.03,2 ஆம் ஒழுங்கை, பிறவுண் வீதி, யாழ்ப்பாணம்
எனும் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்

## நான் விளையாட

ஆத்தா இல்லாமல் பிறந்த குழாய்க் குழந்தை நான்
எனக்கு விளையாட தாத்தா கிலுக்கிய கிலுகிலுப்பையா?
அதைக் குப்பையில் போடு, இது ரோபோக்களின் காலம்
போனைத்தா அதை நோண்டி நான் "கண்டிக்கிரஸ்" விளையாட


பிரமன், கொக்குவில் மேற்கு

## பச்சிள பகுத்தறிவு

பச்சிளம் பாலகனும் பகுத்தறிகிறது
பண்பாட்டை தள்ளிய பாமரர் கண்டுபிடிப்பை
பதின்ம வயதிற்கு முன்பே- தன்
சிறப்பான சிந்தையை வெளிப்படுத்தும்
விந்தை வியப்பானதுதான்
குழந்தாய் உன் குதூகல தெரிவு
குறுகிய காலம்தான்
நவீனங்கள் உன்னை மழுங்கடித்துவிடும்

வி.டிலக்ஸன், யா/ தும்பளை சி.ம.வி.

# ஆணவம் விலகினால் ஆனந்தம்!



அவசர அவசரமாக வந்த இளம்பெண், அன்று காலையில் நடந்ததை தோழியுடன் பகிர்ந்து கொண்டாள்:
“நானும் மாமியாரும் காலையில் வோக்கிங் போய்ட்டு இருந்தோம். அது காட்டுப் பாதை.
திடீர்னு விநோதமான ஒரு பிராணி வந்து மாமியாரைப் பிடிச்சிடுச்சி...”
“கொஞ்சம் விளக்கமா சொல்லேன்...” தோழி கேட்டாள்.
“சொல்றேன்... நீளமான பல், தேவாங்கு மாதிரி உடம்பு சடை சடையா முடி... பேய் மாதிரி...”
“அடடா... என்ன பயங்கரம்...?”
“அவசரப்படாதே. அந்த விலங்கு எப்படி இருந்தது ன்னு இன்னும் நான் சொல்லவே ஆரம்பிக்கலே!”
ஆமாம். இதுவரை அவள் விபரித்தது தன் மாமியாரைப் பற்றிய வர்ணனை!
இது சிரிப்பதற்காக சொல்லப்பட்ட கதை என்றாலும் இதுபற்றி கொஞ்சம் சிந்திக்கவும் வேண்டியிருக்கிறது.
நமக்குப் பிடித்தவர்களைவிட, பிடிக்காதவர்களை நம் மனம் நன்றாக நினைவில் வைத்துக்கொள்கிறது.
‘உனக்கு உதவியவர்கள் யார்?’ என்று கேட்டால், உடனடியாக நினைவுக்கு வருவதில்லை. ‘உபத்திரவம் கொடுப்பவர் யார்?’ என்றால், உடனே சொல்ல முடிகிறது.
நல்லவர்களை நமக்கு அடையாளம் தெரியாமல் தடுப்பது எது?
ஆன்மிகம் சொல்லும் பதில் - ‘ஆணவம்!’
“வாழைப்பழத்தின் தோலை உரிப்பது போல உரித்து, ஆணவத்தை வீசி எறிந்துவிடு!” - என்கிறார் ஓஷோ.
‘அதை நடுப்பாதையில் போட்டுவிடாதே. ஏனெனில், எவரேனும் வழுக்கி விழுந்துவிடக் கூடும். பல பிறவிகளாக நீயே அதில் வழுக்கி விழுந்திருக்கிறாய்!’ என்பது அவரின் கூற்று.
ஆணவம்-நோயுற்ற மனம், ஆணவமின்மை- ஆரோக்கியமான மனம். ஆணவம் விலக விலக ஆனந்தம் நெருங்குகிறது. அதற்கு உதவி செய்கிறது ஆன்மிகம்.
ஒருவன் வாழைப்பழத்தோல் வழுக்கி விழுந்து விட்டான். அந்த வழியே வந்தவன், இவனை வைத்தியசாலையில் சேர்த்தான்.
அப்புறம் சொன்னான்: “நீ வாழைப்பழத்தோல்ல காலை வைக்கப் போறதை முன்னாடியே கவனிச்சுட்டேன்!”
“அப்படின்னா... அப்பவே நீ எனக்கு உதவி செஞ்சிருக்கலாமே?”
“நான் டாக்டருக்கு உதவலாம்னு நினைச்சுட்டேன்!”

# அப்புவின் பச்சைமட்டை அடி



-இந்திரபுத்திரன்-

60களில் வீட்டுமுறை மிகவும் வித்தியாசமானது.
ஓலையால் வேயப்பட்ட தாழ்வான வீடு. சாணம் இட்டு மெழுகப்பட்டிருக்கும்.
வீட்டின் இரு கரையும் திண்ணை இருக்காத வீடே இருக்காது.
மழை, வெயில், புயல் எது வந்தாலும் அசையாது.
அதுபோல ஆரோக்கியத்திற்கும் குறை இருக்காது.
இயற்கையுடன் ஒன்றி வாழ்ந்த எம் முன்னோர்கள் நோய் நொடி இன்றி நூறு வருடம் வாழ்ந்தார்கள் என்பது உண்மையானது.
இதுவும் 60களில் நடந்த சுவாரஷ்ய நிகழ்வொன்றே.
வீட்டில் எப்போதும் கைவிளக்கே எரியும். ஆச்சியும் அப்பவும் விறாந்தையில் படுப்பதே வழக்கம்.
படுத்தவுடன் தலைமாட்டில் இருக்கும் கைவிளக்கை அப்பு நூத்து விடுவார்.
அன்றையதினமும் வழக்கம் போல் ஆச்சி முந்திப் படுத்துவிட்டா. அப்பு வந்து படுத்ததும் விளக்கை நூத்து விட்டார்.
மழை சாடையா தூறினதால நாய் ஒண்டு வந்து ஆச்சிக்கும் அப்புக்கும் நடுவில படுத்திட்டுது.
நித்திரையிலை அசைஞ்ச அப்புவின்ர காலில தட்டுப்பட என்னடா இது எண்டு முழிச்சுப் பாத்தா நாய் ஒண்டு ஓடுது.
அப்புக்கு சரியான கடுப்பு.
அடுத்தநாள் பச்சை மட்டை ஒன்டை எடுத்து தலைமாட்டில வச்சிட்டு இண்டைக்கு வா எண்டு பாசை சொல்லிட்டுப் படுத்திட்டார்.
படுத்தவர் நித்திரையாய் போனார். திடீரெண்டு முழிச்சா நல்ல வளமா ஆச்சின்ற கால்மாட்டில் குசாலா படுத்திருக்கிறார் நாய்ப்பிள்ளை.
மெள்ளமா எழும்பின அப்பு தடவி தடவி பச்சை மட்டையை எடுத்து ஓங்கி விட்டார் பாருங்க ஒரு அடி.
“அட அறுவானே என்ர காலை முறிச்சுப் போட்டியே” எண்டு ஆச்சி குழறத்தான் அப்புவுக்கு விளங்கிச்சுது அடிச்சது நாய்க்கில்லை எண்டு.
அப்பு தடவி பச்சை மட்டையை எடுக்கேக்கையே நாய் மாறிட்டுது.
என்ன செய்யிறது அடிச்ச குற்றத்துக்கு ஆச்சிக்கு மாசக்கணக்கில நோவெண்ணெய் போட்டு உருவுறது அப்புதான் பாருங்கோவன்.

# கதை கதையாம் காரியமாம்...



# தேர்தல் ஜல்லிக்கட்டு கட்சிகள் மல்லுக்கட்டு



ஜல்லிக்கட்டில் பார்த்திருப்பீர்கள். மூச்சுக்காற்றில் புழுதி பறக்க... கண்களில் வெறி, திமில்களில் திமிரென ஆக்ரோஷத்துடன் சீறிவரும் 'பிடிபடாத' காளைகளைப் பார்த்து, மாடுபிடி வீரர்களெல்லாம் சிதறி ஓடுவார்கள். திமிலைத் தொட முனையும் வீரர்களை அந்தரத்தில் தூக்கிப்போட்டுப் பந்தாடி விடும் காளைகள். இப்படிப் பிடிபடாத காளைகளுக்கு எப்போதுமே மரியாதை அதிகம். 2021 தேர்தல் ஜல்லிக்கட்டில் தி.மு.க., அ.தி.மு.க என்கிற காளைகளைப் பார்த்து கூட்டணிக் கட்சிகளுக்கு எந்த அச்சமும் ஏற்படவில்லை... பெரியதாக மரியாதையும் இல்லை!" என்கிறார்கள் களத்தை உற்றுநோக்கும் அரசியல் பார்வையாளர்கள்.

### ராமதாஸின் 'ஓபரேஷன் 80'

'அ.தி.மு.க கூட்டணியில் பா.ம.க இடம்பெற வேண்டும்' என்பதில் தீர்மானமாக இருக்கிறார் முதல்வர் பழனிச்சாமி. இந்தத் தவிப்பில்தான், கடந்த டிசெம்பர் 27 ஆம் திகதி நடைபெற்ற அ.தி.மு.கவின் முதல் பிரசார பொதுக் கூட்டத்துக்கு, பா.ம.கவுக்கு மட்டும் அழைப்பு விடுத்தார். ஒருகாலத்தில் தி.மு.க., அ.தி.மு.க ஆகிய கட்சிகளுக்காக வாசலை திறந்துவைத்துக் காத்திருந்த ராமதாஸ் அன்ட் கோ, இப்போது எடப்பாடியை உதாசீனப்படுத்தி அனுப்பியது.

"முதலில் வன்னியர் இட ஒதுக்கீடு விவகாரத்தில் ஒரு முடிவெடுத்துவிட்டு வாருங்கள். பிறகு பேசலாம்" என்று நேரடியாகக் கூறிய ராமதாஸ் தரப்பு, மறைமுகமாக இரட்டை இலக்கத்தில் சீட்டு எண்ணிக்கை, கூடவே துணை முதல்வர் பதவி என்றெல்லாம் கோடிட்டுக் காட்டி டீல் பேசியதைக் கேட்டு அமைச்சர்கள் இருவருக்கும் மயக்கம் வராத குறையாம். அப்படியும் விடாமல், அடுத்தகட்டப் பேச்சுவார்த்தைக்கு அமைச்சர்கள் வேலுமணி, தங்கமணியை அனுப்பினார் எடப்பாடி. அவர்களிடம் 'ஓபரேஷன் 80' என்கிற வியூகத்தைக் கூறியிருக்கிறாராம் பெரிய மருத்துவர்.

மேற்கண்ட கூற்றை உறுதிப் படுத்து கிறது ராமதாஸின் டுவிட்டர் பதிவு. கூட்டணிப் பேச்சுவார்த்தை முடிந்து விட்டதாக பேச்சுக் கிளம்பிவிடக் கூடாது என்பதற்காகத்தான், 'இட ஒதுக்கீடு சம்பந்தமாகவே அமைச்சர்களுடன் பேசினேன். இதில் அரசியல் ஏதுமில்லை. இந்த விவகாரத்தில் சமரசம் கிடையாது' என்று சந்திப்பு நடந்த நாளிலேயே டுவீட் செய்தார் ராமதாஸ்.

### பாயத் தயாராகும் பா.ஜ.க.

மருத்துவரின் மல்லுக்கட்டு ஒருபக்கம் என்றால், அ.தி.மு.க மீது பாய்ச்சலுக்குத் தயாராகிறது பா.ஜ.க. இது பற்றிப் பேசிய அரசியல் பார்வையாளர்கள், "முதல்வர் வேட்பாளரை ஏற்றுக்கொள்ளவே இரண்டு மாதங்கள் முரண்டு பிடித்த கமலாலயம், சீட் விடயத்தில் இன்னும் நெருக்கடியை அதிகப்படுத்தவே செய்யும். 50 தொகுதிகளில் ஆரம்பித்து இப்போது 41 தொகுதிகளுக்குக் கீழ் குறைக்க முடியாது என்று விடாப்பிடியாக நிற்கிறார்கள்.

அ.தி.மு.க தரப்பிலோ, 'தி.மு.க கூட்டணியில் காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்படும் தொகுதிகளைவிட கூடுத லாக ஒரு தொகுதியை ஒதுக்குகிறோம்' என்று செய்த சமாதானத்தை பா.ஜ.க ஏற்க வில்லை. தங்கள் வசம் 150 சீட்டுகளை வைத்துக் கொண்டு, 84 சீட்டுகளை கூட்டணிகளுக்குப் பிரித்துக் கொடுப்பது தான் அ.தி.மு.கவின் திட்டம். அதில் வேட்டு வைக்க முனைகிறது பா.ஜ.க" என்றார்கள்.

### அந்தரத்தில் தே.மு.தி.க!

2019 பாராளுமன்றத் தேர்தலில் 'அதிகபட்ச டிமாண்டு'டன் இரண்டு திராவிட கட்சிகளுடனும் ஒரே நேரத்தில் கூட்டணி டீல் பேசிய தே.மு.தி.க., இன்று அந்தரத்தில் தொங்குகிறது. அ.தி.மு.க கூட்டணியில் அதிகபட்சம் 15 தொகுதி களைக் கொடுத்தாலே ஆச்சரியம் என்கி றார்கள். ஆனாலும், பேரத்தை உயர்த்து வதில் விடாப்பிடியாக நிற்கிறார் பிரேமலதா.

### திணறும் தி.மு.க!

தி.மு.க கூட்டணியைப் பொறுத்த வரை, 2019 பாராளுமன்றத் தேர்தலில் களம் கண்ட கூட்டணியே மீண்டும் களம் காண்கிறது. ஆனால், சீட் பங்கீடு காரணமாக கடைசி நேரத்தில் சில களேபரக் காட்சிகளும் அரங்கேறலாம் என்கிறார்கள் தி.மு.க தரப்பினர்.

## சூடு பிடிக்கும் தமிழக தேர்தல் களம்

கடந்த தேர்தலில் தி.மு.கவின் தோல்விக்கான காரணங்களில் ஒன்று, காங்கிரஸ் கட்சிக்கு ஒதுக்கப்பட்ட அதிகபடியான சீட்கள் என்று நினைக்கிறது தி.மு.க தலைமை. இது குறித்துப் பேசிய தி.மு.கவின் வட மாவட்ட மூத்த தலைவர் ஒருவர், "கருணாநிதி காலமாக இருந்திருந்தால், கோபாலபுரத்தில் உட்கார்ந்து பேசி முடித்துக்கொள்ளலாம். ஆனால், ஸ்டாலினிடம் அவர் கட்சியினரே நீண்ட நேரம் உரையாட முடியாது. கூட்டணிக் கட்சியை அவர் எப்படிக் கையாளுவார் என்பது சொல்லித் தெரிய வேண்டியதில்லை.

சமீபத்தில் ஐபேக் நடத்திய சர்வேயில், 'காங்கிரஸ் கட்சி 15 தொகுதிகளில் மட்டுமே வெற்றிபெறும் வாய்ப்பு இருக்கிறது. 20 தொகுதிகளுக்கு மேல் ஒதுக்குவது தி.மு.க-வுக்கு ஆபத்து' என்று ரிப்போர்ட் கொடுத்துள்ளனர்.

ஆனால், காங்கிரஸ் தரப்பிலும் விடுவதாக இல்லை. "வள்ளுவர் கோட்டத்தில் நடைபெற்ற வேளாண் சட்டத்துக்கு எதிரான ஆர்ப்பாட்டத்தில் கே.வி. தங்கபாலுவுக்கு மூன்றாவது இருக்கையை ஒதுக்குகிறார்கள் திருச்சி எம்.பி திருநாவுக்கரசரை மேடையிலிருந்து எழுப்பிவிட்டார்கள். அவர் கோபித்துக் கொண்டு கிளம்பிவிட்டார். விழுப்புரத் தில், '234 தொகுதிகளிலும் தி.மு.க வெற்றி பெறும்' என்கிறார் உதயநிதி.

தி.மு.க கூட்டணியில் இருக்க விரும்பவில்லை. எங்களுக்கான மரியாதையைப் பெற்றே தீருவோம்" என்றனர். உள்ளூர் காங்கிரஸ் கட்சியினரின் குடைச்சல் அதிகமாவதால், ராகுலிடம் பேசி ஓகே வாங்கும் மனநிலையில் இருக்கிறாராம் ஸ்டாலின். இதனால், சத்திய மூர்த்தி பவன் கொதிப்பில் இருக்கிறது. அதேசமயம், "காங்கிரஸைக்கைகழுவும் துணிச்சல் தி.மு.கவிடம் இல்லை; 'கை'விட்டுப் போனால், சிறு பான்மையினர் வாக்கு கள் கிடைக்காது என்பதால், அந் தக் கட்சியை மிரட்டும் யுக்தியாகவே நூல் விட்டுப் பார்க்கிறது தி.மு.க" என்கிறார்கள் அரசியல் பார்வை யாளர்கள்!

ம.தி.மு.கவுக்கு ஐந்து, விடுதலைச் சிறுத்தைகளுக்கு ஐந்து என்று இப்போதே பந்தி பிரித்து வைத்திருக்கிறது தி.மு.க. ஒற்றை இலக்க எண்ணிக்கையை நினைத்து தாயகத்தில் தனியாக வருந்துகிறாராம் வைகோ. ஆனாலும் தளராத தன்னம்பிக்கையுடன், அறிவாலயத்துக்கு எதிராகக் கம்பு சுற்றவும் தயாராகிவிட்டார். தி.மு.க கூட்டணியில் பா.ம.க இடம்பெறுவதற்கு வாய்ப்பு மிகக் குறைவு என்பதால், சிறுத்தைகளின் கர்ஜனை கூடியிருக்கிறது. அநேகமாக, ஒன்றிரண்டு சீட் எண்ணிக்கை கூடுதலாக கேட்பார்கள் சின்னத்தை விட்டுக்கொடுப்பதிலும் முரண்டுபிடிப்பார்கள் என்று தெரிகிறது.

தி.மு.கவின் பலமே சிறுபான்மையினர் வாக்குகள்தான். தி.மு.க கூட்டணியில் இடம்பெற்றுள்ள முஸ்லிம் லீக், த.மு.மு.க ஆகிய இரண்டு கட்சிகளுக்கும் தலா இரண்டு தொகுதி என்பதை ஏற்கனவே பாலிஷாகச் சொல்லி விட்டதாம் தி.மு.க. நான்கு தொகுதிகளாவது கிடை க்குமென ஜவாஹிருல்லா எதிர்பார்த் தார். தி.மு.க தரப்பில், 'இரண்டுக்கும் மேல் என்றால் உதயசூரியன் சின்னத்தில் நில்லுங்கள்' என்று கொக்கி போட் டதை ஜவாஹிருல்லா எதிர்பார்க்க வில்லை.

நாடு முழுவதும் கம்யூனிஸ்ட் கட்சியின் செல்வாக்கு கரைந்துவரும் நிலையில் கம்யூனிஸ்ட் கட்சிகளின் தேவை தி.மு.க-வுக்கும் இப்போது குறைந்துவிட்டது. 'இரண்டு கம்யூனிஸ்ட் கட்சிகளுக்கும் தலா மூன்று தொகுதிகள் ஒதுக்கினால் போதும்' என்று ஐபேக் டீம் கூறியதைப் பிடித்துக் கொண்டு, கொங்கு மண்டலத்தில் சீட்டை ஒதுக்கி கணக்கு முடிக்கத் தயாராகிறது அறிவாலயம்.

தேர்தல் ஜல்லிக்கட்டு தொடங்கி விட்டது. பிரதான கட்சிகள் பிடி மாடாகுமா... இல்லை, கூட்டணிக் கட்சிகளைத் தூக்கியெறிந்துவிட்டு, கம்பீரமாகக் களத்தை மிரட்டுமா? என்பதைப் பொறுத்திருந்து பார்ப்போம்!



கம்பு சுற்றும் வைகோ... கர்ஜிக்கும் சிறுத்தை!

ஜூனியர் விகடன்

# கடல் புறா

## காந்தம் இழுக்கிறது

காலத்தின் பதிவு 53




அதுவரை நடந்ததையெல்லாம் பார்த்துக்கொண்டும் சொல்லப்பட்டதையெல்லாம் செவிமடுத்துக் கொண்டும் முகவாய்க் கட்டையில் ஒரு கரத்தை ஊன்றி சிரத்தை சற்றே ஒருக்களித்து தன் அஞ்சன விழிகளை அகல விரிந்து உட்கார்ந்திருந்த காஞ்சனாதேவி, "முடிவு மட்டும் முக்கியமல்ல சீனத் தலைவரே, முறைகளும் முக்கியம் தவறான முறைகளைக் கொண்டு சாதிக்கப்படும் முடிவுகள் இறுதியில் விபரீத விளைவையே கொடுக்கும்" என்று தன் அழகிய உதடுகளை மெள்ளத் திறந்து சொற்களை மிக இன்பமாக உதிர்த்தாள்.

அத்தனை நாழிகையாக உதிர்ந்த ஆண் மக்களின் கரகரத்த கடுமையான குரல்களுக்குப் பரிகாரம் செய்யும் பாணியில் இன்ப நாதம்போல் திடீரென அறைக்குள் உருவாகிய அந்தக் கிள்ளைக் குரலைக் கேட்டதும், அறையிலிருந்த அனைவரும் அது வந்த திசையில் கண்களைத் திருப்பினர். மற்றவர்களுக்கெல்லாம் சற்றுப் பின்னடைந்து இளைய பல்லவனுக்கு அடுத்தபடி லேசாக ஒதுங்கிக் கடைசியில் உட்கார்ந்திருந்த காஞ்சனா தேவியின் கண்களில் ஆழ்ந்த சிந்தனை தெரிந்ததை மற்றவர்கள் கண்கள் பார்க்கவே செய்தன.

அந்த ஆழ்ந்த சிந்தனையால் அந்தக் கண்கள் மயக்கம் தரும் பார்வையொன்றை வீசினாலும் அந்த மயக்கத்தினூடே ஒரு தெளிவும் உறுதியும் சென்று கொண்டிருந்ததைக் கவனித்ததால் அந்தப் பெண்ணிடம் அவனுக்கு முதலில் ஏற்பட்ட அன்பு பல மடங்கு பெருகியதன்றி, அமீரின் திட்டத்தில் ஏதோ ஒப்புக்கொள்ள முடியாத ஓர் அம்சம் கலந்திருப்பதை அவள் புரிந்து கொண்டு விட்டாளென்பதையும் அவன் அறிந்து கொண்டதால் அவளது கூரிய அறிவை எண்ணிப் பெரிதும் வியந்தான். மேலே அவள் பேசப் பேச அந்த வியப்பும் அவள் மீது அவனுக்கு ஏற்பட்ட மதிப்பும் வளர்ந்து கொண்டே போயின.

அந்தச் சம்பாஷணைத் தொடருக்கு அவனே வித்திட்டான். ஏனென்றால் ஆரம்பக் கருத்து அவனுடையதாயிருந்தது. அந்தக் கருத்தைக் காஞ்சனாதேவி வெட்டிப் பேசிவிட்டதால், அதை விளக்குவதும் அவள் சந்தேகத்தை நிவர்த்திப்பதும் அவன் கடமையாயிற்று. ஆகவே அவள் ஆட்சேபனைக்குப் பதில் கூற முற்பட்ட சீனக்கடலோடி சொன்னான், "தேவி! முறைகள் தவறா?, சரியா? என்பது சந்தர்ப்பங்களைப் பொறுத்தது" என்று.

காஞ்சனாதேவியின் அழகிய விழிகள் சிறிதும் அச்சமின்றி கொள்ளைக்காரனென்றும் கொடுமையின் அவதாரமென்றும் பெயர் பெற்ற அகூதாவை நன்றாக ஏறெடுத்து நோக்கின. "சந்தர்ப்பங்களைப் பொறுத்து மட்டும் முறைகளைக் கையாளுவது தவறு சீனத் தலைவரே!" என்று அவள் திட்டமாகக் கூறினாள்.

அகூதாவின் சின்னசிறு ஈட்டி விழிகளில் ஆச்சரியம் மேலும் படர்ந்தது. காஞ்சனாதேவியின் தைரியத்தைப் பற்றி அவன் உள்ளத்தில் பெரும் பக்தியும் உண்டாயிற்று. "இவள் கடாரத்தை மட்டுமல்ல ஸ்ரீவிஜய சாம்ராச்சியத்தையே அரசாளத் தகுந்தவள்' என்று தனக்குள் சொல்லிக் கொண்டான் அகூதா. அவன் பேச்சுக்கு அவன்பதில்சொன்ன போது அவன் குரலிலும் அந்தப் பக்தி விளக்கமாகத் தெரிந்தது. "சந்தர்ப்பங்கள் தாமாகவே முறைகளைச் சிருஷ்டிக்கின்றன தேவி!" என்றான் சீனக் கடலோடி.

"தவறு சீனத் தலைவரே! சந்தர்ப்பங்கள் நம்மைச் சூழ்ந்து கொள்கின்றன. நாம் அவற்றிலிருந்து விடுவித்துக் கொள்ளப் பார்க்கிறோம். ஆகவே விடுவித்துக்கொள்ள முறைகளை நாம்தான் வகுக்கிறோம். சந்தர்ப்பங்களல்ல வகுப்பது" என்றாள் காஞ்சனாதேவி உறுதியுடன், சற்றேதன் பூவிதழ்களை மடித்து.

"நான் அப்படி நினைக்கவில்லை தேவி. சந்தர்ப்பங்கள் தான் முறைகளை வகுக்க நம்மைத் தூண்டுகின்றன. அதுமட்டுமல்ல, பழைய வழிகள் அடைபடும்போது புது வழிகளுக்கும் முறைகளுக்கும் கோடி காட்டுவதும் சந்தர்ப்பங்கள் தான்" என்ற அகூதா மேலும் விபரிக்கத் தொடங்கி, " நான் அமீரிடம் அறிந்த விடயங்கள் சரியானால், உண்மை நிலை இதுதான். நீங்களும் உங்கள் தந்தையும் இளைய பல்லவரும் அமைதியான பாலூர்ப் பெருந்துறையல்ல. உங்களை நசுக்கிவிடத் தீர்மானித்துள்ள கடுமையான கலிங்கத்தின் கடல்வாசல். சூழ்நிலை விபரீதமாயிருந்தது. சந்தர்ப்பங்கள் மாறுபட்டிருக்கின்றன.

தூதர் என்ற முறையில் நாகரிகமாக வரவேற்கப்பட வேண்டி கருணாகர பல்லவர், வாள் முனையில் வரவேற்கப்பட்டார். இளவரசராக, அரசவிருந்தினராக அரண்மனையிலிருக்க வேண்டிய அநபாயர், ஊரில் தலைமறைவாகத் திரிந்து அவ்வப்பொழுது தலையை நீட்டுகிறார். இரண்டு கப்பல்களுடன் வர்த்தக நிமித்தமாக பாலூர் வந்த நான் வாணிபத்தை முடித்துக் கொண்டு எந்தவிதக் கஷ்டமுமில்லாமல் நங்கூரத்தை நீக்கிக் கடலில் செல்லலாம். ஆனால் அமீரைத் திடீரென்று கடற்கரையில் சந்திக்கும் சந்தர்ப்பம் கிடைக்கிறது.

அந்தச் சந்தர்ப்பம் திருடனைப் போல் இங்கு வந்த ரகசிய யோசனையில் உங்களுடன் கலந்துகொள்ளும் வாய்ப்பை அளித்திருக்கிறது. பெரும் ராஜ குடும்பங்களைக் காப்பாறும் பொறுப்பு அநபாயரைப்போலவே எனக்கும் ஏற்பட்டிருக்கிறது. ஆகையால் எதையும் நாமாகத் தீர்மானித்துவிட முடியாது. நமது இஷ்டப்படி காரியங்கள் நடக்கவும் முடியாது. சந்தர்ப்பங்களையொட்டி முறைகளை வகுப்பதுதான் விவேகம். அந்த விவேகம் அமீருக்கு உண்டு. ஏதோ சங்கடமான முறையை வகுத்திருக்கிறான் அமீர். அதனால்தான் சங்கடப்படுகிறான்" என்று கூறிவிட்டு, அமீரை நோக்கித் திரும்பி "எதுவாயிருந்தாலும் பாதகமில்லை சொல் அமீர்" என்று அமீரை ஊக்கவும் செய்தான்.

அமீர் தன் பெருவிழிகளால் அநபாயன் முகத்தையும் இளைய பல்லவன் முகத்தையும் சில விநாடிகளில் துழாவி விட்டுப் பிறகு காஞ்சனாதேவியை நோக்கிச் சொன்னான். இளவரசி என் திட்டமோ அதன் முறைகளோ உங்களுக்கு திருப்தியில்லாவிட்டால் வேண்டாமென்று தள்ளிவிடலாம்.

ஆனால் என் திட்டத்தை விட வேறு வழியில்லை என்று எனக்குத் தோன்றுகின்றது. ஊர் நிலைமை உங்களுக்கு இப்பொழுது புரிந்திருக்க வேண்டும். அதைக் கண்டியத் தேவர் மிகத் தெளிவாக எடுத்துச் சொல்லிவிட்டார். இந்த நிலையில் பாலூரில் எந்த இடத்திலும் நீங்கள் தலையைக் காட்ட முடியாது. காட்டினால் தப்பிச் செல்லவும் முடியாது.

அமீரின் இந்த வார்த்தைகளுக்குப் பிறகு அந்த அறையில் அமைதியே நிலவியது. அமீர் மேற்கொண்டு என்ன சொல்லப் போகின்றான் என்பதை அனைவரும் எதிர்பார்த்து நின்றார்கள்.


அவன் தொடர்ந்தான்: அம்மணி! இதோ இருக்கும் அகூதா, அநபாயர், இளையபல்லவர் இவர்கள் மூவரின் வீரத்தில் மட்டுமல்ல, உங்கள் வீரத்திலும் எனக்குச் சந்தேகம் சிறிதும் இல்லை. அநபாயர், இளையபல்லவர் இவர்கள் வீரச்செயல்களைப் பற்றி இந்தப் பாலூரிலும் பல கதைகள் உலாவுகின்றன. இருவரையும் தமிழர்கள் தெய்வங்களைப்போல் பாவிக்கின்றார்கள். அகூதாவின் வீரத்தை நான் நேரிடப் பார்த்திருக்கின்றேன். உலகத்தின் மாபெரும் வீரர்களில் என் குருநாதர் ஒருவர். கடலில் இவருடைய ஒரே மரக்கலம் சீன அரசாங்கத்தின் பல மரக்கலங்களை ஒரே சமயத்தில் முறியடித்து ஓடச்செய்திருப்பதை நான் இந்த என் இரு கண்களாலும் கண்டிருக்கிறேன்.

உங்கள் வீரத்தைப் பற்றி நான் என்ன சொல்ல? அநபாயருக்கு அருகில் நாண் இழுத்து நின்று அனந்தவர் மனையே அச்சுறுத்திய உங்கள் செய்கை இன்று பிற்பகலே பாலூரில் தீயாகப் பரவிவிட்டது .இத்தனை வீரம் பொருந்திய உங்கள் அனைவருக்கும் சிறிதும் வீரமற்ற ஏன் கோழைத்தனமாகக் கூடத் தோன்றக்கூடிய ஒரு திட்டத்தைச் சொல்வேனானால், அதற்கு காரணம் உங்கள் வீரத்திலுள்ள அவநம்பிக்கையல்ல, உங்கள் நலனில் எனக்குள்ள அக்கறை, உங்களை எப்படியாவது இந்தப் பாலூரில் இருந்து காப்பாற்ற வேண்டும் என்ற எனது ஊக்கம்... என்று அமீர் மேலே சொல்லாமல் சிறிது தடுமாறினான்.

அவன் எதையோ சொல்ல சங்கடப்படுகிறானென்பதை அறிந்து கொண்ட அநபாயன், பயப்பட வேண்டாம் எதுவாயிருந்தாலும் சொல் அமீர். ஏற்றுக் கொள்வதும் எங்களைப் பொறுத்தது என்று அமீருக்குத் தைரியத்தைச் சற்று புகட்டினான். சற்றுத் தைரியமடைந்த அமீர், அநபாயனை நோக்கி ,அநபாயரே! இளைய பல்லவரையும் கடாரத்து அரசன், இளவரசி, இவர்களையும் தப்பு விக்கத் தாங்கள் திட்டமிடச் சொன்னபோதே ஊர் நிலையைக் கவனித்தேன். (தொடரும்)

> ட்ரம்ப்பின் வெற்றி அபகரிக்கப்பட்டு விட்டது என்ற பொய்யை முழுக்க நம்பிய ஒரு கும்பலை பாராளுமன்றத்தில் உள்ள குடியரசுக் கட்சியின் தலைவர்கள் தூண்டிவிட்டனர்.

# அமெரிக்க வன்முறையின் வரலாறு



கப்பிட்டலில் அமெரிக்க ஜனாதிபதி ட்ரம்ப் தூண்டியதை விட இரத்தக்களரி நிரம்பிய, மிகவும் நாசகாரத் தன்மை கொண்ட பல அத்தியாயங்களைக் கொண்டிருப்பது அமெரிக்க வரலாறு. அமெரிக்காவின் பயங்கரமான கடந்த காலத்தைப் பற்றிய அறியாமையை வரலாற்றாசிரியர்கள் டபிள்யூ.ஈ.பி. டுபோய்ஸ், ஜான் ஹோப் ஃப்ராங்க்ளின், ரிச்சர்டு ஹோஃப்ஸ்டேட்டர் போன்றோர் நன்றாக ஆவணப்படுத்தியுள்ளனர். இந்த அறியாமை தற்போதைய நிகழ்வுக்குப் பிறகு வெளிப்படையாகத் தெரிந்தது. இந்த நாசகாரச் சம்பவமானது வழக்கத்துக்கு மாறான ஒன்றுதான் என்று தொலைக்காட்சியில் திரும்பத் திரும்பச் சொல்லிக்கொண்டிருக்கிறார்கள்.

வேண்டுமென்றே மறக்கும் இந்தச் செயல் அமெரிக்க அறியாமை என்ற தொன்மத்துடன் சேர்ந்து பல்வேறு வகைகளிலும் ஆபத்தான ஒன்றாகத் தன்னை வெளிப்படுத்தியிருக்கிறது. தான் படுதோல்வியடைந்த ஒரு தேர்தலை உண்மையில் தான் வென்றிருப்பதாக ஜனாதிபதி வலியுறுத்துவதை, அதன் இணைநிகழ்வாக வலதுசாரிப் பயங்கரவாதத்தை அவர் தழுவிக்கொள்வதை ஒரு அரசியல் நாடகம் என்றும் ஜோ பிடன் தேர்ந்தெடுக்கப்பட்டுவிட்டால் இது எந்தப் பிரச்சினையுமின்றிக் கடந்துவிடும் என்றும் பெரும்பாலான அமெரிக்கர்கள் கருதுவதற்கு இந்த மறதியானது வழிவகை செய்கிறது.

## ட்ரம்ப்பின் தீக்குச்சி

“அவருக்கு இணங்கிப்போவதில் என்ன தீங்கு இருக்கிறது? எப்படியும் ட்ரம்ப் வெகு விரைவில் போய்விடுவார்” என்ற வாதம் முன்வைக்கப்படுகிறது. மாறாக, ட்ரம்ப்பின் வெற்றி அபகரிக்கப்பட்டுவிட்டது என்ற பொய்யை முழுக்க நம்பிய ஒரு கும்பலை பாராளுமன்றத்தில் உள்ள குடியரசுக் கட்சியின் தலைவர்கள் தூண்டிவிட்டனர். இதன் விளைவாக, அரசு மீது நிகழ்த்தப்பட்ட ஊடுருவலானது அது குறைந்தபட்சம் 5 பேரின் உயிரைப் பலிகொண்டிருக்கிறது அரசியல் வன்முறை என்பது பிரசித்தி பெற்ற பெற்றோல் ஆறு என்பதையும், தீக்குச்சியைப் பற்றவைத்துப் போடக் கூடிய ட்ரம்ப் போன்ற ஒருவருக்காகக் காத்திருக்கிறது என்பதையும் எல்லோருக்கும் தெளிவாகப் புரியவைக்க வேண்டும்.

கப்பிட்டல் கட்டடத்தைச் சூறையாடுவதற்கு இட்டுச் சென்ற சூழ்நிலைகள் 19ஆம் நூற்றாண்டுச் சம்பவங்களை நினைவுபடுத்துகின்றன. மறுகட்டமைப்பு என்ற பெயரில் கறுப்பினத்தவர்களுக்குக் கிடைத்திருந்த சுயநிர்ணய உரிமைகளை அமெரிக்காவின் தெற்குப் பிராந்தியத்தவர்கள் வலுவிழக்கச்செய்து, இனவெறிக் கொடுமைகளைக் கட்டவிழ்த்துவிட்டிருந்த காலகட்டம் அது. கறுப்பினத்தவர் அதிக அளவில் உள்ள நகரங்களில் வாக்குப்பதிவில் முறைகேடுகள் பரவலாக நடந்திருப்பதாக நவம்பர் தேர்தலின்போது ட்ரம்ப் தவறாகக் கூறியதன் மூலம், கடந்த காலத்தின் தெற்குப் பிராந்திய வெள்ளையின ஆதிபத்தியர்களின் உணர்வையே அவர் பிரதிபலித்தார்.

இந்த மாதம், டெட்க்ரூஸ் தலைமையிலான குடியரசுக் கட்சியினரின் கூட்டுக் குழுவொன்று வாக்குப் பதிவு முறைகேடு பற்றிய பொய்யைத் திரும்பக் கூறி, 2020 தேர்தல் பிரச்சினை யைத் தீர்ப்பதற்குத் தேர்தல் ஆணையம் ஒன்றை பாராளுமன்றம் நியமிக்க வேண்டுமென்று கோரியபோது இரத்தத்தில் தோய்ந்த இந்த வரலாற்றையே நினைவு படுத்தினார்கள். 1876 தேர்தலைப் பற்றித் தீர்ப்புக் கூற அமைக்கப்பட்ட ஒரு குழுவை டெட் க்ரூஸ் பொருத்தமில்லாத வகையில் எடுத்துக்காட்டாகக் கூறினார். அந்த நேரத்தில் யார் வென்றது என்பது பற்றித் தெளிவில்லாததால் அப்படியொரு குழு அமைக்கப்பட்டது.

## 1876 தேர்தல்

க்ரூஸ் முன்வைத்த ஒப்புமையானது அதன் மேல் தோற்றத்திலேயே நேர்மையற்றதாக இருக்கிறது. ஏனெனில், அளிக்கப்பட்ட வாக்குகள் தொடர்பாக, செல்லுபடியாகும் மறுப்பு ஏதும் இன்று காணப்படவில்லை. ஆனால், 1876ஐ நினைவு கூருவதன் மூலம் அவரது கட்சி மிகத் தீவிரமாகச் செய்த வாக்காளர் ஒடுக்குமுறைகளின் கடந்த காலத்தை அவர் தன்னையறியாமல் சுட்டிக்காட்டியுள்ளார். வரலாற் றாசிரியர்கள் ரஷேல் ஷெல்டனும் எரிக் அலெக்ஸா ண்டரும் சமீபத்தில் ‘த வோஷிங்டன் போஸ்ட்’ இதழில் சுட்டிக்காட்டியதுபோல் 1876 தேர்தலானது ரத்தக்களரியும் அச்சுறுத்தலும் நிரம்பியதாக இருந்தது.

வாக்குப்பதிவு நாள் நெருங்கியபோது வெள்ளையின பயங்கரவாதக் குழுக்கள் தெற்குப் பிராந்தியம் முழுவதிலும் உள்ள ஆபிரிக்க - அமெரிக்கர்களைக் குறிவைத்துத் தாக்கினார்கள். கறுப்பினத்தவர்கள் அதிகமாக இருந்த ஹாம்பர்க், எஸ்.சி.இல் “தெற்கு கரோலினாவிலிருந்தும் ஜோர்ஜியாவிலிருந்தும் துப்பாக்கி ஏந்திய நூற்றுக் கணக்கான வெள்ளையர்கள் ஹாம்பர்க் நகரத்துக்கு வந்திறங்கினார்கள், அவர்கள் கறுப்பினத்தவர்களின் வீடுகள், கடைகளைச் சூறையாடினார்கள்” என்று இந்த வரலாற்றாசிரியர்கள் எழுதுகிறார்கள்.

தெற்கில் கறுப்பினத்தவர்களின் உரிமைகளைக் காத்துக்கொண்டிருந்த துருப்புகளைக் கூட்டாட்சி அரசு இறுதியில் திரும்பப்பெற்றுக்கொண்டது. இதனால், அடிமைமுறை வேறொரு பேரில் நீடிப்பதற்கு வழியேற்பட்டது. இது, ‘குடிமை உரிமைகள்சட்டம் - 1964’, ‘வாக்குரிமைச் சட்டம் - 1965’ ஆகியவை நிறைவேற்றப்படும் வரை நீடித்தது. கப்பிட்டலை அந்தக் குழுவினர் ஊடுருவியதற்கு முந்தைய தினங்கள் 1898இல் வில்மிங்டன் நகராட்சியைக் கவிழ்ப்பதற்கு செய்யப்பட்ட முயற்சிகளைப் பல விதங்களிலும் எதிரொலிக்கிறது. ஆபிரிக்க - அமெரிக்கர்களுடனும் முற்போக்கு வெள்ளையினத்தவர்களுடனும் கூட்டணி வைத்திருந்த அரசை வெள்ளை ஆதிபத்தியர்கள் தூக்கியெறிந்தனர்.

‘அமெரிக்கன் வயலன்ஸ்: எ டாக்குமென்ட்டரி ஹிஸ்டரி’ நூலில் ஹோஃப்ஸ்டேட்டரும் மைக்கேல் வாலஸும் இதைப் பற்றி எழுதியிருக்கிறார்கள். புதிய அரசுக்கு உதவுவதற்கு மற்ற இடங்களிலிருந்து ராணுவ அலகுகள் வில்மிங்டனுக்கு வந்து குவிந்தவண்ணம் இருந்திருக்கின்றன: “துருப்புகள் வீதிகளில் அணிவகுத்துச் செல்ல, புதிதாக ஆட்சிக்கு வந்த வெள்ளை ஆதிபத்திய நிர்வாகத்துக்காகத் துப்பாக்கிகள் முழங்கியபடி செல்ல, வெள்ளையர்களின் முன்பு ஆபிரிக்கர்கள் கூனிக்குறுகி நடந்திருக்கிறார்கள்” என்று எழுதுகிறார்கள்.

கணக்கிலடங்காத கறுப்பினக் குடிமக்கள் கொல்லப்பட்டனர். தற்போது கப்பிட்டலில் நடந்ததுபோல் வில்மிங்டன் கும்பலும் அதிகரித்துவந்த இனவெறி அலையை எதிர்த்த பத்திரிகையாளர்களின் வாயை மூடுவதிலேயே குறியாக இருந்தார்கள். இதே காரணத்துக்காக, சூறையாடிகள் கறுப்பினத்தவருக்குச் சொந்தமான ‘டெய்லி ரெக்கார்டு’ என்ற பத்திரிகை அலுவலகத்தைத் தீக்கிரையாக்கினார்கள் அதன் ஆசிரியர் அலெக்ஸாண்டர் மேன்லி நகரத்தை விட்டுத் தப்பியோடினார். இறுதியில் வெள்ளை ஆதிபத்தியர்கள் அந்த மாநிலத்தைத் தங்கள் கட்டுப்பாட்டுக்குள் கொண்டுவந்தனர் கறுப்பினத்தவர்கள் அரசியலில் பங்கேற்க முடியாத வகையில் திரையை இட்டனர். இந்த வரலாற்றை வைத்துப் பார்க்கும்போது, வடக்கு கரோலினா இன்னமும் ஒரு போர்க்களமாக இருப்பதில் ஒன்றும் ஆச்சரியம் இல்லை. அங்கேதான் ஆப்பிரிக்க - அமெரிக்கர்கள் தொகுதி வரையறை முறைகேடுகள் உள்ளிட்ட பிற ஒடுக்குமுறைகளுக்கு எதிராகவும் இன்னமும் போராட வேண்டியிருக்கிறது.

## 20ஆம் நூற்றாண்டிலும் ஒடுக்குமுறை

பெரிய அளவிலோ சிறிய அளவிலோ, கறுப்பினத்தவர்களின் சுயநிர்ணய உரிமைக்கு எதிராக இந்த வன்முறைகள் 20ஆம் நூற்றாண்டிலும் தொடர்ந்தன. சில சமயங்களில் வெளிப்படையாகவே கறுப்பினத்தவர்களின் வாக்குச் சக்தியை அழிக்கும் விதத்தில் மேற்கொள்ளப்படும் இந்த வன்முறைகள் கறுப்பினத்தவரின் பொருளாதாரத் தற்சார்பை அழிப்பதற்காகவும் மேற்கொள்ளப்படுகின்றன. அவர்கள் வீடுகளையும், சந்தையில் வெள்ளையர்களின் நிறுவனங்களுடன் போட்டியிடும் அவர்களின் தொழில்நிறுவனங்களையும் அழித்தொழிப்பதற்கு இந்த வன்முறைகள் ஏவப்படுகின்றன.


இதுபோன்ற தாக்குதல்கள் பற்றிய தெளிவான எடுத்துக்காட்டாக ஒக்லஹோமாவில் 1921-ல் நடைபெற்ற டுஸ்லா ரேஸ் படுகொலையைக் குறிப்பிடலாம். டுஸ்லா பொலிஸாரின் உதவியோடு வெள்ளையினக் கும்பல் தங்கள் விருப்பத்துக்கேற்பப் படுகொலைகளை நிகழ்த்தினார்கள் கறுப்பினத்தவரின் குடியிருப்புகள் அடங்கிய பெரும் பரப்பை எரியூட்டினார்கள். ‘நீக்ரோ வால் ஸ்ட்ரீட்’ என்று அழைக்கப்பட்ட கறுப்பினத்தவரின் வணிகக் கட்டமைப்பைச் சாம்பலாக்கினார்கள். வரலாற்றாசிரியர் ஜெலானி காப் ‘த நியூயோர்க்கர்’ இதழில் அமெரிக்கத் தேர்தலுக்கு இரண்டு மாதங்களுக்கு முன்பு குறிப்பிட்டிருந்ததுபோல், கறுப்பினத்தவர்களின் வாக்குரிமையைத் தாங்கள் மூர்க்கமாக ஒடுக்கியது பற்றி அமெரிக்கா கொண்டிருக்கும் அறியாமையானது கறுப்பினத்தவர்களை அது பாதுகாத்ததைவிட அதிக அளவிலானதாகும்.

கப்பிட்டல் மீதான தாக்குதலானது அதற்கு முன்பு என்ன வந்ததோ அதன் இயற்கையான விளைவே. ஆபிரிக்க - அமெரிக்கர்களின் நகரங்களை வாக்கு முறைகேடுகளின் கேந்திரம் என்று பிழையாகச் சித்திரித்துத் தன்னை வெள்ளையினத்தவருக்குப் பிரியமானவராகக் காட்டிக்கொண்ட ஒரு ஜனாதிபதியின் கடுமையான இனவெறி பிடித்த தேர்தல் பிரசாரத்தின் தொடர்ச்சிதான் இந்தத் தாக்குதல்.

**‘நியூ யோர்க் டைம்ஸ்’**

# இராட்சச இரகசியக் கோடுகள்

நாம் தென்னமெரிக்கா நோக்கிச் செல்லப்போகிறோம். உலகிலேயே அதிக அளவு மர்மங்களையும் விந்தைகளையும் உள்ளடக்கியவை, மத்திய/தென் அமெரிக்கப் பிரதேசங்கள். அப்பிரதேசங்களில் பழைமைவாய்ந்த மாயா (Maya), இன்கா (Inca), ஆஸ்டெக் (Aztec), ஓல்மெக் (Olmec) மற்றும் 'பரகாஸ்' (Paracas) இனத்தவர்கள் வாழ்ந்தார்கள். அங்கிருக்கும் புராதனச் சின்னங்கள், இன்றும் நம்மை வாய்பிளக்கவைப்பவை. 2012இல் உலகம் அழியுமென அச்சம் தந்த மாயன்களின் கலண்டரை நீங்கள் மறந்திருக்க மாட்டீர்கள்.



இந்த ஐந்து இனத்தவர்களின் புராதன அடையாளங்களாக, 'சிச்சென் இட்ஸா' (Chichen Itza) பிரமிடும், 'டியோ டிஹூவாகான்' (Teotihuacan) பிரமிடும், 'பாம்பு மேடு' (Serpent Mound) எனும் அமைப்பும், 'டிகால்' (Tikal) பிரமிடும், 'மச்சு பிச்சு' (Machu Picchu) புராதன மலை நகரமும், 'நாஸ்கா கோடுகள்' (Nazca) எனும் வரைவுகளும் இன்று வரை கண்முன்னே காட்சியளிக்கின்றன. ஆயிரம் ஆண்டுகளிலிருந்து, நாலாயிரம் ஆண்டுகள் வரை பழைமையானவை. இவற்றில், நாஸ்கா கோடுகள் நோக்கித்தான் நாம் போகப்போகிறோம். அதற்கு முன்பு, ஓஹியோவில் (Ohio) அமைக்கப்பட்டிருக்கும் பாம்பு மேட்டை ஒரு தடவை பார்த்துவிடலாம்.

## மாயமில்லை மந்திரமில்லை

ஓஹியோ மாகாணத்தின் ஆடம்ஸ் கவுன்ட்டியில் விசித்திரமான அமைப்பொன்று இருக்கிறது. ஆயிரம் ஆண்டுகளுக்கு முன்னர் உருவாக்கப்பட்ட மிகப்பெரிய பாம்பு அது. 411 மீற்றர் நீளத்துடனும், ஒரு மீற்றர் உயரத்துடனும் செயற்கையாக உருவாக்கப்பட்ட மேடொன்று, பாம்பின் உருவத்துடனேயே அமைக்கப்பட்டிருக்கிறது. அருகிலிருந்து பார்த்தால், என்னவென்றே கண்டுபிடிக்க முடியாத அளவுக்குப் பெரிய உருவத்துடன் இருக்கிறது.

அந்தப் பாம்பு உருவம் இன்றுவரை அழியாத வகையில் அமைந்திருக்கிறது. சுருண்ட வாலும், வித்தியாசமான தலையுமாக அந்தப் பாம்பு காணப்படுகிறது. அன்றைய மக்கள் இதை ஏன் உருவாக்கியிருப்பார்கள் எனும் கேள்வி முக்கியமானதுதான் என்றாலும், புராதன மக்கள் பாம்புக்கு முன்னுரிமை அளித்தது உலகெங்கும் நடந்திருக்கிறது.

அதுவொரு பாம்பு என்பதை நிலத்திலிருந்து பார்ப்பவர்களால் எளிதில் புரிந்துகொள்ள முடியாது. உயரத்திலிருந்து பார்த்தால் மட்டுமே தெரியும். அவ்வளவு பெரியது. அக்காலங்களில் உயரமென்றால் மலைகளாகவோ மரங்களாகவோதான் இருக்க முடியும். மனிதர்கள் மரங்களில் ஏறி, அதைப் பார்க்க வேண்டும் என்பதற்காக உருவாக்கப்பட்டிருக்கிறது எனும் காரணம் நம்பும்படியாக இல்லை. மலையிலிருந்து பார்ப்பதற்காக உருவாக்கப்பட்டது என்று எடுத்துக்கொண்டால், அந்த உருவமே மலையுச்சியின் மேட்டில்தான் அமைக்கப்பட்டிருக்கிறது. அதையும் மீறி மேலே செல்ல வேறு மலைகள் அங்கில்லை. அப்படியென்றால், யார் பார்ப்பதற்காக அந்தப் பாம்பு உருவாக்கப்பட்டது? மனிதர்களுக்காகவோ, கடவுளுக்காகவோ அல்லது வானத்தில் பறக்கக்கூடிய வேறு யாருக்காகவோ தான் அது உருவாக்கப்பட்டிருக்க வேண்டும்.

வானத்திலிருந்து கடவுள் பார்ப்பதற்காக உருவாக்கியிருக்கலாம். இல்லை, பாம்பே அவர்களுக்கான கடவுளாகவும் இருந்திருக்கலாம். ஆனால், அப்படி இருக்க முடியாது என நாஸ்கா கோடுகள் சொல்கின்றன. அங்கு சென்று பார்த்தால், வேறோர் ஆச்சரியம் நம்மைத் திகைக்கச் செய்கிறது. பாம்பு மட்டுமல்ல, பல வகையான உயிரினங்களே அங்கு காணப்படுகின்றன.

தென்னமெரிக்காவின் மேற்குக் கரையோரத்தில், ஈக்வடோருக்கும் பொலிவியாவுக்கும் இடையேயுள்ள நீளமான நாடுதான் பெரு. தன்னுள் நம்ப முடியாத புராதன மர்மங்களை உள்ளடக்கியது. இங்குள்ள 'நாஸ்கா' (Nazca) நகரின் புறப்பகுதியெங்கும், மலைகள் சூழ்ந்த வெளி காணப்படுகிறது. சிஞ்சா (Chincha) மற்றும் 'யாவ்கா' (Yauca) பள்ளத்தாக்குகளின் இடையே அமைந்திருக்கும் மிகப்பெரிய சமவெளி. கிட்டத்தட்ட பாலைவனம் என்று சொல்லிவிடலாம். வெப்பம் அதிகமான, கற்தரை கொண்ட பகுதி. அந்தத் தரையெங்கும், 15 செ.மீ ஆழம்கொண்ட கோடுகளால், பலவகைச் சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன.

சித்திரம் வரைந்ததில் என்ன விசேஷம் இருந்துவிட முடியும்... புராதன மக்கள் எழுத்துகளைக்கூடச் சித்திர மாகத்தான் வரைந்திருக்கிறார்கள். ஆனால், இங்குள்ள சித்திரங்களோ வேறு வகையானவை. பிரமாண்டமான உருவம் கொண்டவை. பாம்பைக்கூட, அதன் வளைவுகளிலிருந்து கண்டுபிடித்துவிடலாம். ஆனால், அருகே நின்று இவற்றைப் பார்க்கும்போது, அவை என்ன உருவங்கள் என்பதைக் கண்டுபிடிக்கவே முடியாது.

அதிகபட்சமாக 370 மீற்றர் வரை சித்திரங்கள் வரையப்பட்டிருக்கின்றன என்றால் சிந்தித்துப் பாருங்கள். ஒரு சாதாரண மனிதனால், அருகிலிருந்து இனம்காண முடியாத பிரமாண்டம். மிருகங்கள், பறவைகள், தாவரங்கள் ஆகிய உயிரினங்களும் ஜியோமெட்ரி வடிவங்களும், நேர்கோடுகளுமாக மூன்று வகைகளாக அந்தச் சித்திரங்களைப் பிரிக்கலாம். 800 நேர்கோடுகளும், 300 ஜியோமெட்ரி வடிவங்களும், 70 உயிரினங்களும் காணப்படுகின்றன. அவை போன்ற பிரமாண்டமான வடிவங்களை, நிலத்தில் அவ்வளவு நேர்த்தியாக யாராலும் வரைந்துவிட முடியாது. வரைவுகள் எங்கு தொடங்குகின்றனவோ, அங்கேயே முடிகின்றன. சிறிய மொடலொன்றைக் கைகளில் வைத்தபடி மட்டுமே அப்படியான பெரிய உருவங்களை வரைய முடியும். அதுவெல்லாம் நவீன மனிதனின் வரையும் யுக்தி. சிறிய படமொன்றை உருவாக்கி, அதன் அளவீடுகளை மடங்குகளாக்கி, பெரிய படங்களை உருவாக்குவது. அதையே, இவர்களும் பயன்படுத்தியிருக்க முடியுமா?

இதைச்சொல்வதற்கு ஒரு காரணம் உண்டு. அங்கே வரையப்பட்டிருக்கும் பறவையொன்று, கிட்டத்தட்ட இரண்டு கிரிக்கெட் மைதானங்களின் அளவு கொண்டது. அவ்வளவு பெரிய, சிக்கலான உருவத்தைக் கணித அளவீடுகள் இல்லாமல் ஒருவரால் எப்படி வரைய முடியும்?

நாஸ்கா வரைவுகளில் நம்மைத் தலைசுற்ற வைப்பவை நேர்கோட்டு வரைவுகளே. அங்கு காணப்படும் நேர் கோடுகள் அனைத்தையும், துல்லியமான கருவிகள் பயன்படுத்தாமல் வரைந்திருக்கவே முடியாது. எந்த இடத்திலும் சிறிது வளைவோ, முறிவோ இல்லாமல் அச்சில் வார்த்த நேர்கோடுகளாக இருக் கின்றன. அவற்றின் நீளங்களைச் சொன்னால், நிச்சயம் உங்களால் நம்பவே முடியாது. 800 நேர்கோடுகளில், 370 மீற்றரிலிருந்து 20 கிலோமீற்றர் வரை நீளம் கொண்டவையாகக் காணப்படுகின்றன.

20 கிலோமீற்றர்கள். அவ்வளவு நீளமான நேர்கோடுகளை மலையடிவாரத்தினூடாக அவர்களால் எப்படி வரைய முடிந்தது... ஒருவேளை, அப்படி வரைந்திருந்தாலும், அவ்வளவு நீளக்கோடுகளை வரைவதற்கான காரணம் என்ன... எந்தக் கடவுளுக்காக நேர்கோடுகளை வரைய வேண்டும்? அதிக உயரத்தில் பறக்கும் விமானத்திலிருந்துகூட அந்தக் கோடுகளைப் பார்க்க முடிகிறதென்றால், அவற்றின் பிரமாண்டத்தை யோசனை செய்து பாருங்கள்.

ஒரு மலையின் உச்சியில், நீளமான விமான ஓடுபாதை (Runway) போன்ற அமைப்பொன்றும் காணப்படுகிறது. அந்த மலைப்பகுதி சீரான சமதளப் பாதையாக எப்படி மாற்றப்பட்டிருக்கும்... அது நிஜமாகவே விமானங்களின் ஓடுபாதைதானா... இல்லை, வேறு ஏதாவது காரணங்களுக்காக அமைக்கப்பட்டதா... இல்லை, இயற்கையாகவே தோன்றியதா? நிச்சயம் இயற்கையாகத் தோன்றவில்லை. அவர்களே அமைத்திருக்கிறார்கள்.

ஆனால், ஏன் எனும் காரணம் மட்டும் யாருக்கும் தெரியாது. எதற்காக மலையுச்சியில் அப்படியானதொரு பாதையை அமைக்க வேண்டும்? அருகேயிருக்கும் மலையில் மேல் நோக்கிக் கையை உயர்த்திக் காட்டிக் கொண்டிருக்கும் மனிதனின் சித்திரம் ஒன்றும் அங்கு காணப்படுகிறது. ஆனால், அவர் மனிதனா எனும் சந்தேகமும் வருகிறது. அவர் மேலே யாரைக் காட்டுகிறார்... கடவுளையா அல்லது வானிலிருந்து வந்திறங்கிய வேறு யாரோவையா? இந்தக் கேள்விகளால், ஏலியன்கள் எனும் கருத்தை விதைப்பதாக நீங்கள் நினைக்கலாம். அப்படியில்லை. அந்த மனிதனுக்கு, ஆராய்ச்சியாளர்கள் வைத்த பெயரே, 'விண்வெளி வீரன்' (The Astronaut) என்பதுதான்.

மலையடிவாரத்தில் அமைக்கப்பட்ட நாஸ்கா வரைவுகள், மனிதன் பார்ப்பதற்காக வரையப்படவேயில்லை. அந்த வெப்பம் தகிக்கும் மலையுச்சியில் மனிதனுக்கு வேலையே கிடையாது. அதைப் பார்ப்பதற்கான உயரம்கூட அருகில் இல்லை. மலைகள் தொலைவில் காணப்படுகின்றன. மரங்களும் அங்கில்லை. கடவுள் அல்லது வானில் பறந்து வரக்கூடிய யாரோ ஒருவரால் மட்டுமே அவற்றைப் பார்க்க முடியும்.

அங்கு வரையப்பட்டிருக்கும் பெரும்பாலான உயிரினங்கள், அந்தப் பிரதேசத்திலேயே இல்லாதவை. மழைப் பிரதேசங்களில் மட்டுமே வாழக்கூடியவை. அந்த உயிரினங்களை எங்கு கண்டிருப்பார்கள்? சில உயிரினங்களை விநோதமான முறையிலும் வரைந்திருக்கிறார்கள். அவற்றில் முக்கியமாகக் கவனிக்கப்பட வேண்டியது, ஒருசில விலங்குகளுக்கு ஒரு கையில் நான்கு விரல்களும், மறு கையில் ஐந்து விரல்களுமாக வரையப் பட்டிருக்கின்றன. அவை தற்செயலாக நடந்தவையா அல்லது ஏதேனுமொரு காரணத்தை முன்னிட்டு வரையப்பட்டவையா... தெரியவில்லை.

நவீன ஆராய்ச்சியாளர்களின் தேடல்கள் நின்றுவிடவில்லை. ட்ரோன்களை, நாஸ்கா வரைவுகளைச் சுற்றியிருக்கும், யாருமே ஏறியிருக்க முடியாத மலைத் தொடர்கள் நோக்கி அனுப்பிப் படமெடுத்தார்கள். அதைப் பார்த்தவர்கள் அதிர்ந்தே போய்விட்டார்கள். மலைகளெங்கும், சிறியவை, பெரியவையென்று மேலும் பல உருவங்கள் வரையப்பட்டிருக்கின்றன. ஓரடி நீளம் கொண்ட சிறிய வரைவுகள் கூட அங்கே காணப்படுகின்றன. மேலும் வரைவுகள் கண்டுபிடிக்கப்பட்டுக் கொண்டேயிருக்கின்றன. நாஸ்கா மக்கள் மலைகளெங்கும் சித்திரங்கள் வரைவதிலேயே தங்கள் காலத்தை நகர்த்தியிருக்கிறார்கள் என்றே சிந்திக்க வைக்கிறது. ஆனாலும் யாருக்காக, எதற்காக அப்பிரமாண்ட வரைவுகளை உருவாக்கினார்கள் என்பது தெரியவில்லை. அப்படி இருக்கலாம் அல்லது இப்படி இருக்கலாம் என்னும் சந்தேகங்களை மட்டுமே வெளிப்படுத்துகிறார்கள். ஆனால், உண்மை மட்டும் எங்கேயோ ரகசியமாக ஒளிந்திருக்கிறது!

## காலத்தால் அழியாத கானங்கள்

திரைப்படம் : அன்னை
இயற்றியவர் : கண்ணதாசன்
இசை : ஆர்.சுதர்சனம்
பாடியவர் : ஜே.பி.சந்திரபாபு



புத்தியுள்ள மனிதரெல்லாம்
வெற்றி காண்பதில்லை
வெற்றி பெற்ற மனிதரெல்லாம்
புத்திசாலியில்லை புத்திசாலியில்லை
புத்தியுள்ள மனிதரெல்லாம்

பணமிருக்கும் மனிதரிடம்
மனமிருப்பதில்லை
மனமிருக்கும் மனிதரிடம்
பணமிருப்பதில்லை
பணம் படைத்த வீட்டினிலே
வந்ததெல்லாம் சொந்தம்
பணமில்லாத மனிதருக்கு
சொந்தமெல்லாம் துன்பம்
புத்தியுள்ள மனிதரெல்லாம்

பருவம் வந்த அனைவருமே
காதல் கொள்வதில்லை
காதல் கொண்ட அனைவருமே
மணம் முடிப்பதில்லை
மணம் முடித்த அனைவருமே
சேர்ந்து வாழ்வதில்லை
சேர்ந்து வாழும் அனைவருமே
சேர்ந்து போவதில்லை
புத்தியுள்ள மனிதரெல்லாம்

கனவு காணும் மனிதனுக்கு
நினைப்பதெல்லாம் கனவு
அவன் காணுகின்ற கனவினிலே
வருவதெல்லாம் உறவு
அவன் கனவில் அவள் வருவாள்
அவனை பார்த்து சிரிப்பாள்
அவள் மனதில் யார் வருவார்
யாரை பார்த்து அழைப்பாள்?

புத்தியுள்ள மனிதரெல்லாம்
வெற்றி காண்பதில்லை
வெற்றி பெற்ற மனிதரெல்லாம்
புத்திசாலியில்லை புத்திசாலியில்லை

# இயற்கையுடன் இசைவோம்

இன்றைய உலகில் இயற்கையைப் பேணாமல் விட்டதன் காரணமாகவே பல பிரச்சினைகள் ஏற்படுகின்றன. அவற்றில் குறிப்பாக தொற்று நோய்கள், தொற்றா நோய்கள் மற்றும் சூழல் பிரச்சினைகள் போன்றவை பிரதான இடம் வகிக்கின்றன.

பழங்கால மனிதர்கள் இயற்கையோடு இணைந்து வாழ்ந்ததனால் ஆரோக்கியமாகவும் சந்தோசமாகவும் வாழ்ந்தனர். ஆனால் இன்றைய காலத்தில் இயற்கையான நல்ல, ஆரோக்கியமான உணவுகளிற்குப் பதிலாக துரித உணவுகளை (Fast Foods) விரும்பி உட்கொள்கின்றனர்.

இதன் காரணமாக பல்வேறு நோய்கள் ஏற்படுகின்றன. சாணகம் கிருமிகளை அழிப்பதற்கு பயன்படும் ஒரு விலங்குக் கழிவாகும். அன்றைய காலங்களில் மக்கள் சாணகம் மெழுகிய குடிசை வீட்டிலே வாழ்ந்தனர். அதனால் அவர்கள் ஆரோக்கியமாக இருந்தனர்.

ஆனால் இன்று கொங்கிறீற்றினால் பல மாடிகள் அமைத்து அதில் வாழ்கின்றனர் பல மக்கள். பல மாடிகள் கொண்ட வீடுகளை அமைப்பதனால் நிலப்பகுதி பாதிப்படைகின்றது.

உயிரினங்களும் இயற்கையும் ஒன்றித்து வாழ வேண்டும் என்பதற்காகத்தான் இறைவன் இயற்கையை படைத்துள்ளார். ஆனால் இன்று இயற்கைக்குப் பதிலாக மனிதர்கள் செயற்கைக்கே முக்கியத்துவம் கொடுக்கின்றான்.

நாம் இயற்கையானவர்கள். ஆனால் இன்றைய காலத்தில் நம்மில் பலர் முக்கியத்துவம் கொடுப்பது செயற்கைக்கே. நமது முன்னோர்கள் அன்று தாவர இலைகளில் உணவு உட்கொண்டனர். மண் சட்டியில் உணவு சமைத்தனர். ஆனால் இன்று பலர் பிளாஸ்ரிக், சில்வர் பாத்திரங்களில் உணவு உட்கொள்வதுடன் அலுமினிய சட்டியில் உணவு சமைக்கின்றோம்.

இத்தகைய பொருட்களின் பாவனையினால் புற்று நோய்கள் உண்டாகக்கூடிய வாய்ப்புக்கள் உள்ளன. அதுமட்டுமல்ல பிளாஸ்ரிக்கில் வைரஸ் நுண்ணங்கியானது சில நாட்கள் வரையில் தங்கியிருக்கும். இது ஒரு உறுதிப்படுத்தப்பட்ட விடயமாகும்.

உலகின் நுரையீரல் எனப்படும் அமேசான் காட்டில் ஏற்பட்ட தீ விபத்தினால் பல அரிய வகையான விலங்குகள், தாவரங்கள் அழிவடைந்துள்ளன. இதனால் இயற்கைக்கு பாரிய அழிவு ஏற்பட்டுள்ளது.

நாம் சுவாசிப்பதற்கு எமக்கு நல்ல சுத்தமான



வளி அவசியம். அதற்கு நாம் மரங்கள் நாட்ட வேண்டும். இதனால் சுவாசிப்பதற்கு வளி கிடைப்பதுடன் மழை வீழ்ச்சியும் சூழலுக்கு குளிர்மையும் கிடைக்கும்.

இந்திய நாட்டின் முன்னாள் ஜனாதிபதியும் விஞ்ஞானியுமான அப்துல் கலாம் சொல்லியிருக்கின்றார்... "கிளி வளர்த்தேன் பறந்து விட்டது, அணில் வளர்த்தேன் ஓடிவிட்டது, மரம் வளர்த்தேன் இரண்டுமே திரும்ப வந்து விட்டன" என்று.

இந்தியாவிலே காட்டு விலங்கினமான ஒரு வகையான அரிய புலி இனங்கள் அதிகளவில் காணப்பட்டன. அது பின்னர் வேட்டையாடப்பட்டு அந்த இனமே அழிவடையும் நிலைக்குச் சென்றுவிட்டது. பின்னர் அந்நாட்டு அரசாங்கம் அந்தப் புலி இனங்களை வேட்டையாடுவதை தடை செய்தது.

தற்போது அந்த இனத்தை சேர்ந்த புலிகள் அதிகளவில் காணப்படுகின்றன. இதன் மூலம் நாம் தெரிந்து கொள்ள வேண்டியது யாதெனில் நாம் இயற்கைக்கு தீங்கு விளைவித்தால் அதனை வளப்படுத்தும் பொறுப்பும் நம்மிடம் தான் வந்து சேரும்.

இதிலிருந்தே தெரிகின்றது இயற்கையை பேணுவதனால் நமக்கு எவ்வளவு நன்மைகள் கிடைக்கின்றன என்று. இன்று கடல், குளங்களினுள் பொலித்தீன், பிளாஸ்ரிக் போன்ற சூழலுக்கு ஒவ்வாத பொருட்கள் கொட்டப்படுகின்றன. இதனால் கடலில் வாழும் உயிரினங்களுக்கு பெரும் பாதிப்பு ஏற்படுகின்றது.

இயற்கையை நாம் பேணாமல் அழிப்பது நம்மை நாமே அழித்துக் கொள்வதற்கு சமமானதாகும்.

ஏனென்றால் அந்தளவிற்கு நாம் ஆரோக்கியமாக உயிர் வாழ்வதற்கு இயற்கை அவசியமானதாகும். அபிவிருத்தி, மனித தேவைகள் என்னும் பெயரில் இன்று பசுமையான இடங்கள் அழித்து வரப்படுகின்றன.

இயற்கையைப் பேணி அதனுடன் ஒன்றுபட்டு வாழ்ந்தால் நாம் கொடிய நோய்களுக்கும் பிரச்சினைகளுக்கும் முகங்கொடுக்க வேண்டிய அவசியம் இல்லை. இயற்கையை பேணுவதனால் சிறந்த உடல், உள, சூழல் வளர்ச்சியும் ஆரோக்கியமும் ஏற்படுகின்றது.

இயற்கையை பேணாமையினாலும் இயற்கைக்கு தீங்கு விளைவிப்பதனாலுமே நாம் துன்பங்களை அனுபவிக்கின்றோம். இயற்கையை பேணிப் பாதுகாத்து அதனுடன் ஒன்றுபட்டு வாழ்வது மனிதர்களாகிய எம்முடைய கடமை.

எனவே அதனை சரிவரச் செய்து நாம் நல் ஆரோக்கியமான, மகிழ்ச்சியான வாழ்வை வாழ்வோமாக.

**சி.விநோஜிதன்**
**அல்வாய் வடமேற்கு.**

## ஒரு நாளில் ஈஸ்வரன் செய்த வசூல்




சுசீந்திரன் இயக்கத்தில் சிம்பு, நிதி அகர்வால் நடித்துள்ள 'ஈஸ்வரன்' படத்தின் முதல் நாள் வசூல் நிலவரம் வெளியாகி உள்ளது. சிம்பு நடித்துள்ள ஈஸ்வரன் படம் பொங்கல் பண்டிகையையொட்டி வெளியானது. இதில் நிதி அகர்வால், நந்திதா ஸ்வேதா, இயக்குநர் பாரதிராஜா ஆகியோர் நடித்துள்ளனர். இந்தப் படத்தை சுசீந்திரன் இயக்கியுள்ளார். ஏற்கனவே சில சர்ச்சைகளில் சிக்கிய இந்த படம், அதையெல்லாம் கடந்து பொங்கலுக்கு வெளியானது.இந்த படத்துக்கு சிம்பு ரசிகர்கள் நல்ல வரவேற்பு கொடுத்துள்ளனர். மேலும் இந்த படத்துக்கு கலவையான விமர்சனங்களும் கிடைத்துள்ளன. தமிழ், தெலுங்கு, மலையாளம், கன்னடம், இந்தி ஆகிய மொழிகளில் ஈஸ்வரன் படம் ஒரே நேரத்தில் வெளியிடப்பட்டுள்ளது. ஈஸ்வரன் படம் வெளியான முதல் நாளிலேயே உலகம் முழுவதும் ரூ.5 கோடி முதல் ரூ.7 கோடி வரை வசூல் செய்து சாதனை படைத்துள்ளது. சென்னையில் முதல் நாளில் மட்டும் ரூபா20 லட்சம் வசூல் கிடைத்துள்ளது.

## மீண்டும் இணையும் மாஸ்டர் கூட்டணி



மாஸ்டர் படத்தில் இணைந்து பணியாற்றிய விஜய் - லோகேஷ் கனகராஜ் கூட்டணி, மீண்டும் இணைய உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது.லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள படம் மாஸ்டர். ரிலீசான 2 நாட்களிலேயே இப்படம் நல்ல வரவேற்பை பெற்று வருகிறது. இதையடுத்து விஜய் நடிக்க உள்ள 'தளபதி 65' படத்தை நெல்சன் இயக்க உள்ளார். அனிருத் இசையமைக்க உள்ள இப்படத்தின் படப்பிடிப்பு விரைவில் தொடங்க உள்ளது. இப்படத்தை இந்தாண்டு தீபாவளி பண்டிகையை அன்று ரிலீஸ் செய்ய உள்ளனர். இந்நிலையில், விஜயின் 66-வது படத்தை மாஸ்டர் பட இயக்குநர் லோகேஷ் கனகராஜ் இயக்க உள்ளதாக கூறப்படுகிறது. மேலும் இப்படத்தை மாஸ்டர் படத்தின் இணை தயாரிப்பாளர் லலீத் தயாரிக்க உள்ளதாக தகவல் வெளியாகி உள்ளது. லோகேஷ் கனகராஜ் உடன் நடிகர் விஜய் மீண்டும் கூட்டணி அமைக்க இருப்பது அவரது ரசிகர்களிடம் மகிழ்ச்சியை ஏற்படுத்தியுள்ளது.



### பொங்கலுக்கு லொஸ்லியா வெளியிட்ட புகைப்படம்

தனது தந்தையின் இறப்பிற்கு பின்னர் லொஸ்லியா தனது இன்ஸ்டாகிராம் பக்கத்தில் புகைப்படம் ஒன்றை பதிவிட்டுள்ளார். தற்போது பொங்கல் தினத்திற்கு கொண்டாட்டம் எதுவும் இல்லாமல் முன்பு எடுத்த புகைப்படத்தினை பதிவிட்டு, யார் என்ன சொன்னாலும், உங்களை நம்புவதை விட்டுவிடாதீர்கள் என்று கருத்து கூறியுள்ளார். இந்தப் பதிவிற்கு லொஸ்லியாவின் ரசிகர்கள் லைக்ஸை குவித்து வருகின்றனர்.


## மாஸ்டர் படக் குழுவினருடன் பொங்கல் கொண்டாடிய - விஜய்

நடிகர் விஜய் பாரம்பரிய உடையணிந்து மாஸ்டர் படக்குழுவினருடன் பொங்கல் பண்டிகையை கொண்டாடிய வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.லோகேஷ் கனகராஜ் இயக்கத்தில் விஜய் நடித்துள்ள படம் மாஸ்டர். கடந்தாண்டு ஏப்ரல் மாதமே ரிலீசாக வேண்டிய இப்படம், கொரோனா லொக்டவுன் காரணமாக தள்ளிப் போனது. சுமார் 9 மாதங்களுக்கு பின் தற்போது பொங்கலை முன்னிட்டு இப்படம் நேற்று முன்தினம் வெளியானது. ரசிகர்களிடையே நல்ல வரவேற்பை பெற்று வரும் இப்படம் வசூலையும் குவித்து வருகிறது. இந்நிலையில், பொங்கல் வாழ்த்து தெரிவித்து மாஸ்டர் படக்குழு வீடியோ ஒன்றை வெளியிட்டுள்ளது. கடந்தாண்டு மாஸ்டர் படப்பிடிப்பு தளத்தில் படக்குழுவினருடன் விஜய் உற்சாகமாக பொங்கல் கொண்டாடிய வீடியோவை தற்போது வெளியிட்டுள்ளனர். இதில் நடிகர் விஜய் வேட்டி சட்டை அணிந்தபடி கலந்துகொண்டார். இந்த வீடியோ சமூக வலைத்தளங்களில் வைரலாகி வருகிறது.





## அர்னால்ட் போல் மாறிய குக் வித கோமாளி - புகழ்

விஜய் தொலைக்காட்சியில் ஒளிபரப்பாகி வரும் சிறந்த நிகழ்ச்சியில் ஒன்று தான் குக் வித் கோமாளி.இதில் கோமாளிகளில் ஒருவராக நம்மை மகிழ்ச்சியுடன் வயிறு குலுங்க சிரிக்க வைத்து வருபவர் புகழ். ஆம் கலக்கப்போவது சம்பியன்ஸ், சிரிச்சா போச்சு உள்ளிட்ட நிகழ்ச்சிகள் மூலம் தன்னை அறிமுகப்படுத்தி கொண்டு குக் வித் கோமாளி நிகழ்ச்சியின் மூலம் மக்கள் மனதில் இடம்பிடித்துள்ளார் புகழ்.தற்போது தல அஜித் நடித்து வரும் வலிமை படத்தில் ஒரு முக்கிய கதாபாத்திரத்தில் புகழ் நடித்து வருகிறார், மற்றும் சந்தானம் நடித்து வரும் படத்தில் நகைச்சுவையான கதாபாத்திரத்தில் நடித்து வருகிறாராம் புகழ். இந்நிலையில் அர்னால்டு போல் ஜிம் வெர்க் அவுட் செய்யும் குக் வித் கோமாளி புகழின் ஷொக்கிங் புகைப்படம் ஒன்று வெளியாகியுள்ளது.



# பந்தயக் கார்களின் காதலர்




பார்முலா 1 கார் பந்தயம் என்றதும் நம்நினைவுக்கு வரும் பெயர் மைக் கேல் ஷுமேக்கர். 1994, 1995, 2000, 2001, 2002, 2003, 2004 என 7 ஆண் டுகள் பார்முலா 1 கார் பந்தயத்தில் வெற்றிக் கோப்பையை வசமாக் கியவர் மைக்கேல் ஷுமேக்கர்.

ஜெர்மனியில் உள்ள ஹர்ட்நகரில் 1969 ஆம் ஆண்டு பிறந்த ஷுமேக்கரு க்கு சிறுவயது முதலே கார் பந்தயத்தில் காதலை ஏற்படுத்தியவர்கள் அவரது பெற்றோர். ஷுமேக்கருக்கு 6 வயதாக இருக்கும் போதே, சிறுகுழந்தை களுக்கான கார்ட்டிங் பந்தயத்தில் அவரை பங்கேற்கச் செய்து, அறிமுகப் படுத்தி உள்ளனர்.

அன்று தொடங்கிய கார் காதல், அவரை பல உச்சங்களுக்கு அழைத்துச் சென்றது. பந்தயக்கார்களின் காதலராக இருந்த ஷுமேக்கர், ஒருபோதும் சொகுசுக்கார்களை விரும்பியதில்லை. அவற்றை ஓட்ட அவர் அதிக ஆர்வம் காட்டியதில்லை. மாறாக எளிமையான வகை பியட் கார்களையே அவர் விரும்பினார்.


எந்த அளவுக்கு பணம் சம்பாதிக்கிறோமோ, அந்த அளவுக்கு மற்றவர்களுக் குக் கொடுக்கவும் வேண்டும் என்பதை கொள்கையாக கொண்ட ஷுமேக் கர், ஒருமுறை ஒரே செக்கில் 10 மில்லியன் டொலரை நன்கொடையாகக் கொடுத்தார்.

பொதுவாக பந்தய வீரர்கள் மழைக்காலத்தை விரும்புவதில்லை. இந்த சமயத்தில் கார் பந்தயம் நடந்தால், டயர்கள் வழுக்கிச் சென்று விபத்து ஏற் படுமோ என அவர்கள் பயப்படுவதே இதற்கு காரணம்.

ஆனால் இதற்கெல்லாம் நேர்மாறாக மழைக்காலத்தில் பந்தயத்தில் ஈடுபடுவதை ஷுமேக்கர் விரும்பினார். இப்பந்தயங்களில் வெற்றியும் பெற் றார். அதனால் அவரை 'ரெயின் மாஸ்டர்' என்றும் 'ரெயின்கிங்' என்றும் ரசிகர்கள் செல்லமாக அழைத்தனர்.

ஆபத்தான கார் பந்தயங்களை சுலபமாக கையாண்ட ஷுமேக்கர், 2013 ஆம் ஆண்டு ஆல்ப்ஸ் மலைப்பகுதியில் பனிச்சறுக்கு விளையாடும் போது ஏற்பட்ட விபத்தில் தலையில் அடிபட்டு, கோமா நிலைக்கு சென்றார். பின்னர் அதில் இருந்து அவர் கொஞ்சம் மீண்டாலும் தொடர் சிகிச்சைகள் அளிக்கப்பட்டு வருகின்றன.

# குழந்தைகளின் காதலர்



டென்னிஸ் உலகின் இப்போதைய நம்பர் வன் நட்சத்திரம் நோவாக் ஜோகோவிச். செர்பிய வீரரான இவர், இதுவரை 17 கிராண்ட்ஸ்லாம் போட்டிகளில் சம்பியன் பட்டம் வென்றுள்ளார்.

நம்ம ஊர் டெண்டுல்கர் எப்படி சிறுவயது குழந்தையாக இருந்த போதே கிரிக்கெட் பட் பிடித்தாரோ, அதேபோல் 4 வயதிலேயே டென்னிஸ் ரொக்கெட்டை பிடிக்க தொடங்கி விட்டார் ஜோ கோவிச்.

சிறுவயதில் ஜோ கோவிச்சின் வீட்டைச் சுற்றி பல டென்னிஸ் பயிற்சி மையங்கள் இருந்ததால், அவருக்கு சிறுவயதிலேயே இவ்விளையாட்டின் மீது ஈர்ப்பு ஏற்பட்டுள்ளது.

இதனால் 4 வயதிலேயே ஜோ கோவிச்சுக்கு டென்னிஸ் ரொக்கெட்டை வாங்கி பரிசளித்துள்ளார் அவரது தந்தை. இதன்பிறகு அவரது 6 ஆவது வயதில் ஜெலீனா ஜெனிக் என்ற முன்னாள் டென்னிஸ் நட்சத்திரத்தி டம் பயிற்சி பெற அனுப்பியுள்ளார்.

ஜோ கோவிச்சுக்கு முன்னதாக மோனிகா செலஸுக்கு ஜெலீனா ஜெனிக் பயிற்சி அளித்துள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது. ஜெலீனாவிடம் 6 ஆண்டுகள் பயிற்சி பெற்ற ஜோ கோவிச், அதன்பிறகு ஜூனியர் டென் னிஸ் போட்டிகளிலும் பின்னர் மூத்தவர்களுக்கான டென்னிஸ் போட் டிகளிலும் வெற்றிகளைக் குவித்துள்ளார்.

டென்னிஸைப் போலவே, பல மொழிகளைப் பேசுவதிலும் ஜோ கோவிச வல்லவர். தனது தாய்மொழியான செர்பியன் மொழியைப் போலவே, ஆங்கிலம், பிரெஞ்ச், ஜெர்மன் மற்றும் இத்தாலிய மொழிகளையும் ஜோ கோவிச் நன்றாகப் பேசுவார்.

டென்னிஸ் விளையாட்டில் ஜோ கோவிச்சுக்கு பல ரசிகர்கள் இருந்தா லும் அவருக்கு பிடித்த டென்னிஸ் வீரர் பீட்சாம்ப்ராஸ்.

டென்னிஸ் விளையாட்டுக்கு அடுத்த படியாக ஜோ கோவிச்சுக்கு அதி கம் பிடித்த விடயம் குழந்தைகள்.

2007 ஆம் ஆண்டில் தொடங்கிய 'நோவாக் ஜோ கோவிச் அறக்கட் டளை' என்ற அமைப்பின் பெயரில், போரினால் பெற்றோரை இழந்த குழந்தைகளுக்கு பல்வேறு உதவிகளை அவர் செய்து வரு கிறார். ஒருமுறை டென்னிஸ் போட்டியில் வென்ற போது தனக்கு கிடைத்த மொத்த பரிசுப்பணத்தையும் அவர்களின் நலனுக்காக நன்கொடையாகக் கொடுத்தார்.

# ஒற்றைக்காலில் நிற்கும் நடுவர்



விளையாட்டு வீரர்களுக்கு இணையாக நடுவர்களாலும் ரசிகர்களைக் கவர முடியும் என்பதை நிரூபித்தவரான கிரிக்கெட் நடுவர் டேவிட் ஷெப் பேர்ட் கிரிக்கெட் போட்டிகளின் போது பட்ஸ்மன்கள் பவுண்டரி அடித்தால், விரல்களால் நாட்டியமாடியவாறு கைகளை அசைக்கும் ஷெப் பேர்டின் பாணியை கிரிக்கெட் ரசிகர்களால் அவ்வளவு சீக்கிரத்தில் மறக்க முடியாது.

1940 ஆம் ஆண்டு இங்கிலாந்தில் உள்ள டெவோன் எனும் ஊரில் பிறந்த டேவிட் ஷெப்பேர்ட், 1983ஆம் ஆண்டு முதல் 2003 ஆம் ஆண்டு வரை சர்வதேச கிரிக்கெட் போட்டிகளில் நடுவராக இருந்துள்ளார். இதில் 6 உலகக்கோப்பை தொடர்களும் அடங்கும். தனது கால கட்டத்தில் நூற்றுக்கணக்கான போட்டிகளில் நடுவராக இருந்துள்ள டேவிட் ஷெப்பேர்ட், தவறான முறையில் அவுட் கொடுத்ததாக எந்த வீரரும் புகார் கூறியதில்லை. அந்த அளவுக்கு துல்லியமான முடிவுகளை அவர் மைதானத்தில் எடுத்துள்ளார். பட்டிங் செய்யும் அணிகள் 111, 222, 333, 444 என்று ஒரே எண் கொண்ட ரன் களை எடுக்கும் போதெல்லாம் ஒற்றைக் காலில் மைதான த்தில் நிற்பது இவரது மற்றொரு பாணி. இதுபற்றி கேட்ட போது அந்த எண்கள் அதிர்ஷ்ட மில்லாதவை என்று கருதியதால், தான் அவ்வாறு நின்றதாக கூறியுள்ளார்.

# ஆர்ட்டமிஸ் ஆலயம் துருக்கி (கி.மு.323)

(10.01.2021 திகதிய தொடர்ச்சி)

கி.பி.401 ஆம் ஆண்டில் அந்த ஆலயத்தை சிறிய மதவெறி கும்பல் ஒன்று ஆக்கிரமித்துச் சிதைத்தது. எஞ்சிய பாகங்கள் பின்னர் இயற்கை சீற்றம் காரணமாக அழிந்துவிட்டன.

அதற்குப்பிறகு ஆர்ட்டமிஸ் தெய்வத்தை வணங்குகிற மக்கள் குறைந்துவிட்டதால் அந்த ஆலயத்தை மறுசீரமைக்க யாரும் நினைக்கவில்லை.

வரலாற்றில் திரும்பத் திரும்ப அழிக்கப்பட்டு மீண்டும் கட்டப்பட்ட ஆலயம் என்ற பெயரும் அந்த ஆலயத்துக்கு ஏற்பட்டுவிட்டது.

கி.பி.1869 இல் பிரிட்டிஷ் அருங்காட்சியகத்தைச் சார்ந்த ஜான் டைட்டில் வுட் தலைமையிலான குழு ஒன்று ஆய்வில் இறங்கி பல்வேறு பொருட்களைத் தோண்டி எடுத்தது.

கி.பி.1904 ஆம் ஆண்டில் ஆங்கிலேய ஆராய்ச்சியாளர் டி.ஜி.ஹோக்ரத்தின் பல ஆண்டு அகழ்வாராய்ச்சிக்குப் பிறகு ஒரே இடத்தில் கட்டப்பட்ட ஐந்து ஆர்ட்டமிஸ் ஆலயத்தின் சில பகுதிகள் கிடைத்தன.

இன்று சதுப்பு நிலமாய் காட்சியளிக்கும் அந்த இடத்தில் ஒரே ஒரு தூண் மட்டும் ஆர்ட்டமிஸ் ஆலயத்தின் சாட்சியாக நின்று கொண்டு இருக்கிறது.

எவ்வித நவீன கருவிகளின் உதவியும் இன்றி வெறும் மனித உழைப்பின் மூலம் மட்டுமே உருவான பல அற்புதக் கலை வடிவங்கள் உலகெங்கும் அந்தக் காலகட்டத்தில் பிரம்மிப்பூட்டும் பேரழகுடன் திகழ்ந்திருக்கின்றன.

இயற்கைச் சீற்றங்கள் காரணமாக அவற்றில் பல அழிந்து போயிருக்கலாம்.

ஆனால் மனிதர்களின் அதிகார மமதை காரணமாக எத்தனையோ கலைச்செல்வங்கள் நம் கைவிட்டுப் போயிருக்கின்றன.

அவற்றில் அழியாப் புகழ் பெற்றது ஆர்ட்டமிஸ் ஆலயம்.

கண்ணெதிரே அது தோன்றாவிட்டாலும் வரலாற்றின் பக்கங்களில் அது இன்னமும் தனித்தன்மையுடன் காட்சியளிக்கிறது.

(முற்றும்)



## கனவில் நடந்த கட்டுமானப்பணி

கி.மு.323 இல் ஆர்ட்டமிஸ் ஆலயம் கட்டுவதற்காக குறிப்பிட்ட சில தூண்களை அதனுடைய இடத்தில் நகர்த்த முடியாமல் கட்டடப் பணியிலிருந்த கூலியாட்கள் துவண்டு போய்விட்டனராம்.

அவர்கள் ஆர்ட்டமிஸ் தெய்வத்திடம் எப்படியாவது அந்த தூண்களை அங்கே பொருத்த உதவும்படி இறைஞ்சினராம்.

அன்றிரவு அவர்கள் தூங்கிய போது அவர்களின் கனவில் தூண்கள் தானாக் நகர்ந்து அதற்குரிய இடத்தில் நிற்பது போல் காட்சி வந்ததாம். விடிந்த பிறகு அவர்கள் கனவில் கண்ட இடத்தில் தூண்கள் நிற்பதை பார்த்து பிரமித்ததாக ஆலயத்தைப்பற்றிய நாட்டுப்புறக்கதை ஒன்று உண்டு.

## facebook (f) ஃபேஸ்புக் பார்த்ததில் பிடித்தவை... Like 2208

### தர்சி

அதிக ஆசை இல்லாதவர்கள் மட்டும் தான், அதிக சந்தோசத்துடன் வாழ்கிறார்கள்.



### பிரவீன்



நீங்கள் விரும்புவது ஒருவேளை உங்களுக்கு கிடைக்காமல் போகலாம். ஆனால் உங்களுக்குத் தகுதியானது கண்டிப்பாக கிடைத்தே தீரும்...!

### சுகஸ்திகா

“நம்பிக்கை”னு விளம்பரத்துல வருவதெல்லாம் பெரிய விடயம் இல்லைங்க!



உண்மையான “நம்பிக்கை” இதுதான்!

### சுதர்சன்

மற்றவர்களிடம் இருப்பவை எல்லாம் நம்மிடம் இருக்கின்றனவா என்று பார்க்கின்றோமே தவிர...



நம்மிடம் இருப்பவை எத்தனை பேரிடம் இல்லை என்பதை பார்க்கத் தவறி விடுகின்றோம்...!

### சனா

இங்க பாருடி...பொறுப்பா வீட்டு வேலையெல்லாம் பாக்குறான்...கட்டுனா 90ஸ் கிட்ஸ் அ தான்டி கட்டனும்.



நானே எங்க வீட்டுல தண்ணி புடிச்சிட்டு வந்தா தான் சோறு போடுவேன்னு சொல்லிட்டாங்கன்னு போய்ட்டு இருக்கேன்...இவளுங்க வேற...

### குட்டி



ஒவ்வொரு அனுபவத்தின் முடிவிலிருந்தும் ஒரு நல்ல பாடத்தை கற்றுக்கொள்வோம்... அதுவே நாம் வாழ்க்கையில் வெற்றியடைய உதவும்...!

நீங்கள் பார்த்த பேஸ்புக்கில் உங்களுக்குப் பிடித்தவை இருந்தால் www.facebook.com/valampurii எனும் தளத்தில் பதிவு செய்யுங்கள். அவை உங்கள் பெயர்களுடன் facebook பார்த்ததில் பிடித்தவை பகுதியில் பிரசுரமாகும்.

யாழ். மருத்துவக் குழுவினர் தொகுத்து வழங்கும்

# சுகமான விடியல்

வலம்புரியின் மருத்துவச்சுடர் 238

## கொரோனாத் தடுப்பூசியின் வரவு தொடுத்துள்ள வினாக்கள்

**கொவிட் - 19 என்றால் என்ன ?**

கடந்த வருடத்தின் இறுதியில் சீனாவில் அடையாளங்காணப்பட்ட SARS - COV -2 என்ற வைரஸ் தொற்றால் ஏற்படுகின்ற நோய் நிலைமையாகும்.

COVID - 19/ கொவிட் - 19 என்ற சொல் " Corona virus disease 2019" என்ற ஆங்கில சொற்றொடரின் சில முதல் எழுத்துக்களைக் கொண்டு ஆக்கப்பட்டது.

**தடுப்பூசிகள் எவ்வாறு வேலை செய்கின்றன?**

இதை விளங்கிக்கொள்ள தொற்று நோயொன்று ஏற்படும் போது எம் உடலில் என்ன நடக்கிறது என்பதை புரிந்து கொள்ளல் உதவியாய் இருக்கும்.

எமக்குத் தெரியும், தொற்று நோய்கள், வைரஸ் அல்லது பக்றீரியா (Bacteria) போன்ற கண்ணுக்குத் தெரியாத நுண்ணுயிரிகள் எமதுடலை தாக்குவதால் ஏற்படுகின்றன. தொற்றியபின் கிருமிகள் எமதுடலில் பல்கிப் பெருகுகின்றன. இது நோய்க்குரிய குணங்குறிகளை ஏற்படுத்துவதோடு எமது நோய் எதிர்க்கும் தொகுதிக்குரிய கலங்களையும் தூண்டுகின்றன. தூண்டப்படும் நோய் எதிர்க்கும் தொகுதி பல்வேறு பொறிமுறைகளூடாக நோய்க்கிருமிகளை உடலில் இருந்து அகற்றப் போராடுகின்றது.

தடுப்பூசிகள் வீரியம் குறைக்கப்பட்ட நோய்க்கிருமிகளை அல்லது இறந்த கிருமிகளை அல்லது கிருமிகளின் பாகங்களை கொண்டுதயாரிக்கப்படுகின்றன. இவற்றை உடலில் செலுத்துவதன் மூலம் நோய்எதிர்க்கும் தொகுதி தூண்டப்படுகிறது. எதிர்காலத்தில் தொற்று ஏற்படும் சந்தர்ப்பங்களில், நோய் எதிர்ப்புப் பொறிமுறை தயார் நிலையில் இருப்பதால் குறித்த கிருமிகள் உடலில் பல்கிப்பெருகும் நிலையும் அதனூடாக நோய் ஏற்படுத்தப்படும் நிலையும் தடுக்கப்படுகிறது.

**கொவிட் -19 தடுப்பூசி எவ்வாறு வேலை செய்கிறது?**

இத் தடுப்பூசி பல்வேறு முறைகளில் தயாரிக்கப்படுகிறது.

தற்போது ஐக்கிய அமெரிக்காவில் பாவனைக்கு விடப்பட்டுள்ள இரண்டு தடுப்பூசிகளும் கொரோனா வைரஸின் மரபணுக்களைக் கொண்டிருக்கின்றன. இந்த மரபணுக்கள் தடுப்பூசியைப் பெற்றவரின் உடலில் வைரஸின் வெளிச்சுவரில் உள்ள சில பாகங்களைத் தோற்றுவிக்கும். இந்த பாகங்களினால் நோய் எதிர்ப்புத் தொகுதி தூண்டப்பட்டு வைரஸிற்கான பிறபொருளெதிரிகள் உருவாக்கப்படுகின்றன. இந்தப் பிற பொருளெதிரிகள் வைரஸ் தொற்று ஏற்படும் போது வைரஸைத் தாக்க தயார் நிலையில் இருக்கும்.

கொவிட் - 19 தடுப்பூசி நோயை ஏற்படுத்தவல்ல வீரியமிக்க வைரஸைக் கொண்டிருப்பதில்லை. எனவே தடுப்பூசி எடுப்பதானால் கொவிட் -19 ஏற்படமாட்டாது. அத்துடன் செலுத்தப்படும் வைரஸின் மரபணுக்கள் உடலில் வைரஸ்களைத் தோற்றுவிப்பதில்லை.

**கொவிட்-19 தடுப்பூசி எவ்வாறு கொடுக்கப்படும் ?**

இதுதசையில் போடப்படும் ஊசியாகும். புயத்தசையில் கொடுக்கப்படும். வலதுகைப்புயமா, இடதுகைப்புயமா என நீங்களே தீர் மானிக்கலாம். உங்கள் கைப்பழக்கத்தைக் கொண்டு, பொதுவாகப் பாவிக்கும் கையைத் தவிர்ப்பது நல்லது. இரண்டு தரம் இந்த ஊசியைப் போட்டுக் கொள்ளவேண்டியது கட்டாயமாகும். இரண்டு ஊசிகளுக்கு மிடையிலான கால இடைவெளி போடப்படும் ஊசி வகைக்கேற்ப மாறுபடும். உங்களுக்கு ஊசியை வழங்குபவர் இரண்டாவது ஊசியை எப்போது ஏற்ற வேண்டும் என அறிவுறுத்துவார்.

பொதுவாக மூன்று அல்லது நான்கு வாரங்களின் பின் இரண்டாவது ஊசி போடப்படும்.

**கொவிட்-19 தடுப்பூசி பக்கவிளைவுகளை ஏற்படுத்துமா?**

ஆம், முதலாவது ஊசியை விட இரண்டாவது ஊசி சற்றுக்கூடிய பக்கவிளைவுகளைக் கொடுக்கும்.

**கொவிட் - 19 தடுப்பூசியின் பக்கவிளைவுகள் என்ன?**

- ஊசி போடப்பட்ட இடத்தில் ஏற்படும் வலி, வீக்கம், ஊசி போடப்பட்ட இடம் கட்டிபட்டது போல் தோன்றுதல், அழற்சியால் தோல் சிவப்படைதல், ஊசி போடப்பட்ட கையில் நிணநீர்க்கணுக்கள் வீக்கமடைதல்.
- காய்ச்சல்.
- நடுக்கம்
- உடல் உளைவு அல்லது சோர்வு.
- தசைகளில் வலி
- மூட்டு நோ
- வயிற்றுப்பிரட்டல், வாந்தி
- தலையிடி

இந்தக் குணங்குறிகள் இரண்டு அல்லது மூன்று நாட்களுக்கு நீடிக்கலாம்.

இந்த பக்கவிளைவுகள் நோய்க்கான குணங்குறிகள் அல்ல.

மாறாக எமது நோய் எதிர்க்கும் தொகுதி தடுப்பூசியிலுள்ள வைரஸின் பாகங்களுக்கெதிராகத் தொழிற்படுவதாலேயே இக்குணங்குறிகள் ஏற்படுகின்றன.

மிக அரிதாக சிலரில் இத்தடுப்பூசி ஒவ்வாமைத் தாக்கங்களை ஏற்படுத்தலாம். இந்த ஒவ்வாமைத் தாக்கங்கள் ஊசி ஏற்றப்பட்ட சிலநிமிடங்களில் இருந்து ஒருமணி நேரத்திற்குள் ஏற்படலாம். இதை அவதானிப்பதற்கு தடுப்பூசியைப் பெற்றபின் உங்களை நிலையத்தில் சற்று நேரம் தங்கவைக்க நேரிடலாம்.

- சுவாச இடர்பாடு.
- முகம், தொண்டை, நாக்கு, வீங்குதல்
- நெஞ்சுப்படபடப்பு.
- தோல் முழுவதிலும் ஏற்படும்கடி, சொறி.
- தலைச்சுற்று, மயங்கிவிழுதல்.

**இந்தப் பக்கவிளைவுகளுக்கான பரிகாரம் என்ன?**

உங்களுக்கு ஒவ்வாமைக்கான குணங்குறிகள் காணப்பட்டால் அருகிலுள்ள வைத்தியசாலைக்கு உடனடியாகச் செல்ல வேண்டும்.

தசைநோ, மூட்டுவலி, தலையிடி போன்றவற்றிற்கு வலிகுறைக்கும் மாத்திரைகளை எடுக்கலாம்.

குணங்குறிகள் கடுமையாக இருந்தாலோ அல்லது நீண்டநாட்களுக்கு நீடித்தாலோ வைத்திய ஆலோசனையைப் பெற்றுக் கொள்ள வேண்டும்.

**பக்கவிளைவுகளை கொவிட் -19 தொற்றிலிருந்து எவ்வாறு வேறுபடுத்துவது?**

பக்கவிளைவால் ஏற்படும் குணங்குறிகள் 4 தொடக்கம் 5 நாட்களுக்கு மேல் நீடிப்பதில்லை.

காய்ச்சலும் 99 - 101 பாகை பரனையிற்றை (Fahrenheit) விட அதிகரிப்பதில்லை. பக்கவிளைவுகள், காய்ச்சல் அல்லது வலிகுறைக்கும் மருந்துகளால் இலகுவாகக் குணமடையும்.

**தடுப்பூசி எடுப்பதன் மூலம் கொவிட் - 19 ஏற்படுமா?**

இல்லை.

கொவிட் - 19 தடுப்பூசி கொவிட் -19 நோயை ஏற்படுத்தமாட்டாது.

**கொவிட் -19 தடுப்பூசியை ஏன் எடுக்க வேண்டும்?**

கொவிட் -19 தடுப்பூசியை எடுப்பதன் மூலம் கொவிட் - 19 நோய் ஏற்படுவதற்கான சந்தர்ப்பங்கள் குறைக்கப்படுகின்றன.

தடுப்பூசியைப் பெற்ற பின்னும் கொவிட்-19 நோய் ஏற்பட்டாலும் அதன் தீவிரம் குறைவாக இருக்கும்.

அடுத்து சமுதாயத்தில் பலர் இந்தத்தடுப்பூசியைப் பெற்றுக்கொள்வதன் மூலம் கொரோனா வைரஸின் பரவலைக்கட்டுப்படுத்தலாம். இது இயல்பு வாழ்க்கைக்கு அனைவரும் விரைவாகத் திரும்ப உதவும்.

**கொவிட் -19 தடுப்பூசி பாதுகாப்பானதா?**

ஆம்.

கொவிட் - 19 தடுப்பூசி மிக வேகமாகத் தயாரிக்கப்பட்டுப் பாவனைக்கு விடப்பட்டுள்ளது.

இதனால் இது பாதுகாப்பானதா என்ற கேள்வி எழுகிறது. இது பாதுகாப்பானதே.

இந்தத்தடுப்பூசியும் மற்றைய தடுப்பூசிகளைப் போல மூன்று படிநிலைகளில் ஆய்வுக்கு உட்படுத்தப்பட்டே தயாரிக்கப்பட்டுள்ளது. பல இனங்களிலிருந்தும் தன்னார்வலர்களைத் தேர்ந்தெடுத்தே இந்த ஆய்வுகள் நடத்தப்பட்டுள்ளன.

அரசுகள் ஆராய்ச்சிக்காக அதிக நிதியை ஒதுக்கியதும், நவீன தொழில்நுட்பமும், பல தடுப்பூசிகளைத் தயாரித்த முன்னனுபவமும், SARS மற்றும் MERS வைரஸ்களுக்கான தடுப்பூ சிகளுக்காகத் தொடங்கப்பட்ட ஆய்வு களுமே, கொவிட் -19 தடுப்பூசியை இவ்வளவு விரைவாகத் தாயாரித்து பாவனைக்குவிட உதவியாக இருந் துள்ளன.

**கொவிட் - 19 தொற்று ஏற்பட்டிருந்தாலும் தடுப்பூசியைப் பெறவேண்டுமா?**

ஆம்.

கொவிட் - 19 தொற்று ஏற்படும் போது உடலானது வைரஸ்கெதிரான பிறபொருளெதிரிகளைத் தோற்றுவித்தாலும் இவை எவ்வளவு நாட்களுக்கு உடலில் நீடிக்கும் என்பது தெரியாததால் கொவிட் - 19 தொற்று ஏற்பட்டவர்களும் அதற்கான தடுப்பூசியைப் பெற்றுக்கொள்ள வேண்டும் என்றே அறிவுறுத்தப்படுகிறார்கள்.

**எந்த வயதிற்கு மேற்பட்டவர்கள் கொவிட்-19 தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளலாம்?**

இது தடுப்பூசியைத் தயாரித்த நிறுவனத்திற்கேற்ப வேறுபடும். இப்பொழுது அமெரிக்காவில் பாவனைக்கு விடப்பட்ட தடுப்பூசிகளில் ஒன்றை 16 வயதுக்கு மேற்பட்டவர்களும், மற்றையதை 18 வயதிற்கு மேற்பட்டவர்களுமே பெற்றுக்கொள்ள முடியும்.

ஆய்வுக்குட்படுத்தப்பட தன்னார்வலர்கள் இந்த வயதுக்கு மேற்பட்டவர்களாக இருந்ததே இதற்குக் காரணமாகும்.

மேலதிக ஆய்வுகளின் பிற்பாடு சிறுவர்களுக்கும் இந்தத்தடுப்பூசி பரிந்துரைக்கப்படும்.

**கர்ப்பவதிகள் இந்தத்தடுப்பூசியைப் பெற்றுக் கொள்ளலாமா?**

கர்ப்பவதிகளில் இதன் பாதுகாப்புப்பற்றி ஆய்வுகள் தொடர்கின்றன.

**தடுப்பூசியைப் பெற்றுக்கொண்டபின் முகக்கவசம் அணிவதை நிறுத்திக் கொள்ளலாமா?**

இப்போதைக்கு, இல்லை என்பதே பதில்.

தடுப்பூசி 95% தொற்று ஏற்படா மல் தடுக்கிறது என ஆய்வுகள் காட்டினாலும் தொற்று ஏற்பட வாய்ப்புகள் உள்ளது. சமுதாயத் தொற்றைத் தடுப்பதற்கு பெரும்பாலானவர்களுக்குத் தடுப்பூசி வழங்கப்பட வேண்டும். அதுவரை தடுப்பூசியைப் பெற்றபின்னும் முகக்கவசம் அணிவதும், 6 அடியில் சமூக இடை வெளியைப் பேணுவதும், கைகளைக்கழுவி சுகாதாரம் பேணுவதும், முகத்தைத் தொடாது தவிர்ப்பதும் வைரஸ் தொற்றின் வேகத்தைக் குறைக்க அவசியமாகும்.

Dr.சிவாணி பத்மராஜா, USA